உ

முருகக்கடவுள் துணை.

யூகிமாமுனிவராற்செய்யப்பட்ட

# வைத்தியசிந்தாமணி.

S.335

இஃது.

திருமயிலை.

அல்லமாப்பிரபுமடம்குழந்தையானந்தசுவாமிகளது

சிஷியவர்க்கத்துள் ஒருவராகிய

பிட்சைப்பாக்கம்-கணிதாதிய சகலசாஸ்திரபண்டிதர்

**மார்க்கலிங்கநாயனார்**

அவர்களால்

பலபிரதிகளைக்கொண்டு ஒருவாறு பரிசோதிக்கப்பட்டு

புரசபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890

உ

முருகக்கடவுடுணை.

யூகிமாமுனிவரார்செய்யப்பட்ட

S.335

# வைத்தியசிந்தாமணி.

(*)

காப்பு.

விருத்தம்.

ஆனைமுகன்றன்பாத முருகன்பாதம்
அத்தியுரித்திடைதரித்த ஐயர்பாதம்
வானையுமையாள்பாத மாலின்பாதம்
வயிரவன்றன்பாதமஹா லக்ஷ்மிபாதம்
கானனையநாதாக்கள் ரிஷிகள்பாதம்
கமலத்தில்வீற்றிருந்த வாணிபாதம்
கோனனையகுருமுனிதன் பாதம்போற்றிக்
கூறுவேனாயுருவே தத்தைத்தானே.

நூல்.

தானானநால்வேதத் தொப்பாய்நின்ற
தாக்கானவாயுருவே தத்தோடைந்தாம்
தேனானசிருஷ்டிகுலத் துற்பவித்த
தேவனாந்தன்வந்திரி சொன்னநீதி
வானானவாகமத்தை மேதினிக்குள்
மருவியேயுரைத்திடவே வண்மையாக
வேனானவயித்தியசிந்தா மணியிலுள்ள
விபரமெல்லாம்வெளியாகச் சொல்லுவேனே. (௧)

சொல்லிடவேதேவிக்குச் சதாசிவன்றான்
சொல்லவேதேவியு நந்திக்குச்சொல்ல
நல்லிடவேநந்திதன் வந்திரிக்குச்சொல்ல
நயமுடன்றன்வந்திரி யசுவினிக்குச்சொல்ல
அல்லிடவேயசுவனியார் தேவர்தாமும்
அகஸ்தியருக்குரைத்திடவே யம்முனீந்திரன்
புல்லிடவேபுலஸ்தியருக்குபதேசிக்கப்
லஸ்தியருந்தேரையற்குப் புகன்றிட்டாரே. (௨)

புகன்றிட்டார்தேரையனுமுநிவனருளும்-பூதலத்தில் யூகியாமெனக்குச்சொல்ல, உகன்றிட்டயூகியென்றமுநியாம்நானே - உலகத்தோர்பிழைத்திடவென்றுரைக்கலானேன், வகன்றிட்டவடமொழியைபிரித்துப்பார்த்து-மகத்தானபெரியோரைவணங்கிக்கேட்டுத் துகன்றிட்டசூத்திரத்தின்சூக்ஷம்பார்த்துத் துறைபெல்லாஞ்சோதித்துச்சொல்லுவேனே. (௩)

## தத்துவவிதி.

சொல்லியதோர்விபரமெல்லாந்தூய்மைகேளாய்-சூக்ஷமதாம்பஞ்சபூதத்தின்கூறும்,தெல்லியதோர்தசநாடிசத்ததாது- திரிநாடித்தசவாயுசரபேதங்கள், தல்லியதோர்சன்னியொடுகுன்மஞ்சூலைதாக்கானவாதமொடுபித்தஞ்சிலேஷ்மம், மெல்லியதோர்மேகம்நீரிழிவுகுஷ்டம் - மிக்கானபாண்டொடுகாமாலைகேளே. (௪)

கேளுமகோதரங்கிராணிபவுத்ரமூலம் நெடியானவஜீரணங்கள் விசூழிவிக்கல், வேளுமேபலபலவியாதிநாமம்-விளங்குகின்றசாத்தியமுமசாத்தியந்தான், பாளுமேபண்டிதரின்குணமும்ரோகி-பக்குவமும்ரசவர்க்கமூலிவர்க்கம், காளுமேகடைசரக்கின்குணமுந்தானும்- கஷாயமொடுசூரணங்கள்கர்க்கந்தானே. (௫)

கர்க்கமொடுவடகங்கள்ரசாயனங்கள் - கடினமாம்லேகியங்கள்கிருததந்தானும், வர்க்கமொடுதைலங்களெண்ணெய்நெய்தான்- மாத்திரையும்பற்பங்கள் செந்தூரந்தான், புற்பமாம்புடத்தைலந்திராவகங்கள்- புகையோடுபொட்டணமும்பூச்சுநஸ்யம், அற்பமாமஞ்சனங்கள்கெண்டூஷங்கள்-ஆகமாமவிரோசனத்தினடவுமாமே (௬)

அடவானவாயுருவேதந்தன்னைத்தான்ஐயருமேயம்மைதனக்கருளிச்செய்ய, நடவானவமமையுநந்திக்குச்சொல்ல-நந்தியுமேசீஷர்களுக்கருளிச்செய்யத்தடவானதன்வந்திரியசுவிகியாமெனக்கு-சமாசமாமகத்யமுநிதேரையற்குச்சொல்லநிடவ'னரிஷிதேவர்சொன்னநூலின்-நேர்ப்பெல்லாம்விபாமதாய்நிகழ்த்தினேனே. (௭)

## பஞ்சபூதம்

நிகழ்ந்தசீர்ப்பிரிதிவு மப்புதானும- நேரானதேயுவொடு வாய்வுமாகும், அகழ்ந்தவாகாயத்தோடைந்துபூதம் - அரிதானபிரிதிவுமண்ணுமாகும், தகழ்ந்தவப்புசலமாகுநெருப்புந்தேய்வு- தாக்கானவாயுபதுகாற்றுமாகும், இகழ்ந்தவாகாயமதுசததமாகும - ஏற்றபிரிதிவுபொன்னிறமதாமே. (௮)

## பஞ்சபூதத்தின்வர்ன்னம்

ஆமேதானப்புனிறம படிகமாகும்-அக்கினிநிறந்தானே சிவப்பதாகும், காமேதான வாய்வுநிறங்கறுப்பதாகும - கார்மேகப்புகை

நிறமாமாகாயந்தான் தேமேதான்வர்ன்னமுமிப்படியேயாகும், சேர்ந்து நின்றதெய்வத்தினைறலமே கேளாய், போமேதான்பிரிதிவுக்குத்தேவனை பிர்ம்மா-பெரியசுவாதிஷ்டானமிருப்பர்தாமே. (௯)

பஞ்சபூதத்திற்குத் தெய்வத்தலம்.

இருப்பானவீடதுமூலாதாரமாகும்- இதழானுப்ரிதிவின்பீஜம்நவ்வசம், மருப்பானமயிர்நரம்பு தசைதோலெலன்பு-மாசற்றவப்புவிற்கு விஷ்ணுதெய்வம், செருப்பானமணிபூர வீடுமாகும்-சிறுபிறைரூபம்போறபத்திதழ்தான்சுற்றி, அருப்பானவப்பினுக்குப்பீசம்மவ்வாம- அதினகூறைத்தான்கேளு முதிரஞ்சியே. (௰)

சீயானநீரோடுமூளைமச்சைசத்-செய்வுக்குருந்திரன்றான் றெய்வமாகும், மூயானமுக்கோணமகத்தாம வீடுமுயந்சியாயிரானுமிதழ்தான்சுற்றில், தேயானசிவ்வதுவுந்தெய்வுபீசம-சிகையாமவிதழுக்குட் சேர்ந்து நிற்கும், ஆயானவாகாரந்துஞ்சல்போகம் அவருடையகூறதுதான பயமுஞ்சோம்பே. (௰க)

சோம்பானவாயுவுக்குமஹேசன்றெய்வம்- சோடசமாமிதழோடேவிசுத்திவீடு, ஆம்பானவாயுவுக்குவவ்வுபீசம- அவருடையதன்கூறுடத்தனிற்றல், வம்பானவாடலோடிருத்தலோடல்- வசையானவறுகோணக்குடியிருப்புத், தேம்பானவாகாயமாக்கினைக்குள்ளே- சிகையாமவிரண்டிதழோடிருக்கும்பாரே (௰உ)

இருக்கின்றவாக்கினை பின்கூறுகேளாய்- ஏற்றனாமக்குரோதலோபமோகம்மருக்கினறயதமுமாற்சரியதமோடு- வானுக்குச்சதாசிவமேதெய்வமாகும், பிருங்கின்றவாகாசபீசம்யவ்வாம்- பேரானவைமபூதப்பிரிவுமாகும், தெருக்கின்றதசநாடிச்செயலையெல்லாம- செப்புகிறேனதெளிவாகச்சிறந்துகேளே. (௰௩)

தசநாடிகளின்குணம்.

சிறந்தஇடைபிங்கலையுஞ்சுழிமுனையினோடு- சிறப்பானகாந்தாரியத்திச்சிங்குவையாம், பிறந்தஅலம்புருடனொடுகுகுதன்றானும்-பேரானசங்குனியும்வயிரவன்றான் திறந்தவிவைபதந்தான் றசநாடியாகும்-திரிமூன்றுநாளியினிலேயோங்குமபாரு, மறந்தஇடைபிங்கலையு சுழியினையொடுமூன்றும-வாதத்திலொடுக்கமெனவகுக்கலாமே (௰௪)

வகுங்கவிதின் குணங்கண்மந்தமொடுகுளுத்தி- மலக்கட்டுவாதத்தின்கூறுமாகும், அகுக்கமேகாந்தாரியத்திசிங்குவையாம்-அலம்புருடனிதுநானும்பித்தத்தின்கூறு, இருக்கமேபித்தின்குணங்களுஷ்ணந்தாகமுஉயர்மோகமுமிழ்வாய்வும்மேனெங்கும், நருக்கமேவநாடிபடபட[illegible]துடிக்கும-[illegible]யசோமாடுகோபமாமே. (௰௫)

ஆமேதான்குகுதன்சங்குநியும்வயிரவனும்-அரிதான சிலேட்டுமத்திலடங்கும்பாரு,மாமேதானிதின் கூறுவாயுற்றான்பரியும்- மலர்விழியுங்குழிந்திருக்குமுகமும்வேர்க்கும், தேமேனெஞ்சடைக்குந் திசைகளங்கியிருக்கும் சிறுகாலுந்தண்ணீர்தா னுமுற்றிவிக்கும், பாமேதான்பத்தினிடப்பண்புமாகும் பரிகாசஞ்செயுமவர்க்குப்பரிசிதாமே. (௧௬)

பரிசானவிடையினொடு பிங்கலையுமொக்கப் பயின்றதோர்குதத்தினடிமூலம்பற்றிச்-சுறிசானபாகங்கண்மாறிமாறிச்-சுழிமுனையின்றன்னோடுநெட்டிட்டேறும், திரிசான திருவணைக்கல்போலேமாறிச்- சிரசளவுதான்முட்டித்திரும்பமீண்டு, விரிசானமூக்குநடுப்புருவ நெற்றி மீண்டுமேதிரும்பியந்தமூலம்புக்கும். (௧௭)

புக்குகின்றகாந்தாரிநாபிபற்றிப்-பொருநரம்போ சேழினுக்குமுருபமாகிச், சிக்குகின்றதெசதாயமேலேயோடிச்-சிரசளவுநீங்கியேகண்டம்புக்கி, நக்குகின்றநாவடியிற்சிறந்திருக்கும்- நலமானவக்கிசிங்குவையிரம்டும், விக்குகின்றமூலத்தினமேலேபற்றி-மேலேதியிரண்டுசெவிதனைத்தொட்டாமே. (௧௮)

தொட்டேறிநரம்பெல்லாங்கதந்துவீசித்- துறையானநயனமிரண்டினிலேநிற்கும், மட்டேறியலம்புருடன்வயிரவன்றான்-மாசற்றவடிமூலந்தன்னைப்பற்றிக், கட்டேறியிரண்டுகன்னந்தனிலேநிற்கும் - கனிவானசங்குநியுங்குகுதன்றானும். நட்டேறிநாபித்தானத்திற்றோன்றி-நலமானகுதமளவுநடிப்பர்பாரே. (௧௯)

பார்க்கவேசடந்தான்சென்மிக்கும்வாறு-பகர்சுக்லச்சுரோணிதத்தினோடேகூடி, மூர்க்கபவளப்பையின்முத்துதிர்ந்தாற்போல- முனையறுகுநுனிபனிப்போற்சுரோணிதத்திற்சேர்ந்து, தார்க்கச்சுரோணிதந்திரண்டுதன்னுருபமாகித் - தமர்வாசற்றனைமூடும்வாயுதானும், வேர்க்கவேவேலிபைப்போல்வளைந்துகாக்கும்-விந்துவுடன்பிராணவாயுவிளக்குமாமே (௨௰)

விளக்குகின்றவபானவாயு வெளியினிற்கும்-விந்துவுடன்பிராணவாயுவுடல்கலக்கும்களக்குகின்றவுதானனதுகருவளக்கும்கருவுக்குள்வியாதியுமூன்றுங்கலக்கும், இளக்குகின்றவைந்தாநாள்களுப்போலாகும- ஈனைந்தாநாள்தனிலேதிரளும்பாரு, முளக்குமூவைந்தாநாள் முட்டைபோலாம்-முநாற்றிங்களகம்பமாய்முனைபோலாமே. (௨௧)

ஆமேரண்டாந்திங்கடலைமுதுகுதோன்றும்-அடுத்தமூன்றாந்திங்களாவிரல்கைகாலாம், நாமேநாலாந்திங்கள்பதமூக்குண்டாகும்- நலத்து

வைந்தாந்திங்கள்செவிநாவுகண்ணும், வாமேயாறுந்திங்கணகங்களாகும் மருவியவேழாந்திங்கண்மயிரொலும்புநரம்பாம், தாமேதான்சடமோடுசலமலங்கள்-தயங்கியவோர்தாதுவொன்மூச்சுண்டாமே. ௨௨)

மூச்சுண்டாமெட்டினிற்றுயுண்டசார- முனையானகதிர்போலவருவிபாய்ந்து, தோச்சுண்டகபாலத்தின்வழியேசென்று-சுத்தசலம்பிள்ளைக்குத்துடர்ச்சியாகும், பேச்சுண்டாமொன்பதிலேயறிவுதோன்றிப்பிறப்பித்தோன்றனைநினைத்துதவமேசெய்து, கூச்சுண்டாங்கும்பிட்டேயருள்வாயென்றுங்-கொடியபத்தாந்திங்கட்கும்பார்வையாமே. (௨௩)

பார்வையாமபானன்கீழ்நோக்கிவைக்கும்- பாலகனும்பார்தனிலேபயின்றபின்பு, ஆர்வையாய்முன்னறிவுமசதியாகி-அழுதுகொண்டுவாதமத்திற்கருவிபாசம், மார்வையாமாயாசத்திகிரியாசத்தி மயக்கத்திலறிவழிந்துநல்வினைதீயாம், கோர்வையாய்விதியும்வந்துற்பவித்துகக்கொடிபடர்ந்தசுனைபோலச்சென்மமாச்சே. (௨௪)

சென்மமாஞ்சரீரந்தொண்ணூற்றாறங்குலமாம்- செய்கின்றவவரவர்கள்கையாலேதான், தன்னமாமரசமிரத்தமாங்கிசமுமேதை - தசைமச்சைசயோடுசுக்லந்தாதேழாகி, உன்னமாமுருவென்னுஞ்சரீரமாகி-உயர்சட்டைரசஞ்சேர்ந்துரோகமாகி, வன்னமாம்வாதபித்தசேட்பமாகி-வருகின்றசடத்தினிடவண்மைகேளே. (௨௫)

வண்மையாம்வாதமதுமுப்பதாண்டு- மட்டுமேவளருகின்றகாலமாகும், பெண்மையாம்பித்தமதுமுப்பத்துமூன்று-பேணியேவளருகின்றகாலமாகும், திண்மையாஞ்சேட்பமதுமுப்பத்தேழு-செயலோடுவளருகின்றகாலமாகும், உண்மையாய்ச்சடமதனுக்கொருநூறுண்டு- உகாந்தமாங்கருவிகளினுறுதிகேளே. (௨௬)

உறுதியாம்பூதாதியோரைந்தாகும் - உயர்கின்றபொறியைந்துபுலனைந்தாகும், கறுதியாங்கன்மவிந்திரியமைந்தும்- கடிதானஞானவிந்திரியமைந்தும், திறுதியாந்திதாயகாரணம்நான்கும்-திறமானவறிவொன்றுதசநாடிபத்தும், மறுதியாம்வாயுவதுபத்துமாகும் மகத்தானவிஷயமஞ்சுகோசமஞ்சே. (௨௭)

அஞ்சவேயாதாரமாறுமாகும் அரியமண்டலமூன்றுமலமூன்றாகும், தொஞ்சவேதோஷமுமூன்றீஷணைதான்மூன்று-தோதகமாங்குணமூன்றுவினையிரண்டாம், தஞ்சவோராகமெட்டுவவத்தைபைந்து- தயங்கிய

தோர்கருவிகாடான்றெண்ணூற்றாறு, ஒஞ்சவேவொவ்வொன்றாய்விரித்துச்சொல்வேன்-உறுதியாபபூகாதியுரைக்கக்கேளே. (௨௮)

உரைக்கவேபிரிதிவுமப்புதேய்வும் உரிமையாம்வாய்வோடாகாசமாகும், புரைக்கவேபூதங்காணஞ்சதாச்சு- பொறியைந்தின்விபரமதைப்புகலக்கேளாய், திரைக்கவேசுரோத்திரமுந்தொக்குசட்சு-சிங்குவையாக்கிராணமிவையாகவைந்தும், துரைக்கவேசுரோத்திரந்தான்செவியுமாகும்-தொக்காவதுடம்பென்றேசொல்லலாமே. (௨௯)

சொல்லவேசட்சுதான்கண்ணுமாகும் - தூய்தானசிங்குவைநாக்காக்கிராணமூக்காம், புல்லவேபுலனைந்தும்புகலக்கேளு-புகழானசத்தமொடுபரிசரூபம், நல்லவேரசகெந்தமாகவைந்தாம்-நலமானசத்தமதுகேள்வியாகும், செல்லவேசெவியினிடக்கூறதாகும்- செய்பரிசஞ்சுகதுக்கமறிதல்காணே. (௩௰)

காணவேதேகத்தின்கூறதாகும் கண்ரூபமாவதுதான்காண்பதாகும், நாணவேகண்ணினிடக்கூறதாகும்- ரசமாவதறுசுவையையறிதலாகும், பூணவேநாக்கினிடக்கூறதாகும்- புகல்செந்தந்தூர்க்கந்தநற்கந்தமறிதல், தோணவேமூக்கினிடக்கூறதாகும்-சுகமானபொறியைந்தின்கூறுந்தானே. (௩௧)

தானானகன்மவிந்திரியமைந்தின் - சார்பதனைச்சாற்றிடவேவாக்குபாதம், பானானபாவியபாயுருமுபஸ்தம் பகரைந்தின்பிரிவதுதான்வாக்குவாயாம், கானானபாதமதுகாலேயாகும் கனமானபாணியதுகையுமாகு ஊனானபாயுருதானபானமாகும்-உபஸ்தமதுலிங்கமெனவுரைக்கலாமே

ஆமென்றகன்மவிந்திரியமைந்தின்-அடைவெல்லாஞ்சொன்னதன்பினப்பாற்கேளாய், நாமென்றகன்மேந்திரியவிஷயமைந்தை - நவின்றிடவேவசனமொடுகமனமாகுந், தாமென்றதானமொடு விசர்க்கமானந்தம்-தாக்காகவீதைந்துசாற்றினேனான், பாமென்றவிதனுடையவிபரமெல்லாம்-பரிவாகவொவ்வொன்றாயுரைக்கின்றேனே. (௩௩)

உரைக்கதுவேவாக்கதுதான்வசனிப்பாகும் உறுதியாம்பாதமதுநடத்திவைக்கும், பரைக்கவேபாணிகையால்வழங்கிவிக்கும்- பாயுருதான்மலந்தனையேபிரித்துவைக்கும், துரைக்கவேயுபஸ்தமதுசுக்லமூத்திரம் - துரிசாகவிடுவிக்குஞ்சுப்ரமாகும், நரைக்கவேகன்மேந்திரியவிஷயமைந்தின்-நலமதனைநவின்றிடவேநண்பாமென்னே. (௩௪)

என்னவேகாரணமதுநாலதாகும்- ஏற்றமனப்புத்தியாங்காரஞ்சித்தம், நன்னவேநாவினிடவிரிவைக்கேளாய்நலத்தமுண்மைவடிதான்றைத்தா

னினைக்கும், பொன்னவேபுத்திதானதனை விசாரிக்கும்-போரானவாங்காரங்கொண்டெழுப்பிவைக்கும், தென்னவேசித்தமலதச் செய்துமுடிப்பிகும்சிறந்தவந்தக்காரணந்தானென் குமாரச்சே (௧௫)

ஆச்சுதறிவொன்றின்விசாரணையைக்கேளாய் அனைத்தையுமேபார்த்திருந்தங்ககண்டந்தானாய்க், கோச்சுதேகுருவாய்த்தத் துவங்களாகிக்கொடியதீவினையாய்நல்வினையுமாகிப், போச்சுதேபெண்ணாய்ப்பும்சமாகிப்-புகலரியநிர்க்குணநின்மலமுமாகித், தீர்ச்சுதேசிவமாகிச்சீவமாகிச்செழுஞ்சுடரின்கதிரொளியாய்ச்சிறந்தவாறே (௧௬)

வாறானதத்துவமோர்முப்பத்தாறாம்- மன்னியதோராத்மதத்துவமேயாகும்; நாறானநாடிபத்தின்விபரங்கேளாய்-நயந்தவிடைபிங்கலையுஞ்சுழிமுனைகாந்தாரி, ஆறானவத்திசிங்குவையுமலம்புருடன்- அருக்குகுதன்சங்கினியும் வைரவனீரைந்து; மூறானவிதன்பிரிவை முன்னேசொன்னேன் மூர்க்கமாம்வாயுபத்தின்முறைமைபாரே. (௧௭)

முறைமையாம்பிராணனொடபானன்வியானன் மூர்க்கமாமுதானனொடுசமானனாகன், திறமையாங்கூர்மனொடுகிரிகரனாம்-தேவதத்தனொடுதனஞ்சயனுமாகும், பிறமையாமிதின்பிரிவுபிராணவாய்வு பெருமூலதாரத்திற்கட்டோன்றித்தான், உறமையாம்சிவையெனுமந்திரத்தாலோங்காரமுதலெழுத்தையுன்னித்தானே, (௧௮)

உன்னியேமேலெழுந்துபனிரண்டங்குலந்தான்- உயர்ந்தவெட்டங்குலந்தான்மீளவாங்கி, நன்னிநாலங்குலந்தான்பாழிற்பாயும்- நலமானகுணமெல்லாம்பிராணவாய்வு, பன்னவேநீலவர்ண்ணந் தேவதைதான்சந்திரன்-பலபலவாம்பொசிப்பெல்லாஞ்சீரணமதாக்கும், முன்னநாழிகைக்குமுந்நூற்றறுபதுசுவாசம்-முயர்ந்தநாளொன்றுக்குமூச்சைக்கேளே )

நாளொன்றுக்கிருபத்தோராயிரத்தறுநூறு- நலமானசுவாசந்தானேமூந்திருக்கும், கோளொன்றிப்பதினாலாயிரத்தநானூறு- குவித்மூலாதாரத்துள்ளொடுங்கும், பாளொன்றியேழாயிரத்திருநூறுசுவாசம்- பாழிலாப்பாய்ந்திடுமென்றறிகப்பின்னை, ஏளொன்றியிதனையேயுட்சாதித்தால்எப்போதும்பாலராயிருக்கலாமே. (௨௰)

இறக்கவேஅபானத்தினியல்கேளாய்-ஏற்றசுவாதிஷ்டானத்துற்பத்தியாகும், மருக்கவேகீழ்நோக்கிமலசலத்தைத்தள்ளும்-வாகாகநிறங்காணும்பச்சையாகும், அருக்கவேயாசனத்தைச்சுருக்கிவைக்கும்-அன்னசாரத்தையெல்லாஞ்சேரவைக்கும், திருக்கவேதேவதையும்வாசராஜன்-திறமானவியா[illegible]ச்சிறப்பைக்கேளே. (௨௧)

சிறப்பானவியானனதுதோளிமேலேநின்று - திகழெழுபத்திராயிரநாடியிலுஞ்சென்று, சுறுப்பானசரவசரந்தனிமேலேநின்றுதானீட்டல்முடக்கல்பண்ணிப் பரிசங்களறியும், அறப்பானவன்னசாரந்தனைத்தான்- அங்கங்கே நிறைப்பித்தாக்கையைரக்ஷிக்கும், பறப்பானததுபாவவர்ன்னமாகும்பாரினிற்றெய்வந்தானேமனமே. (சஉ)

ஏமனாமுதானனிடவேற்றங்கேளாய்-எழிலானவுதரவக்கினியெழுப்பிப், பூமனாமன்னசாரந்தனைத்தான்- பொருந்தவேசமிபித்து நிறுத்திவைக்கும், காமனாயெடுப்பித்துங்கலக்கிவைத்து கலக்கியேவருந்திவைக்கும்வளப்பமாகும், விமனாமின்னினிடவர்ன்னமாகும், விளங்கியதோரக்கினிதான்றெய்வமாமே. (சங)

ஆமென்றசமானனிடவாண்மைகேளாய்- அடிநாபிபாதாங்கஞ்சமன்கொண்டேகி, வாமென்றவாய்வுகளைமிஞ்சொட்டாமல்-மடக்கியேசமன்செய்து மருவப்பண்ணும், தாமென்றவறுசுவையைத்தண்ணீரன்னம் சமன்செய்துசரீரமெல்லாஞ்சாரப்பண்ணும்- வாமென்றவர்னமது புட்பராகம்-மகத்தானதெய்வமாதித்தனாமே. (சச)

தெய்வமாநாகனிட சிறப்பைக்கேளாய்செயலான சகலகலையாக்கிவைத்து, பைவமாய்ப்பாடிவைக்கும்கண்ணை விழிப்பிக்கும்- பாங்காகச்சிமிளிக்கும்ரோமமசைவிக்கும், பெய்வமாம்பொன்னிடவர்ன்னமாகும்- பெரிதானதெய்வந்தானனந்தனாகும் கொய்வமாங்கூர்மனிடக்குணத்தைக்கேளாய்-கொடியமனந்தனினின்றுநிமைக்கொட்டாமே (சரு)

நிமைக்கொட்டுங்கொட்டாவிதானுங்கொள்ளும் நேராகவாய்மூடும்பெலனுண்டாக்கும், கமைக்கொட்டுங்கண்விழிக்சுமூடப்பண்ணுங்காக்ஷியெல்லாங்காண்பிக்கும்விழிநீரோடும், விமைக்கொட்டும்வர்ன்னமது வெளுப்பதாகும்-மேலானதெய்வந்தான்விஷ்ணுவாகும், கமைக்கொட்டுங்கிருதராதியின்குணந்தான்உகசிநாவுநாசிதனிற்கசிவுண்டாமே (சசு)

கசிவுண்டாங்கடும்பசியின் கன்மஞ்செல்லும்- கண்ணியேயிருத்தலொடுபோதலாகும், துசிவுண்டாய்தும்மலொடிருமலுண்டாம் சுயமானவர்ன்னமதுகறுப்பதாகும், தெசிவுண்டாந்தெய்வமதுசிவன்றானாகும்திரோதயையிற் கூறானதிறமுமாகும், குசிவுண்டாந்தேவதத்தன்குணத்தைக்கேளாய்-குடிலமாய்ச்சோம்புமுறித்திடுதலாமே. (சஎ)

முறித்திடுதன்மொழிக்கும்போ முயற்சியாகி - முகுளிதமாய்க்கண்ணினையே யோடியுலாவித்துக், தரித்திடு[illegible]டைகொளற்று

க்கல்பேசல்சண்டாளக்கோபத்தையுண்டுபண்ணல், குறித்திடுதல்குகங் குய்யத்தானத்தன்றிக்கூர்ந்ததெய்வந்தேவேந்திரன்படிகவர்ன்னம், தறித்திடுதற்றனஞ்சயனைச்சாற்றக்கேளாய்- சாங்கமாய்மூக்கினின்றுதடிக்குந்தானே. (சஅ)

தடித்துமேஉடம்பெல்லாம்வீங்கப்பண்ணும்-தந்திரமாயக்கன்னத்திற்சமுத்ரம்போலத், திடித்துமேசுந்தரமாய்க்கோஷமாகித்திரண்டுமேதுஞ்சியகாலந்தனிற்றான், வடித்துமேவாயுவெல்லாம்போனபின்பு-வளமானதலைவெடிக்குமூன்றுநாளில், அடித்துமேதலைவெடித்தாலப்பாற்போகும் அதின்வர்ன்னநீலவர்ன்னமறிந்துகொள்ளே. (சகூ)

அறிந்ததோர்தெய்வம்துதன்வந்திரியாகும்- ஆகவிந்தவிஷாந்துமாதியாம்வாய்வு வெறிந்ததோர்விஷயமைந்தின்விபரங்கேளாய்மீறியதோரமாவசையம்பருவசையமாகும், தறிந்ததோர் சலவசையமலவசையத்தோடு-தாக்கானசுக்கிலமாம்வசையாமைந்தும், எறிந்ததோரமாவசையன்னம்தண்ணீர் இருக்குமிடமென்றுதானியம்பிடீரே. (ருய)

இயம்பிடவேபருவசையமாவதுதான்விளம்பில்- இயன்றவன்னந்தண்ணீர்தானேகமாராய்ந்து, புயம்பிடவேபிறியுமிடமமாவசையம்புகலில்-புசித்ததெல்லாமலமாகிப்போக்குவைக்குமிடமாம், தயம்பிடவேசலவசையஞ்சாப்பிட்டநீர்தான்- தாங்கியேயிருக்குமிடஞ்சலப்பையாகும், சுயம்பிடவே சுக்கிலமாமசயஞ்சொல்லில் - சுகமானசுக்கிலப்பையன்று சொல்லே. (ருக)

சொல்லானவிஷயமைந்தின்றொகுப்புச்சொன்னேன் - சூட்சமாங்கோஞ்சமைந்தின்சுளுக்குகேளாய், அல்லானவன்னமயங் கோசமயத்தோடும்-அரிதானபிராணமயகோசமாகும், மல்லானமனோமயமாம்விக்யானமயமாம், மகத்தானவானந்தமயமுமைந்து, மெல்லானவிதின்விரிவு விளம்பக்கேளாய்-மெய்வாய்கண்மூக்கோடுசெவியுமாமே. (ருஉ)

ஆமென்றவைம்பொறியின்பிரிதிவின்கூறுல்- அன்னமயகோசத்திலப்புவந்தணைந்தால், ஊமென்றவூணுண்டாமபிராணமயகோசம்- உத்தியிதிற்றேயுவந்தால்புத்தியுண்டாம், மாமென்றமனோமயமாங்கோசமாகும்- வாயுவிதில்வந்தடைந்தால்விகாரமுண்டாம், நாமென்றஞானமயகோசமெனப்போம்-நலத்தவாதம்வந்தால்சுகமுண்டாமே. (ருங)

வந்தாலா[illegible]கோசமெனப்போம்மகத்தானகோசமைந்திலெடுத்தவுடலது[illegible]ந்தானகோசமைந்தின்குணத்தைச்சொன்னேன்

குறிப்பானவாதாரமாறுங்கேளாய், முந்தானமூலாதாரஞ்சுவாதிஷ்டான
ம்-முதிர்ந்தமணிபூரகமுமனாகதமும்விசுத்தி, அந்தாலாக்கினையுமாதாரமா
கும் அடுக்கானவாதாரந்தாண்மைகேளே. (௫௪)

கேளேமூலாதாரங்குதங்குய்யத்துக்கும்-கெடியாகநடுவிருக்கும்பா
ணத்தின்மேல், வேளைவீணாதண்டின்கீழிருக்கும்- மிக்கநடுவேயோரங்கு
லப்பிரமாணம், மூளேமுக்கோணவிதழ்க்கமலமாகி முனிந்தநாவிதழ்
தனிலக்ஷரத்தையுடைத்தாய், வாளேமுக்கோணநடுமந்திரமரீங்காரம
வல்லபையாஞ்சத்திவலப்பக்கமாமே. (௫௫)

பக்கமாமந்திரமும்ஸ்ரீங்காரமாகும் பகரணதெய்வம்விக்கினேசுரன்
றன், வக்கமாமூலத்தில்வன்கொன்றுநிறுத்தி- வாசியைநீமறவாமன்மாட்
டியூதி ஓங்கமாமூலத்தின்மேழடியிற்றானும்- ஓங்காரக்கபமதில்டியிற்கட்
டி, இக்கமாமிருவரையுந்தெரிசித்தக்கால்- இகபரமுமவெளியாகியேதலை
மே. (௫௬

ஏறவேயெளிச்சென்றுமூலத்திதான் இதற்குமேலிரண்டாமங்குலத்
தின்மேலே, கூறவேநால்வட்டமாறிதழ்த்தான் குறித்தசுவாதிஷ்டான
மின்னொளித்தான், ஆறவேயாறுமட்சாமுடைத்தாய்-அதற்குள்ளே பி
ரிதிவுதான்குடியிருப்பாம் வேறவேவேதந்தானிருக்கோடெல்லாம்-விள
ங்கியதோரக்ஷரமுமகாரமாமே. (௫௭)

நகாரமாமெழுத்ததுவும்பிரமனாகும் லவ்வானபீசமதுபிரிதிவுக்கா
கும்; உகாரமாமந்திரத்தையுன்னிக்கொண்டு-உயர்வாய்வைக்கும்பிரகில
ரிவுவோன்றும், சிகாரமாமுப்புரிநூற்சிகநாலு- சிறந்தசரஸ்வதியுமங்
கேதெளிவாய்க்காணும், பகாரமாய்த்தெரிசித்துப்பழக்கம்பண்ணப்-பா
ருலகமயக்கமெல்லாம்பண்பதாமே- (௫௮)

பன்மையாமாறுமங்குலத்தின்மேலே பதிந்தபிறைபோலமணிபூர
கந்தான், தொன்மையாஞ்சுற்றிலும்பத்திதழதாகிச் - சுயம்பானவக்ஷர
மும்பத்துங்காணாய், அன்மையாசப்புனுக்கிடமதாகி- அதற்குள்ளேதெ
ய்வந்தான்விஷ்ணுவாகிந், தன்மையாம்பக்கத்திற்சத்திலட்சுமியாம் தய
ங்காதவக்ஷரந்தான்மகாரமாமே. (௫௯)

மகாரமமக்ஷரந்தான்விஷ்ணுவாகும்-மகத்தானமவ்வதுவுமப்புபீச
ம், விகாரமாம்வேசமதிவெசறுவாகும்-மெய்நிறைந்தவதமணி பஞ்
சாயுதம், நிகாரமாமலட்சுமிரன்பாகமாகி நேர்மையாய்வாசியைத்தான்
பங்கென்னநீறுத்தி, உகாரமாயூநிறைனுலகவாழ்க்கை ஒருநொடியில்வெ
ளியாகுமூணிப்பாரே. (௬௰)

ஊணியிதன்மேலிருநாலங்குலந்தான்- உத்தமமாமனகதத்தின்வீடுமாகும் தோணியேதிரிகோணப பனிரண்டாமிதழ்தான்- சுற்றிலுமே பனிரண்டக்ஷரமுடைத்தாய், சேணியேமேதயுவுக்கிருப்புமாகிச்சிகாரமாமெழுத்தாகிச்சிறப்புமாகிப், பூணியேபூதமீசம்ரவ்வுமாகிப்- புகழானருத்திரனும்புரிந்தார்பாரே. (௬௧)

புரிந்திருந்தார்சிகாரத்தில்ருத்ரன்ருத்திரியும்- புகழாகவாசிவைத்துச்சிங்கென்றாறு, கரிந்திருந்தகாயமுமேமோவாலையாகும்- கனிசாமவேதத்தின்கருத்துந்தோன்றும், பரிந்திருங்கவிதற்குமேற் பனிரண்டங்குலந்தான்-பார்வையாய்மேலேறிவிசுத்திவீடு, அரிந்திருங்கவறுகோணஞ்சோடசமாமிதழ்தான்-அதிலேதானீரெட்டக்ஷரமுமாமே. (௬௨)

ஆமெனவேவகாரந்தானறுகோணநடுவே- அமர்ந்திருந்தார்மகேசுரன்மகேஸ்பரியுமாக, வேமெனவேயதர்வணவேததோடொக்க - மிக்காணவாயுவனுமிகழுக்குள்ளே, போமெனவேபீசந்தான்யவ்வுமாகும்- புகழாகக்கும்பகஞ்செய்னுதியூதிவாமெனவேவங்கெனவுமிறுதிப்பார்க்க வயசெல்லாமொருநாளாய்மனதிற்காணே. (௬௩.)

காணவிதன்மேலீரெட்டங்குலந்தான்- கண்டமாருகம்புருவமளவாயாகி, ஊணையேயிரண்டிதழாயோங்கிநிற்கும்- உற்றுநின்றவட்சரமுமிரண்டுமாகும், ஊணமேவநடுவுக்குள்யகாரநிற்கும்-ஆக்கினையின்வீடாகுமாகாசமிருப்பு, பூணமேவபூதபீசம்யவ்வுமாகும்-புகழானமாணிக்கப்பிரவையவ்வே. (௬௪)

யவ்வுக்குட்சதாசிவமுஞ்சத்திநிற்கும்-யங்கென்றுகும்பித்தாலநேகசித்தியாகும், மவ்வுபரமானந்தமருவிநின்று - மகிழ்ச்சியாங்கருவிகளினிடமதாகி, அவ்வுடைமைம்புலன்றனையுமறியப்பண்ணி அறிவோடுநினைவுதனின்மயக்கத்தாட்டி, உவ்வுமுள்ளபடி நடத்திக்காண்பனகேட்பனவாய்உகந்துகுருவெழுந்தருளிவியார்த்திப்பாரே (௬௫)

பார்க்கவேயாதாரமாறுமாச்சு- பரிந்திட்டதத்துவங்கண்முப்பத்தாறும், சேர்க்கவேசுவதத்வமாகுங்கண்டீர்- சிறந்திருந்தமண்டலங்கண்மூன்றுங்கேளாய், ஆர்க்கவேயக்கினிமண்டலத்திலோடு - ஆதித்தமண்டலமுஞ்சந்திரமண்டலந்தான், தோர்க்கவேயிதன்ருசுவிசொல்லக்கேளாய்- சுருதியாமூலமென்றதுடர்ச்சிதானே. (௬௬)

துடர்ச்சியாஞ்சுவாதிஷ்டானத்தின்கீழே- சுகமாகநடுமையமணிமண்டலந்தான், முடர்ச்சிபாமமுச்சுடராய்மூலமட்டும்பாவி-மூனாந்தகசுவாதிஷ்டானமட்டுநிற்கும், மடர்ச்சியாயணிபூரமனகதத்தினடுவே- வனையமபொற்சூரியமண்டலந்தானிற்கும், படர்ச்சியாமணிபூரமனகதத்திற்படர்ந்தேதனுஞ்சூரியமண்டலந்தான்பாரே. (௬௭)

பாமொன்றாறசும்மா தான்பார்க்கப்போமோ-பரந்தேடும்வாசியைநீ மாட்டிப்பாரு, வேறொன்றாலவிசுத்திமேலாக்கினையின்கீழே- விளங்கியெழுஞ்சந்திரமண்டலந்தான்பாரு, தூமொன்றாற்றுவாதசாந்தத்தின்மட்டும-சுடரொளியாயப்பிரகாசமாகிநிற்கும், மூமொன்றான்மண்டலங்கண்மூன்றுமாச்சு-மூர்க்கமாமலமூன்றின்முடிவுங்கேளே. (௬௮)

முடியானவாணவமுமாயைகாம்யம்- முயற்சியாயிதின்பிரிவான்முடியுமாறு, திடியானசெம்பினிற்றான்களிம்புபோலும் - சிறுநெல்லினுமிபோலுமாத்துமாவை, முடிவானமேலெழவொட்டாமற்காத்து - முடிவித்துததவனுமென்றேகாத்திருக்கும், மடிவானமாய்கையதாணவத்தைக்கொண்டோ-வருகிறதுதெரியாமன்மடிக்குந்தானே. (௬௯)

மடிக்கின்றகாமியங்கண்டத்துக்கெல்லாம்-மகிழ்ந்திடுதன்மாயைமுற்றுவிந்துநிற்றல், துடிக்கின்ற மலமூன்றின்செயலுமாச்சுதோஷமூன்றுவனவாஞ்சுளுவுகேளாய், நடிக்கின்றவாதபித்தசேட்பமூன்று- நலமானவிதின்பிரிவுநாட்டக்கேளாய், வடிக்கின்றவாதமதுவாயுவிலேகலக்கிமத்தியமாமக்கினியுமார்க்கமாமே. (௭௰)

மார்க்கமாம்பித்தந்தானக்கினியினிலையை- மசக்கிவைக்துமாய்கையுடன்வருத்திவைக்கும், தூக்கந்தான்கேட்பமதுசலபிருதியாக்கித் - துவாரங்கடோறுமிடைவிடாமனிற்கும், மூர்க்கந்தான்றோஸமிதுமூன்றுமாச்சு-மூண்டதோரீஷணைகள்மூன்றைக்கேளு, நோர்க்கந்தானர்த்தவிஷணையினொடு-லோகவீஷணைகாமவீஷணைமூன்றாச்சே. (௭௧)

ஆச்சென்றமூன்றையுந்தானறியக்கேளாய் - அதிகமாஅர்த்தவீஷணைகுணந்தான், வேச்சென்றவர்த்தமதின்மேலாசைப்படுதல்- விளங்கியதோலோகவீஷணையதனைக்கேளாய், காச்சென்றகாணியுடனுறவுந்தேடிக்காரியங்களதின்மேலாசையாகும், ஆச்சென்சென்றகாமவீஷணைகாமியத்தைத்தேடி-யாசையதுபடுதவீஷணைமூன்றுமே. (௭௨)

மூன்றானபின்புதான்குணந்தான்மூன்று மொழியவோராசததகத்சாத்விகம், வேன்றானவிதின்பிரிவுவிளம்பக்கேளாய்-வெகுணிபலபேசாதிருத்தல்வேண்டுவதுகொடுத்தல், தான்றானதன்னைச்சார்ந்தாரைக்காத்தல்-தகமையுடனுயிர்களைத்தம்முயிர்போலெண்ணல், பான்றானபகைவரைவென்றிடுதனீங்கல்-பலகலைகளறிதல்பயில்பண்புண்டாமே. (௭௩)

உண்டுலகினுக்கங்கோருதவிசெய்யன்னவாழ்தல் - உண்மையாய்நலந்தெரிதல்புகழேபூண்டல், தண்டொடாண்மையொடுமேன்பாடான-சாற்றியதோர்குணமெல்லாமிராசதத்துக்காகும், மிண்டுதாமதகுணமுமோதோவெனனில் - மிகுதியாய்வஞ்சனையேசெய்த[illegible]மம, வண்டுவழிபாடொழிதல்வாதுபோராடல் - வணக்கமில்லாவெ[illegible]ய்பலாமே.

விளம்பவேசெய்தநன்றிமறுத்தல்விந்தை மிசப்பேசல்நிறைந்துமுறைமிடுக்குப்பேசல்முளம்பலேமுன்னுரைத்தல்பழியைக்கூறல்- மூகத்துடனேபேசல்பகையுடனேவாழ்தல், புளம்பலேபொய்கொலைகள்களவுகாமம் பொல்லாங்கியாவையுமேபுகன்றுபேசல், களம்பலேகாமத்தின்குரோதமிக்கக்-கடிந்தாமதகுணத்தின்காட்சியாமே. (௭௫)

காட்சியாஞ்சாத்திகந்தானேதோவென்னில்-கமழ்கடிவுசாந்தகமும்வாய்மைதயையொடுக்கம்தாட்சியாந்தண்ணளிவுக்குந்திடுநற்சீலந்தயவானகுணமன்புபெருமைபுகழ்பூண்டல், மாட்சியாமறையினிறைமண்பயக்கல்பூண்டல்-வறிஞோர்வாழ்வித்தனல்லோர்க்கீதல், நாட்சியாயிறைவனடியினைப்பணித்தல் - நல்லோர்க்குப்பொருளீதலறந்தேடல்தானே.

அறந்தேடல்உறவின்முறைநசுற்றத்தாரை அகதிபரதேசியருக்கன்னமீதல், திறந்தேடல்தெய்வமறையோரைக்காணல்-தேவதைகட்குபசாரச்சிந்தைசெய்தல், புறந்தேடல்புண்ணியங்கள்தேடவின்பப் பூசுராருக்காகுதிகள்பலிகொடுத்தல், தறந்தேடல்சாத்திகதின்குணமீதென்று-சாற்றினேன்குணமூன்றின்றன்மைதானே. (௭௭)

தன்மையாய்வினையதனைச்சாற்றக்கேளாய்- சார்ந்ததோர்நல்வினைதீவினையிரண்டாம், பன்மையாம்வினையிரண்டின்பயனேதென்னில்- பாவியநல்வினையதுதான்புண்யமாகும், திண்மையாந்தீவினைதான்பாவமாகும் சேர்ந்தவினையிரண்டாலேநரகசுவர்க்கம், புண்ணியஞ்செய்தவர்க்குநல்லசுவர்க்கமாகும்-பொல்லாதபாவிகட்குநரகமாமே. (௭௮)

ஆமேதானிராகபெட்டையறையக்கேளாய்அதிகமாக்குரோதமொடுலோபமோகம், வாமேதான்மதமாற்சரியமிடும்பைவேகம் - வகையாகவிதன்குணத்தைவழுத்தக்கேளாய், காமேதான் காமமெனலாசையாகும-கடிதானகுரோதமெனப்பிணக்கதாகும், போமேதான் லோபமெனல்பிடிப்பாடாகும்-பேர்பெரியமோகமெனல்பிரியமாமே. (௭௯)

பிரியமாமதமதுதான்கெருவமாகும்- பெரிதானமாற்சரியமிடும்பாங்காரம, உரியமாமிடும்பையுதாசீனகளாகும உறவேகமாவதுக்கடூரமாகும, நரியமாமிராசதத்தினன்மைசொன்னேன்- நாசமாமவத்தையைந்தினுட்டங்கேளாய், அரியமாஞ்சிற்றவத்தையாமிதனின்போக்கு- ஆக்கிரசாக்கிரமுஞ்சொற்பனமுமாமே. (௮௰)

சொற்பனஞ்சுழித்திதுரியந்துரியாதீதம்- சொல்லுமிவைகானவத்தைபஞ்சாகச்சொல்வர், நிற்பனமாஞ்சாக்கிரந்தானெற்றிநேரோ-நிறை

ந்திருக்குங்கருவியிடமியமாகக், கற்பனமாஞ்சொற்பனமுங்கண்டத்தானங்-கடந்திருக்குங்கருவியுடன்காயத்தோடே, இற்பனமாங்கழுத்திதானிதயத்துள்ளே-இயங்கிநிற்குங்கருவியுடனியப்பிடாயே. (௮௧)

இயம்பிடவேதுரியநாபிக்கமலந்தன்னில்-ஏற்றமாங்கருவியுடனீணங்கிநிற்கும் முயங்குதுரியாதீதாமூலாதார-மூர்க்கமாங்கருவியுடனமர்ந்திருக்குங், கபப்பிடவேகருவிகடான்றொண்ணூற்றாறும்-காரியமாய்தேகத்தைக்காக்துநிற்கும், வியங்கியிந்தழுப்பதுதத்துவமாந்தானே-வேதமாம்வித்திபாதத்துவமாமென்னே. (௮௨)

தத்துவமாங்கருவிகடான்றொண்ணூற்றாறும் - சடத்திலெங்குமுடடிந்துகமையாகும், உத்துவமாயுடறதனினுண்மைகேளாய்-உதிரவங்கனொனும்புவியிலுற்பவித்தது, அத்துவமாமப்போதுள்ளிதழாய்மலர்ந்து-அத்திமுகத்துக்கருவிட்டாகவுருந்தரித்து, சத்துவமாமவ்வுருவாயவ்வலயத்தின்கண்-தாக்கான அவ்வென்னுமட்சாந்தானுமே. (௮௩)

அவ்வென்னுமடசாத்தினடிதோன்றும்-அந்நாடிதனினின்றுதத்வந்தான்தோன்றும், எவ்வென்னுமெலும்புதசையின்புடையுநரம்பும்-ஈரெட்டுபழுவோடிரண்டுகொங்கையுமா, முவ்வென்னுமுட்டுக்காலெட்டெட்டுவளையா - மூட்டியமைத்தங்கனையோருருவமாக்கி, சுவ்வென்னுமிடையோடுபிங்கலையுஞ்சேர்த்துச்-சுழிமுனையென்றொருதுளையும்வழியதாமே. (௮௪)

வழியதுவாய்வாசல்வளமெனக்கொண்டங்கே வளமாகவுடனுண்டவன்மையெல்லாம், சுழியதுவாய்க்காளவாய்க்கிடுகாந்தலாகிக்- ககனம்போமெரிந்துமேமடியப்பாய்ந்து சுழிபதுவாய்த்தூராதகுழியதாகத்-துர்ப்பாவைநிணமுமாய்ப்பற்றியிரனுமாயப்,பொழியதுவாய்க்காளிதநாறிபித்துமாகிப்-பொருமலுமாய்ச்செருமலுமாய்க்கிருமியாகுமே (௮௫)

கிருமியாய்வகைதோறும்வாயுவைத்தானிறுத்திக்- கிரணமுந்நூற்றுபதுமோங்குடனிரங்கலாகி, அருமியார்தவிருத்தியமர்ந்த குடலதுதான்அமர்ந்தமுப்பத்திரண்டுமுழங்குடனுமாகும், ஒருமியாயொப்பமுடனொன்பதுவாய்மடித்து, உற்றசுக்லசலந்தான்மூன்றுமாகி, வறுமியாய்வச்சிரத்தோல்மேலேபோர்த்து-வழிபலவாய்மொழிமொழியாய் சந்துமாச்சே. (௮௬)

சந்துமூன்றனைகோடி யுரோமத்துவாரம் - தாக்கான நாலெட்டு வுறுப்புமாகி, இத்துவிருவதுவிரலுமைமநான் குழகிரு - எட்டுச்சாணீளமுமா யேகமாகி, சந்துநாற்சாண் பெருமை மெய்வாய்கண

மூக்கு-நலத்தசெவியுடல்பிரீதிவின்கூறாகிப்,பந்தொண்டுகாலுமாயிரண்
டுகையாய்ப்-பதினாறாகவகுடையவீணாதண்டே, (௮௭)

தண்டோடேயாறு தெருவேழுகடலாகும்- தாக்கானவெட்டுத்தூ
ண்முப்பதுவாஞ்சந்து,எண்டோடேயெழுபதுபேரெலும்புதானும்-ஏற
றமாமொழிமுச்சாணெலும்புமாகும், முண்டோடேயெலும்புமுச்சாண்
சதையுமாகும்-முக்கியமாமெண்பலமீரலுமாமென்ப, நண்டோடேநானா
ழியுதிரமாகும்-நற்பத்துவாசலையுமுடைத்ததாமே (௮௮)

உடைத்திரட்சியுதிரமாங்கிசமேதையத்தி-உயர்ந்தசுக்கிலமச்சைச்
சுத்ததாது, படைத்தபலமுப்பத்திரண்டுமாகும்-பண்பானபழுவெலும்
புபதினொன்க, முடைத்தமுதுகுத்தண்டுபன்னிரண்டுகோர்வை- முத
ற்சூழ்ந்ததாளசைவதைந்துமாகும்,நடைத்தநரம்பெலும்பொன்றியேழ
ணையுங்கூட்டி நலம்படவேசதைமேவிநாடிற்றன்றே. (௮௯)

நாட்டியேபிடரியினிற்கோர்த்தநாடி - நரம்புபின்னலோரேழாயிர
மாமென்க, ஆட்டியேயசைவுடலந்தான்றுவக்கில்-ஆருயிர்தானாற்பத்தா
றகாகும், தூட்டியேதொழுத்தையிரண்டாயிரத்துக்- துடர்ந்துவிண்வ
ளருமெய்பாயிரமாமென்க,பாட்டியேகோணங்கள்பதினாறாகும்-பகர்சே
ட்டுமத்தின்னக்குண்டலத்தினனலே. (௯௰)

அனலெழும்பிவாயு பத்துநாபினிற்சுருக்கி-அல்லலுறும் வாசலொ
ன்பதிற்கதவொன்றிட்டு, இனலெழும்பியீசர்வாசலைத்திறந்து-இடையி
னொடுபிங்கலைநாதனையேநோக்கி, நிணலெழுப்பியன்பனெனுநெய்சொரி
ந்து-நேராகவமிர்தமென்னுந்திரியையிட்டு,வனலெழுப்பிமணிவிளக்கை
நிறையவேற்றி-வாசியைநீவரவழைத்துவைத்துக்கொள்ளே. (௯௧

கொள்ளவேயைம்புலனைநாசமாக்கிக்-கோசமாமட்சரத்தையளவறி
ந்து, அள்ளவேயன்பத்தோரட்சரத்தின்-ஆதாரநிராதாஞ்சோதித்தேறி,
உள்ளவேமண்டலத்தின் வலமாய்வந்து - உதிரமண்டலமொக்கப்பால்
சொரிந்து, கள்ளவேகாமம்வெகுளிமயக்கறுத்து- கடும்புரவிகுசைதாங்
கிக்கருதிப்பாரே. (௯௨)

தாங்கியேயிருமூன்றுதெருவுஞ்சுற்றித்-தயங்காதவசு வங்கடெரு
வும்கொண்டு, ஏங்கியேயேழாயிரத்திருநூறுவாய்வு-இரவுபகலளவாக வி
சுமப்பில்லாமல், ஓங்கிவோங்காரமெனுமூலநாடி உறுதிகொண்டெழுப
த்தீராயிரமாநாடி, நாங்கியேநாம்போடுநாடியிவைக்கெல்லா-நலத்தவுரப்
படுநாடியொன்றுண்டாகும்மே. (௯௩)

ஒன்றென்னுமிதிலாதித்தன்போனடி - ஒருபத்தும்பரித்துத்தான்
பறந்தவாறும், நன்றென்னுங்காலோடுகை நடுத்தாமனையில் - நாடிநு
ழைந்துயிராகிமெய்யிலோடிப்,பிண்டுநரம்பாலெலும்பைப்பிணப்பிசை
வித்து- பெருநாடிபுகுமத்தையறிந்கடங்கிநிற்கும,அண்டெனவேநாடிப
த்துஞ்செறித்தடங்கிநிற்கும்-அதிமூலமுந்திமுதலாகியுறுமாமே. ௬௪)

உறுமுடிக்குக்கீழ்மேலும்பதிந்தநிற்கும் - உகமையாந்தலையினி
லேயிசான்றன், செறிவினைசெய்வினைப்பயன்முன்னும்மறிந்து திகழிந்
திரமான்றலைபோலிமைப்பானுள்ளே, தறுவினைசததப்பரிசரூபரசகந்த
ம்-தானம்வகைதொறுமுந்திகொடுத்துநல்கி, அறுவினைசெய்தகமையறு
த்துள்ளேநோக்கித்-தொண்ணூற்றாறுங்கருவிதத்வமாமே. (௬௫)

ஆமெனுநாடிநரம்பெழுபத்திராயிரமாம்-அதிவிறும்நாடிவிஷ்ணுநா
டியாகும், ஏமருதானடியிடையோடுபிங்கலையும்- எழினுமுதுசெலும்பு
பதினாறுபழுவுவாகும், மூமெனுமுப்பத்தொருவார்க்குழியுமாகி முதிர்
ந்துநின்றவையுழக்காமுதிரமாகும், நாமெனுநாழிவாதமுந்நாழிபித்தம்
நானுழிசேட்டுமமுநலத்ததாமே. (௬௬)

நலத்தமூன்றரைகோடிரோமக்வாரப்- நல்விநமத்தெண்கோடிமல
த்துவாரம், முலத்தமுப்பதத்தெண்கோடிசலத்துவார முயன்றிரத்தமை
ம்பலமாங்கிசநூறுபலமாய், கொலத்தகெந்தமெண்பலமாம் ரோமநூற்
றெட்டு-கோடியாம்மேதையிருநூறுபலமாகும், பெலத்ததோல்தந்நூ
றுபலமாகும்-பேரானநிணந்தானுமாமே. (௬௭)

ஆமென்றகுடன்முந்நூற்றேழுபலமாகும்- அதிகமாம்வழுக்கைய
துநாற்பலமதாகும்,தேமென்றசியுரித்தான்கண்கள்ரெண்டும்-சிறக்கவே
நாலுகழஞ்சாகுங்கண்டாய், நாமென்றநாக்குநாற்கழஞ்சதாகும்-நற்கந்த
மூக்கு தானதுமுக்கழஞ்சு. காமென்றகன்னஞ்சேர்நாற்கழஞ்சதாகும்-
டிங்தெலும்பெலா நூற்றோர்பத்தெண்பலமென்னே (௬௮)

என்னவேயிறைச்சிபலநூற்றறுபத்தைந்தாம்- வற்றமுப்பலந்தா
னுமூளையாகும், பன்னுதாயனாமெட்டமைங்சழஞ்சதாகும்-பார்க்கவே
சலப்பையுமோர்முழந்தானீளம், கன்னமேவகருவிகடானதுதொண்ணூ
ற்றாறும்-கணக்காகவுடற்குறிப்புகாயாந்தானுகும், தன்னமேவதத்துவங்
கடானெல்லாஞ்சொன்னேன்- சார்ந்தநாடியின்றன்மைசாற்றினேனே.

தத்துவவிதி-முற்றிற்று

உ

# நாடிநிதானம்.

சாற்றுகிறேனாடியிடப்பூர்வமெல்லாம் - தாக்கானநாக்குமலமூத்ரமாகும், காற்றுகிறேன்கண்ணோடுபேச்சதானும்-காரியமாயெட்டுவகைப்பரிட்சைதன்னில், ஆற்றுகிறேனவற்றிலுள்ளகுணங்களெல்லாம்-அசாத்தியசாத்யமறிந்தவனையும்பார்த்து நாற்றுகிறேனாடியிடநன்மையெல்லாம், நற்குணமுந்துர்க்குணமுநயந்துபாரே. (௰)

நயந்துநீநாடிதான்பார்க்கும்வாறு நலமானபுருஷமுச்சிகண்டநெஞ்சு,கயந்துனைகயிற்காலடியின்முழங்கைதன்னிற்கணுக்காலினமுழங்கால்லைகுழியிலாகும, தயந்துதானங்கடாபதிக்குநாடி- சகலநாம்பெழுபத்திராயிர முஞ்சார்ந்து, நியந்துநிற்குமிவ்விடங்கணாடிபார்க்கில்- நிரோகத்தின்பரிட்சையெல்லாமியம்பிடாயே. (௰௧)

நாடிபார்க்கும்விதம்.

இப[illegible]வேஅங்குஷ்டவிரலுக்கப்பால்-ஏற்றமாய்நெற்கிம்பிடைவிட்டுப்பால்பார்க்கில், முயமபிடவேமூவிரலாணடிதொட்டு-முப்மூர்த்திநாடியினின்முழக்கம்பாரு, பியப்பிடவேபிரமமதுவாதநாடி- போனபித்தந்தான்விஷ்ணுநாடி, தியம்பிடவேசேட்பமதுருத்ரநாடி-செயலெல்லாஞ்செப்பிநீதெளிந்திடாயே (௰௨)

நாடிபார்க்குங்காலம்.

தெளிந்திட்டகாலைநாழிகைநான்பத்தும்- திறமையாய்வாதத்தின்சிறப்பதாகும், பிழிந்திட்டவுருமத்திற்பத்துநாழி-பித்தத்தினாடியின்பிரகாபந்தானும், தெளிந்திட்டவந்திகனிற்பத்துநாழி- சிலேட்டுமத்தின செயலாகுங்கங்குற்போது, வழுந்திட்டவாதத்தினாடியாகும்- வலிந்நிசிபத்தின்மேற்பித்தமாமே (௰௩)

ஆமென்றவைகளையிற்சேட்பமாகும் அப்மூன்றுநாடிகளுமடங்கியெழுங்காலம், நாமென்றவாதத்துக்கிருப்பிடமேகேளாய் - ஞபிக்குககிழென்றுநவிலலாகும,பேமன்றபித்தத்துக்கிருப்பிடமேகேளாய்போனகண்டத்தின்கீழதாகும், தேமென்றசேட்பமதுசிறந்திருக்குந்தான-செயலானவுச்சிக்குக்கீழதாமே. (௰௪)

கீழானபெருவிரற்கிழ்நர்ச்சியாய்விரலிற்- கிளந்தெழுப்பம்வாதத்தினாடிதானும், மாழானமத்தியமத்தினவிரல்தான்பித்தம - மகத்தானவணமிவிரலசேட்பமாகும, வாழானமன்னனுக்குவலக்கையினாடிமங்கையருக்கிடதுபக்கம்வருக்கலாகும, காழானைகைகாவினாடிபார்க்கக்-கருக்கிடான்கண[illegible]கருதிப்பாரே. (௰௫)

கருதியெநாடிகடான்காணுநேரம் - கதிருதயஞ்சித்திரைவைகாசிக்குத்தான, அ[illegible]யாளியோடாடிவைப்பசியும - அமிர்தம[illegible]

கைக்குமத்தியானம்,மருதியேமார்கழியுந்தையுமாசி-மாலைநேரந்தனிலே பார்க்கலாகும், [illegible]ருதியேபுரட்டாசியாவணிபங்குனியும்- போனகங்குலர்த்தராத்திரிதானுமே. (௨௬)

நாடிதோன்றுதகாலம்.

அத்தமாநாடிதெரியாதபேர்கள்- அப்பியங்கஞ்செய்தோர்களன்னந் தண்ணீர், குற்றமாமிகுதியுமேயுண்டபேர்கள்- குதிரைகரிவெய்யில்விடாய்சிற்றின்பத்தோர், மத்திபமாமதுகஞ்சாவபினிமாம்சம்-மச்சங்கண் மிகவுமுண்டோர்வாயுகும்பித், தித்தமாய்நிறுத்தினோரிவர்கட்கெல்லாம திசைகலங்கிநாடியதுதெளிந்திடாதே. (௨௭)

வாதநாடி.

தெளிந்திட்டவாதநாடிக்குணந்தான் - சிறுபிள்ளைதூங்குதொட்டிலாட்டம்போலும், வளிந்திட்டவளைந்துவளைந்தேநடக்கும்- மண்டுகந்[illegible]துதல்போலோனுன்போலும், தளிந்திட்டசர்ப்பம்போலட்டைபோலும்-தவழ்த்துமேவவியினிற்குருவிபோலும், அளிந்திட்டவாமையின்றனடையைப்போலும்-ஆதியாம்வாதமதுநடக்குந்தானே. (௨௮)

பித்தநாடி.

நடக்கின்றபித்தத்தினாடிகேட்கின்- நாகரிகமாகுமன்னநடையைப் போலும், மடக்கின்றமயில்போலுந்தாராபோலும் - மாடப்புறவுமூர்க்குருவிபோலும், விடக்கின்றமெத்தனவாம்மீண்டுமீண்டு-மேண்மையாய்முடுக்காகவிளக்கமாகிக்கிடக்கின்றகெருடன்போற்பெலத்தேயோங்கிக்- கேசாம்போலசையுமதுபித்தந்தானே. (௨௯)

சிலேட்பநாடி.

தானென்றசிலேட்பத்தின்றுதுகேளாய் - தயங்கியேதோற்றுமது தோற்றாகிக், கோனென்றகோழியின்றனடையேபோலும்- கொக்கினுறக்கம்போலூர்க்குருவிபோலும், மானென்றமங்கைநல்லார்மயக்கிற்சிக்கி- மருவினவனவன்றுதுபோன்மசகமாகித், தேனென்றசிலந்தியின்பூச்சுப்போலும்-சேட்பமாநாடியதுதெளிவாய்ப்பாரே. (௨௰)

வாதபித்தநாடி.

தெளிவானவாதபித்தநாடிசெய்தி-செப்பவேசிறுகுருவிபோனடந்து, வளிவானமயில்போலநடப்புங்காணும் - மருவியபின்னேந்தியின்றன்மார்க்கமாகும, கனிவானவாதசேட்பத்தினாடி - கானகத்தின்கோழியதுபோனடந்து, அளிவானஅட்டையின்றன்மார்க்கங்கண்டால்- அதிகமாய்முன்சொன்னநாடியாமே (௨௰௧)

பித்தசேட்பநாடி.

நாடியேபித்தசேட்பமத்தினாறுதுநண்ணியேநடக்கும்வகைநட்பைக்கேளீர், பாடியேபாம்புபோலசைந்துபின்னை- பதிந்ததவளைக்குதித்தல் பதரும்போலாம், ஆடியேசிரணபாநாடிதானே-அசைந்துமதயானைபோ

ணடைநடக்கும், தேடியேதிபகத்தினாடிதானே - சிறுகாக்கைதூங்குதல்
போற்றுடிக்குமன்றே. (௱௰௨)

## சன்னிநாடி.

துடித்திட்டங்கசைந்துநாடிநின்று- சொல்லும்பிறகுத்தலையோன
டையேயானால், செடித்திட்டுக்கிறுகிறெனவேசுறறிநாடிக் - கீழ்மாடிய
லைந்துமேபதறிச்சுற்றி. அடித்திட்டு அன்னம்போலட்டைபோல - அசு
மந்தமாகவேமெலிந்தகாணல், குடித்திட்டுக்குடிலமாய்ச்சிக்கென்றானால்
சன்னியென்றேநாடியெனறேசாற்றலாமே. (௱௰௩)

## சுகசன்னி.

சாற்றியேமந்தமாய்நாடிதானும் - தணிந்தொரு குக்குடம்போற்
பாம்புபோல மோற்றியேமூஞ்சூறுபோலவாகி- முனையாகிச்சுடராகிக்
கொழுந்தேயோடி, ஆற்றியேயடங்கிநின்றங்கெழுப்பிற்றானல்- அப்பி
யங்கஞ்செய்தரிவையணுகினேர்க்கும். தோற்றியேசுகசன்னியென்னும
நாடி-சூட்சாதிசூட்சமாய்த்துஞ்சும்பாரே. (௱௰௪)

## வாதசுரம்.

துஞ்சியேவாளைமீன்போலப்பாய்ந்து - துடித்துமேசடித்துத்தான்
சிக்கலாகி, அஞ்சியேசர்ப்பம்போலடங்கிநின்று - ஆனைமும்மதம்போல
வார்ப்பரித்து, நெஞ்சியேநெறுநெறெனறுநிமிஷந்தானும- நிலைவிட்டுநீ
ங்கியேமீண்டும்புக்கில், வஞ்சியர்மேலவிகாரமாய்மனதைப்பூண்ட- வாத
சுரநாடியென்றேவகுக்கலாமே. (௱௰௫)

## மரணநாடி.

வகுக்கவேவாதத்தினாடிதானும்-வளைந்துமேமுன்னோடிப்பிரண்ட
தாகில், வகுக்கவேமந்தமதுமெத்தவாகில்மயிற்றாராவன்னநடைபோன
றுநின்றால், நிருக்கவேநின்றுநின்றுநேரோடாமல்-நிலைதப்பிமுன்பாய்ச்
சல்பின்பாய்ச்சலாகிச், செருக்கவேசடந்தானுமெட்டுநாளிற் - சிவபுரந்
துக்கெய்துவிடுந்திண்ணந்தானே. (௱௰௬)

திண்ணமாய்பித்தத்தினாடிதானும் - தேள்கொடுக்குத்தெறிப்பது
போற்றெறிக்குமாகில், வண்ணமாமாதத்தின்மரணமென்க-வல்லூறுசா
ப்பமதுவளைந்துகாண்கில்பன்னியேபட்சத்தின்மரணமென்கபருவாணை
த்துடிசெய்யிலெட்டுநாளாம், பின்னியேயிந்தமதுமீண்டுமீண்டு- மீட்
சியேமீண்டுவந்தால்மீளதாமே. (௱௰௭)

மீளவேஉந்தியினிற்சுழியைப்பற்றி- விளங்கியதோர்வாதபித்தமே
ட்டுமெந்தான், ஆளவேவையமென்றநாடிதன்னில்-ஆதித்தன்சுடரொளி
போற்றோன்றுமாகில், காளமேவகாந்தத்தின்கனலாய்க்காணில்கலங்கிப்பு
தானம்விட்டுக்கடைசியாகில், பாளமேவபம்பரம்போற்சுழலுமாகில்- பர
மபதமடையுமென்றேபகராதே. (௱௰௮)

பகரவேவாதத்தினாடிதானும்-பருகியதோர்பித்தத்தின் வீட்டைச்சேர்ந்து, பிகரவேபித்தத்தினாடிதானுமேயான்சேட்டுமத்தின்வீட்டைச்சேர்ந்து, அகரவேயையமெனறநாடிதானும் அதன்வீட்டைவிட்டுமேயப்பாலாகித், திகரவேகண்டத்தைச்சேருமாகில் செடமதனைந்துசிவலோகஞ்சேர்வர்தாமே. (௱௰௯)

சேரவேவிணைபோற்றெரிக்குமாகில்-சித்தமாய்த்தினமூன்றுநாளிற்றீர்வர், ஆரவேயையமாநாடிதன்னில்-அதிர்ந்துமேசவளைபோற்குதிக்குமாகில், போரவேபாம்புபோற்பிரள்வுற்றார்ந்துபொறிபோலவந்தனுடையநடைகண்டாலும், மாரவேமரந்தன்னிற்கொடிபோலவந்திடினுமரணமெனவகுக்கலாமே. (௱௨௰)

நாடிபார்க்கும்இயல்பு.

வகுக்கவேமானிடர்தம்வலக்கைபற்று- வளைவன்றிமுடக்கன்றிநெட்டிவாங்கி, முருக்கவேமூவிரலாற்றொட்டுப்பார்க்கில்- முன்னாடிவாதமபின்னாடிபித்தம் சிருக்கவேபனுவிரல்சேட்பமாகும்- செயலெல்லாமதிந்துணர்ந்துசேதிகேட்டு, நருக்கவேநோயதனினன்மைகண்டுநாடியிடச்செயலறிந்துநாடிடாயே. (௱௨௧)

பூத்தமங்கைநாடி.

நாடியேயெறும்புகானூர்தல்போனும் - நல்லமையசைவதுபோல்வாதநாடி, கூடியேகுளிர்ச்சியாயமெதுவுபோன்று- குடிலங்களுல்லாமற்றேன்றுமாகில், வாடியேமங்கையர்க்குக்கெர்ப்பமாகும்-மகத்தானபஞ்சுபோன்மெதுவாயுற்றுப், பூடியேயின்னாத்தினபொலிவேயானல்- பூத்தமங்கைநாடியென்றேபுகலலாமே. (௱௨௨)

விகற்பநாடி.

புகலவேபுழுப்போலநிமிருமாகில்-பொருகாலவண்டினிடவொலியும்போல, நிகலவேகாஷ்டத்தினெய்தான்விழ்ந்துநேர்ந்தெழும்பமக்கினியினிருமைபோலும், திகலவேகிளியெழும்புஞ்செய்கைபோலத்தினையெழுபபியொடுங்குமபோறபித்தநாடி, விகலவேபடபடத்துத்தோன்றுமாகில்-விகாரத்தினாடியென்றேவிளம்பலாமே. (௱௨௩)

பூதநாடி.

விளம்பவேமீதினியிற்கல்லெறிதல்போலும்- மிகப்புரவியாட்டுக்குடாய்ப்பாய்ச்சல்போலும், திளப்பவேசெக்கினாடிருகல்போலுஞ்சிறுகினறமுஞ்சூன்றுசசியேபோலும், இளம்பவேபந்தடித்துயெழும்பல்போலும், வற்றுபோலேறியிழிந்திடுதல்போலும், புளப்பவேபித்தத்தினாடிதோன்றில் பூதத்தினாடியெனப்பேசலாமே. (௱௨௪)

மரணநாடி

பேசவேபிங்கலையின்நாடிதானும்- பேணிநான்முழுதாதோடிற்பிசகாமற்றான,வாசவேவழுவாணடின்மரணஞ்சொல்லுமே-வாதமாநாடியதுவு

னுமையாகிவசவேயிரண்டுநாண்முழுதுமோடில்; ஈருண்டின்மாணமெனவியப்பலாகும், நாசவேநாண்மூன்றுவழுவாதோடில்- நமனுக்கநங்கிவறயார்வனுண்டிற்றுனே. (௱௨௫)

தானென்றபித்தத்தினுடிகானும்-தரியாமனுளொன்றுதயங்குமாகில்,ஆனென்றவாறுதிங்கண்மரணஞ்சொல்லும் அசைவிலாதிரண்டு நாளோடுமாகில்.மோனென்றமூன்றுதிங்கட்குண்மறிப்பன் மூர்க்கமாய்மூன்றுநாளோடுமாகில்,நானென்றநாற்பதோடைந்தாநாளில் நசிச்சுபேநமனிடத்தினல்குவானே. (௱௨௬)

நல்கவேசேட்பத்தினுடிதானும்- நாண்மூன்றுகடிதோடிலேந்து நாளாய், மல்கவேயிரண்டுநாளோடுமாகில்- மரித்திடுவனீரைந்துநாளிற்றானும், ஒல்கவேயொருநாளேயோடுமாகில்- உறுசிவன்பதினைந்துமட்டுநிற்கும,பல்கவேபத்துநாழிகையேநின்றால் பயமில்லைப்பார்தனிலேபாலிப்பாரே. (௱௨௭)

பாலிக்கபித்தத்தினுடிதானும்- பகட்டியேமூன்றுநாள்புரளுமாகில் ஆலிகதவாலினுக்கசைதல்போலும- ஆடியேயமர்ந்ததானிருக்குமாகில், மாலிக்தமணியசைதலோசைபோலும்-மகத்தானவுடுக்கையின்றன்றொனியைப்போலும், கோலித்தநாடியினிற்குறிகள்கண்டால்-கொடுமறலிநகர்தனையேகுடிகொள்வாரே. (௱௨௮)

சரீரலட்சுணம்.

கொள்ளவேவாதத்தின்றேகந்தானும்- குளிர்ந்துமேசிறுதிடத்தேசூஷ்ணமாகித், தெள்ளவேதுடிதுடித்தேயிருக்கும்பித்தம்- தேகந்தானதிசவூஷ்ணமாயிருக்கும். செள்ளவேசேட்டுமத்தின்றேகந்தானும்- சிக்கென்றுகுளிர்ந்திருக்குந்தொந்தமேதேகம் பன்னவேபலவிதந்தான்பெற்றிருக்கும்-பரிந்துதொட்டுதேகத்தைப்பார்த்துச்சொல்லே. (௱௨௯)

தேகத்தினிறந்தானுஞ்செப்பக்கேளீர் - சிறுமையாய்வாதந்தான்கறுத்திருக்கும், போகத்தின்பித்தநிறமஞ்சளாகும்-பொருஞ்சேட்பரோகிக்குவெளுப்புமாகும், பாகத்தின்தொந்தரோகிக்குத்தானும்-பலபலவர்ன்னமுமாகிப்பறந்துநிற்கும், ஆகத்தினிறம்பார்த்துநாடிபார்த்து- அவ்[illegible]டவிதப்பரிக்ஷையெல்லாமடவாய்ப்பாரே. ([illegible]௰)

வசனபரிட்சை.

பார்வாதரோகிக்குவார்த்தைதானும்-பக்குவ[illegible]கும், பேர்பித்தரோகிக்குவார்த்தைதானும்-[illegible]சட்டதமாயிருக்கத்திருக்கும், சேர்சேட்பரோகிக்குவார்[illegible]மொ[illegible]பலத்துமேபுசுமாயிருக்கும், வேர்தொந்தரோகிக்[illegible]தானும்- சிறுத்துமேயினயிருக்குமெனறேவிரித்திடாமே[illegible]ர்த்தைதானும- வெகுவிகமா (௱௩௧)

மூத்திரபரிட்சை

விரித்திட்டவாதமென்றரோகிக்குத்தான்-மீறியேகண்கறுத்துத்கண்ணீர்பாயும், பரித்திட்டபயித்தியரோகிக்குக்கண்தான்-பச்சென்றுசிவந்திருக்குஞ்சேட்பரோக, பிரித்திட்டபிளேசாரும், வெளுத்திருக்கும் பெருஞ்சன்னிவாதரோகிக்குக்கண்தான். கரித்திட்டுச்சிவந்துபச்செசன்றிருக்கும்-காமாலைரோகிக்குபசுமஞ்சளாமே (௱௩உ)

மலபரிட்சை.

மஞ்சளென்றவாதரோகிக்குமலந்தானும்-பலபந்தமாகியே கறுத்திருக்கும், பிஞ்சலென்றபித்தரோகிக்குத்தானும-பெருகியேவெச்சென்றுசிவந்திருக்கும், திஞ்சலென்றசேட்டுமரோகிக்குத்தானும்- சிதறிமலம்வெளுத்துமேசீதமாகும், பஞ்சலென்றதொந்தரோகிக்குத்தானும்- பலவர்ன்னமாயிருக்குமபண்புதானே. (௱௩௩)

ஜலபரிட்சை.

பண்பாகவாதரோகிக்குமூத்தம்- பாரிகதுத் தெளிந்திருக்கும்வெண்மையாகும், மண்பானபித்தரோகிக்குமூத்ரமமார்க்கமாய்மஞ்சளித்துப்பசத்திருக்கும், திண்பானசேட்டுமரோகிக்குமூத்ரம் சேறுபோற்பொங்கியேநுரைததிருக்கும், கண்பானதொந்தரோகிக்குமூத்ரம்- கண்டபலநிறமாகுங்கருதிடாயே. (௱௩௪)

நாவின்பரிட்சை.

கருதியேவாதரோகிக்குநாக்கு-கறுத்திருக்குமுள்ளுபோல்வெடித்திருக்கும் பாருதியேபித்தரோகிக்குநாக்கு பச்சென்றுதானிருக்குஞ்சிவந்திருக்கும், வெருதியேசேட்டுமரோகிக்குநாக்கு-வெளுத்துமேதண்ணீருண்டாயிருக்குமு அருதியெதொந்தரோகிக்குநாக்கு- சூட்சாதிபலவர்ன்னமாகுந்தானே (௱௩௫)

வர்ன்னமாமெட்டுவகைபரிட்சைபார்த்து - வகையானநாடியிடகுணமுங்கண்டு, தினை ரந்தேகத்தின்செயலும்பார்த்துத்-தேசமதேசாபேதச்செயலறிந்து, குன்னமாங்காலகாலங்கள பாரகதுங்-கனமானவக்கினியின்கணக்கறிந்து. பன்னவாமபலபலவாநூலைதமதேர்ந்து- பரிகாரப்பயனறிந்துபார்த்துச்சொல்லே. (௱௩௬)

நாடிநிதாநம்-முற்றிற்று.

---

## சுரரோகநிதாநம்

சொல்ல த்திணிடதிறமைகேளாய்-செடத்திலுள்ள பிணிக்கெல்ல மா சாவரகும லலவேகமனுக்குமொக்குமொக்கும்- எழிலோடுபிரதாபம்கோபமாகும, தி வேகக்கனிடவேள்வியைத்தான்சாமபசிவகோபத்தாலழிக்கபோது, லம்வேமிநற்றிக்கண் சுவாலைதன்னில்- நோரகப்புறப்பட்டுநேர்ந்ததாமே. (௱௩௭)

நேர்ந்ததோர்சுரமேழுவிதமுமாகும்- நிலையான நாமத்தினேர்மை கேளாய்-வார்ந்ததோர்வாதசுரம்பித்தசுரஞ்சேட்பம்-வாகானபூதசுரம்சிரணசுரமாகும், ஆர்ந்தவபிகாதசுரங்காந்தசுரங்காந்தசுரத்தோடு- ஆர்க்கமாமேழுவிதமறிந்துக்கொள்ளு, தீர்ந்ததோர்சுரபேதவண்மையெல்லாம்-செயலறிந்துகுணத்தோடுசெப்புறேனே, (௩௮)

வாதசுரம்.

செப்புகிறேன்வாதசுரத்தின்குணத்தைத்- திருமுகமுமுகடுமேகறுத்துக்காணல், தப்புகிறேன்சரீரமெல்லாந்தடித்துநோதல்- தாகந்தான்மிகக்காணன்மெய்நடுக்கல், திப்புகிறேனுடம்புதிமிரெடுக்கமூஷ்ணம்-தேகம்பாரித்திருக்கன்மலபேதத்தால், குப்புகிறேன்குளிர்ந்து மயிர்க்குச்செறிதலிந்தக் குணமெல்லாம்வாதசுரக்கூறுமாமே. (௩௯)

பித்தசுரம்.

கூறுனபித்தசுரத்தின்குணத்தைக்-கூறிடவேநித்திரைதான்மெத்தக்காணல், தேறுனமலமூக்கஞ்சிவந்திருத்தல்-சிதறியேவயிறுகழிந்திடுதல்சததி, வாறுனவாய்ப்பிதற்றல்வாய்கான்கைத்தல் மகத்தானமூர்ச்சையொடுதாகங்காணல், தாறுனவெழுந்திருந்துமோடல்வீக்கல்- தவித்திடுதல்சந்தாபப்படுதல்காணே. (௪௰)

சிலேட்பசுரம்.

சந்தாபமானசேட்டுமசுரத்தைச் சாற்றிடவேநாக்குமுகம்வெளுத்துக்காணல், மந்தாபமார்நோதலிருமலிளைப்பு- வருகுதல்வாய்துவர்த்துமேஉரிசையில்லை,மூந்தாபமூச்சுவிடப்போகாமற்றூன் முயங்கியேவிக்கலொடுதாகங்காணல், சிந்தாபமிடறுநொந்துமேன்மூச்சாதல்- தினவெடுத்தல்தியங்கிடுதல்சேட்பமாமே. (௪௧)

வாதபித்தசுரம்.

ஆகுமேவாதபித்தசுரத்தின்செய்தி-அறிந்திடவேயங்கமெல்லா மசைகல்நோதல், நாகுமேநாக்குத்தான்கறுத்துக்காணல்-நபந்துபிரலாபித்தனித்னாயாதல், வாகுமேமலபேதமாயிருக்தல்-மலம் வெளுத்தல்வாய்கைத்தல்வடிவங்குன்னல், தேகுமேயறிவோடுதினைவுமாதல்-தியங்கிடுதன்மயங்கிடுதறிண்ணந்தானே. (௪௨)

வாதசிலேட்பசுரம்.

திண்ணமாம்வாதசிலேட்டுமசுரந்தான்- சடமெல்லாநொந்திடுதல்சுவாசங்காணல், எண்ணமாமிருமலுநாவெழுந்திருக்தல்-இசைந்துமயிர்க்குச்செறிதன்மிடறுநோதல், தண்ணமாந்தாபமேமிகவுண்டாதல்- தயங்கியேசஞ்சலித்தல்,வாய்தான்பெக்கல்விண்ணமாயிசனியொடுவியர்வைகாணல்-விக்கவழுகதிடவிதன்றன்விபாமாமே (௪௩)

பித்தசிலேட்பசுரம்.

விபாமாம்பித்தலேட்டுமசுரந்தான்-வியர்வையேமிகவருதல்வாய்தான்பெருதல், நிடாமயந்நித்திரையுமிகவேமிஞ்சல் - நெடிதுமயிர்சகுச்

செறிதலிருமலாதல், தபரமாமார்நோய்தல்தாபங்காணல்- தலைவலியும்பி டரிவலிதகைந்துகாணல். நபரமாநாக்கதுவும்வழவழத்தல்-நாக்கோடுமூ க்குநலமழிதல்காணே. (௱சச)

பூதசுரம்.

அருதலாம்பூதசுரத்தாண்மைகேளீர்- ஆகியந்தகுமரகண்டன்போ ல்வலிக்கும், கழிதலாங்கண்ணுருட்டியேவிழிக்கும்-காய்ந்தவுடன்சுருதி தியேபிரலாபிக்கும், விழிதலாம்போசனங்கண்மிகவிரும்பும்- வேண்டின தெல்லாமிகவுமாசையாதல், பழிதலாய்ப்பாடலொடுசிரத்திலாடல்- பார மயிர்க்குற்செறிதல்நித்திரையுமாமே. (௱சரு)

ஆசிரணசுரம்-

நித்திரையாமாசிர்ணசுரநேர்மைகேளீர்- நேர்மையாய்ச்சுரமோடே யிளைப்புக்காணல், மத்திரையாய்விக்கலொடுவயிறுமந்த - மாயிருத்தன் மார்புதுடைகுரங்குநோதல், பித்திரையாய்ப்பிளித்தேப்பமிடுதல்வாங்கி பேர்பெரியதாகமொடுமூச்சுகாணல், சித்திரையாய்வயிறுநொந்துபொ ருமிக்கொள்ளல்-சீதளமாயுடம்பெங்குந்திமிருமாமே. (௱சசு)

அபிகாதசுரம்.

திமிரானவதிகநடைகுதிரையானை- சுமையெடுத்தலதிகமாய்வேலை செய்தல், தமிரானதாகமோடிளைப்புகைகால்-தளர்ந்திட்டுப்பனிதனிலே சஞ்சரித்தல். அமிரானவபிகாதசுரந்தானுண்டாம்-அதின்குணங்கடாகமு டனுடம்பெல்லாநோம், வெமிரானவியர்வையொடாலோபம்ப்ரம்மை-மி கக்குளுந்தபோசனத்திலாசையாமே. (௱சஎ)

ஆகிகசுரம்.

ஆசையாமாகிகத்தின்சுரத்தைக்கேளீர் அதிகருளிருண்டாதல்தே கம்வாடல், தேசையாய்த்தேகம்புளகித்திருத்தல்- சிறியேயிருமலுடம் பெரிவுகாணல்,தாசையாய்ச்சந்தாபந்தலைகண்ணோவு தருவிலாவுடம்பெ ல்லாமுதுகுநோவு, ஆசையாய்ப்பத்தியத்தின்மனதுண்டாதல்- அதிகநி த்திரைவருதன்மயக்கந்தானுமே. (௱சஅ)

மயக்கமாய்மார்புமுகமெல்லாம்வாடி- வடிவுவெளுத்திடுதல்கண்தா ன்பசுமையாதல், தியக்கமாய்க்கண்ணுகிரிலிரத்தமில்லை-சிதறியேவயிறு கழிந்திடுதல்சத்தி, கயக்கமாயுள்ளங்காலுள்ளங்கையும்-கண்ணியேயெரி ந்திடுதற்குகங்காணல்,இபக்கமாய்திரேகமெங்குமழற்றல்காணல்- இசை ந்தபடிபேசலெண்ணம்வேறுமாமே. (௱சகூ)

மாறல்சுரம்.

வேருகியொருநாளன்மாறிக்காணல்- விளங்கிரண்டு நாள்மாறிச்சுர முண்டாதல், நாருகிமூன்றுநாளுமாறல்-நலத்தவைந்துநாண்மாறல ர்த்தாத்ரி, பாருகிவருதல்பதினைந்துநாண்மாறல்- பகர்பந்தவொருமாதந்

தான்மாறிக்காணல், வாறுகிவாதபித்தசேட்பங்கூடி-மருவிநின்றசுரந்தா னுமாகிகமாமே. (௱௫௰)

## ஆகிகசிதசுரம்.

ஆகிகத்திற்சிதசுரத்தாண்மைகேளீர் ஆகமெல்லாமிகக்கடுப்புற்ற னல்போலாகித், தேகிகத்திற்சிரமிடறுகண்களொடுபுருவஞ்சிறுவலியா ய்வலித்துமதபேதமாகி, நாகிகத்தில்நாக்குதடுவெழவழத்து - நல்லநித்தி ரையில்லாதுடல்திமிர்த்துஉருமம், மேகிகத்திற்சுரகுளிருந்தாகமூர்ச் சை-மிகத்தாபமயக்கமொடுதியக்கமாமே, (௱௫௧)

## ஆமசுரம்.

தியக்கமாமாமசுரத்தாண்மைகேளீர்-சிறுவலியாய்வலித்துமாசனங் கடுத்து, மயக்கமாமிரத்தமொடுசீதமபேதி- மருவுதண்ணீர்தாகஞ்சுரமு முண்டாம், கயக்கமாயுடம்பூதிவெளுறிக்காணும் - கால்கையுமசந்திருக் குங்கைக்கும்வாய்தான், தயக்கமாய்கால்கையுஞ்சயித்யமாகும்-சளியோ டுமிருமலுமாய்த்தவிக்குந்தானே. ௱௫௨)

## சர்மத்தைப்பற்றினசுரம்.

தவித்திடாசுரநாவின்றன்மைதன்னைச்-சாற்றிடதேசடத்தினிற்கு ந்தோலைப்பற்றித், துவித்திட்டசுரமோடுமெலும்பைபற்றிச்-சூட்சமா ய்க்காய்ந்தசுரமாந்தந்தன்னை, மவித்திடாதெரித்தசுரமாஞ்சந்தன்னை- மரு விநின்றசுரநாவின்வண்மைதன்னைக், குவித்திடாக்குணங்களெல்லாங்கு றித்துச்சொல்லக்-குறுந்தோலைப்பற்றியதோர்குணத்தைக்கேளே. ()

குணமாகச்சற்றுடலைக்காய்வதாகும்-குடிலமாய்நாடிமந்தமேயிருத் தல், தணமாகச்சற்றேதான்றலையேநோதல்- தண்ணீர்தான்வேண்டியே தாகங்காணல், பிணமாகவுடம்பெல்லாம்வெளுத்துக்காணல்-பிரமையாய் வாய்பேசல்வாய்நீரூறல், நிணமாகவுடம்பெரிதன்மயக்கங்காணல்- நேர் தோலைப்பற்றுசுரநேர்மையாமே. (௱௫௪)

## அஸ்தியைப்பற்றினசுரம்-

நேர்மையாயெலும்பைப்பற்றியசுரத்தின்-நிலவாங்கேண்மிக்கதாக ந்தான்காணல், மேர்மையாய்மேலெல்லாங்குளிர்ச்சிகாணல்-மிக்கபடச் சுரந்தானும்மேலிருத்தல், தீர்மையாய்தேகம்வெளுத்திளைத்திருத்தல், தேகமெல்லாம்பஞ்சுபோற்சிரணித்தல், ஆர்மையாயடிவயிறு தனிலே நோதல்-அதிகதீவிரமானமலம்போக்காமே. (௱௫௫)

## இரத்தத்தைப்பற்றினசுரம்

போக்கானரத்தகதசுரகுணத்தைப் ப...ன்றிடவேபிரமையாய்ச்சுரந் தான்காணல், தாக்கானவியர்வையொ...தாகமுண்டாய்த்தன்னுடம்பெல்

லாநோதன்மூர்ச்சைகாணல்- வாக்கானவுடம்பதுவுங்கண்ணனுண்டாய், வழுவழுத்துநாக்கெல்லாம்மஞ்சள்போலாம், நீங்கானநெஞ்சுதனிற்கோழையுண்டாம்-நித்திரையாய்மலப்பந்தநீக்குந்தானே. (௱௫௬)

மாமிசத்தைப்பற்றினசுரம்.

மலபந்தமாங்சகதசுரகுணத்தை-வழுத்திடவேயதிகசுரமாகக்காணல், சிலபந்தசுவாசமொடுவியர்வுதோன்றல்- சிக்கியதேகமெல்லாநொந்துகாணல், லபந்தவுதடுலர்தலாலாபித்தல்- உடப்புபுளகிதமாதன்மயிர்க்குச்சாதல், அலபந்தமனதுவியாகூலமாதல்- அருவியெனக்கண்ணிநீர்ததும்புந்தானே. (௱௫௭)

ஜன்னிவாதசுரம்.

ததும்பலென்றசன்னிவாதச்சுரத்தின்- தன்குணந்தான்கழுத்துநெற்றிமார்பயர்க்குப், வெதும்பலொடுதெந்திரமாஞ்சித்தப்ராம்மை-மிக்கானசரீரமெல்லாமெரிதனேதல், அதுமபலொடுகண்சிவந்துபச்சைபாய்தல் அதிகமாய்வாய்பிதத்தின்மூர்ச்சைகாணல், வதும்பலொடுமார்வலித்தல்தியக்கமாதல் மயிர்ச்செறித்தல்இருமல்விக்கல்சுவாசம்தானே. (௱௫௮)

சுரரோகநிதானம்-முற்றிற்று.

---

## சன்னிரோகநிதானம்.

தாமென்றசன்னியிடநிதானம்தன்னைச் சாற்றவேபதின்மூன்றும்தந்திரிகசன்னி, ஆமென்றஅத்தகமாம்சன்னிதானும்-அதிகருத்திரசன்னிசித்தவிப்பிரமம், தேமென்றசிதாங்கச்சன்னியோடு-சிறியதாத்திரீகசன்னிகர்னிகுபுச்சம், காமென்றகாணிகமாம்சன்னியோடு-கடுபக்திநேத்ரசன்னியும்தானுமே. (௱௫௯)

தானானாத்தேழுசன்னியோடு தக்கபிரலாபசன்னிசிங்குவாகம், ஆனான அபின்னியாசச்சன்னியோடு-அடங்கலாய்ப்பதின்மூன்றுசன்னிதன்னில், கானான ஆறுசன்னிசாத்யமாகும்-கடிங்தேழுசன்னியுமேஅசாத்யமாகும், பானானசன்னிபதின்மூன்றுக்குள்ள-பரிவானகுணமெல்லாம்பண்பாய்க்கேளே. (௱௬௰)

தாந்திரிகசன்னியின்குணம்

பண்டானதாந்திரிகச்சன்னியதின்குணந்தான் பகாமேவதேகமுமெப்போதும்போலாம், உண்பானவுடபபிமேலதுக்தல்காணல்- உயிர்சோபமாயிருக்தல்காலவலித்தல், திணபானசிமேட்டுமம்மகுந்துகாணல்-தியக்கமாய்க்கண்திறவாபறருலமூடல், தெணபானதிரோகமெல்லாமெரிச்சுல்காணல்-திரேகமெல்லாங்குளிர்மையாயிருக்குமபாமே (௱௬௧)

## அந்தகசன்னியின் குணம்.

இருக்குமேநாவரளுங்கண்ணீர்தாகம் - எரிவுண்டாய்த்தேகமெல்லாம்பிரமையாகும், தருக்குமேதலைசுற்றல்மிகவுங்காணும் தனனிலேவாய்பிதற்றும்வாந்தியாகும், விருக்குமேவிக்கலொடுசுரநாவுண்டாம் - மேனமையாங்கைகாலுமசதியாகும், பருக்குமேதலைதனிலேபாரங்காணும்பசர் அந்தகச்சன்னிபாதமாமே. (௱௬௨)

## உருத்திரகசன்னியின் குணம்.

சன்னியென்றருத்திரகந்தன்குணம்கேள் - தவிக்குமேபிரதாபமெரிதலுண்டாம், தின்னிசித்தப்பிரமையொடுகழுத்துநோதல், தேகமெல்லாங்குத்தலுண்டாய்த்தியக்கமாதல்- பின்னிடைகொள்ளாமற்பிரளல்பெத்தல்-பின்கண்டபேருடனேமுறைபாடாகல், உன்னவுதடுலருதலாய்க்கழுத்துநெற்றி உருத்திரகசன்னியெனவுரைக்கலாமே. (௱௬௩)

## சித்தப்பிரமைசன்னி.

உரைக்கவேசித்தப்ரம்மைசன்னிதன்னை உடம்பெல்லாமிக்கறுத்துநோதலுண்டாம், வரைக்கவேவாதமொடுபித்தமிஞ்சல்-மருவியசித்தப்பிரமைதன்னைவழிக்கல், நரைக்கநாவிசமுங்குணமாய்க்கனைல்- நலியாகிப்பாடியேவாய்பிதற்றல், இரைக்கவேசுவாசமொடுபேதியாதல்- இருந்தவிடம்விட்டுமேயேகும்பாரே (௱௬௪)

## சீதாங்கசன்னியின் குணம்.

ஏகவேசீதாங்கசன்னிதன்னை-இயம்பிடவேசரீரமெல்லாங்குளிர்ந்திருக்கல், ஆகவேயிருமலொடுஇளைப்புண்டாதல்-அசதியொடுவிக்கலுடம்பொல்லாநோதல், மோகவேவாந்தியோடழற்றல்மூர்ச்சை-மூரண்டுமேதேகமெல்லாமசைதல்காணல், பேகவேபேதியடிக்கடியுண்டாதல்- பிதற்றியேபுலம்பிமிகப்பேசுந்தானே. (௱௬௫)

## தாந்திரிகசன்னியின் குணம்.

பேசுமேதாந்திரிகசன்னிதானும்- பிதற்றலாய்வாய்ப்பிராவுதலுமாகும், கூசுமேநாக்கதுமிகக்கறுத்துக்-கூர்முள்ளுபோல்நாக்கிற்றண்ணீரில்லை, தாசுமேயுதடுலர்ந்துதாபங்காணும் தவிப்பெய்திவயிர்கழியுஞ்சுவாசமுண்டாம், வீசுமேதினவெடுத்துக்கண்பருந்து· மிகத்தண்ணீர்பாய்ந்துசுரமிகுதியாமே. (௱௬௬)

## கண்டபுச்சனை.

மிகுதியாய்க்கண்டபுச்சம்விளம்பக்கேளாய்- மிகப்பிரமைதான்வருதல்தாபமாதல், தகுதியாய்த்தலைசுற்றல்சந்தோஷித்தல்- தனைப்போலக்கழுத்துநரம்பிழுத்துக்கொள்ளல், பகுதியாய்ப்புலம்பல் பயப்பிடுதல்மூர்ச்சை-பாரமாய்ச்சரீரமெல்லாம்நோதல்காணல், வகுதியாய்வாந்தியேடிருமல்விக்கல்-மார்புதலைநோதலாய்மருவுமாமே. (௱௬௭)

## கர்ணிகாசன்னியின்குணம்.

மருவுகர்ணிகாசன்னிபாதந்தன்னை - வகுத்திடவே வாய்ப்பிதற்றி வெடித்தல்காணும், நருவுநாக்குக்கறுத்துப்பிரலாபித்தல்- நடுக்கியேவிக் கலோடிறைப்புகாணல், உருவுமுடம்பெங்குமேயசைதலாதல் உற்றசெ விகேளாதுகாதிரைச்சல், தருவுதலைபாரமாய்நடுக்கல்காணல்தண்ணீர்மே லடிக்கடிக்குத்தவித்தலாமே. (௬௬அ)

## பட்சிநேத்திரசன்னியின்குணம்.

தவித்தபட்சிநேத்ரசன்னிபாதந்தன்னைச் சாற்றிடவேசரீரமெல்லா ஞ்சயித்யமாதல், துவித்தகண்தான்றிறவாக்கினிலிருத்தல்- தூயகண்ணீ ர்பாய்ந்துமேதியங்கிக்காணல், கவிந்தகண்ணில்பார்வைகாணதிருத்தல் கடுஞ்சித்தப்பிரமையாய்ப்பிலாபித்தல், பவித்துடம்பெல்லாம்வாரம்ப ரைதப்புகாணல்-பரந்தெழும்புமக்கினிபோற்சுரமுமுண்டாமே. (௬௬௯)

## இரத்தெழுசன்னி.

சுரமானரத்தெழுசன்னிதன்னைச்- சொல்லிடவேநாக்குதடுவெடித் துக்காணல், நிறமானரொத்தமாய்பேதியாதல்-நெருப்பாகச்சுரமடித்தலூ ஷ்ணமாதல்,திரமானவாய்வாளல்சித்தப்பிரம்மை- தியங்கியேநினைவழித ல்விக்கல்காணல், தரமானதலைசுற்றல்கறுப்புநாக்குத்- தறுகாதுகேளாம லிருத்தல்தானே. (௭௰)

## பிரலாபசன்னி.

இருத்தல்பிரலாபமாஞ்சன்னிதன்னை-இயம்பிடவேசரீரமெல்லாமசை வுகாணல், புருத்தல்புலம்புலூஷ்ணமாயிருத்தல்- புண்ணாகச்சரீரமுநொ ந்திருமல்காணல், அருத்தல்தாபச்சுரமாய்தானடித்தல்- அடிக்கடிக்குவிக் கலொடுமூர்ச்சைகாணல், வருத்தல்மயிர்க்குச்செறிதல்முகமும்வாடல்- வாயறைிமோடியிடும்வண்மைதானே. (௭௧)

## சிங்குவாசன்னியின்குணம்.

வண்மையாஞ்சிங்குவாற்சன்னிதன்னைவழுத்திடவேசுவாசமோடு ஷ்ணமாதல், தண்மையாய்த்தாகங்கைகாலெரிச்சல் தருநாக்குக்கறுத்து முட்போல்வெடித்தல், கண்மையாக்காதுகேளாதிருத்தல் கடினமாய்வா திறவாமற்றூண்மூடல், உண்மையாயுடம்பெங்குஞ்சுரந்தான்வீசல் உட ம்புபாரித்திருத்தல்விக்கலாமே. (௭௨)

## அபின்னியாசன்னி.

இருத்தவேவாதபித்தசேட்பங்கூடி- இருமலொடுகவாசமாய்ச்சுரயு க்தல், நருத்தவேநாக்குபலவர்ண்ணமாகி- நாவதுதான்றண்டுநித்திரைம

மாதல், தெருத்தவேதேகமெங்குநோதல்காணல் - செடமெல்லாம்வியர் வையாய்ப்பலயீனமாதல் அருத்தவேயாகமெங்குமழன்றுபொங்கும்-அபன்னியாசன்னியிடவாண்மைதானே. (௱௭௩)

## சன்னிகளில்சாத்தியம்.

ஆண்மையாயாறுசன்னிசாத்யமாகும்-அதின்விபரமோவ்வொன்று யறையக்கேளாய், தாண்மையாய்த்தந்திரிகசன்னிதாந்திரிகசன்னி- தாக்கானபிரலாபச்சன்னியோடு, தீண்மையாய்ச்சித்தவிப்ரமசன்னியோடு சிங்குவாகச்சன்னிகாணீகச்சன்னியாறு, வெண்மையாய்விஷதத்தில்விடுபட்டேகும்-மேன்மையாஞ்சன்னியிடகுணமிதாமே. (௱௭௪)

## சன்னிகளில் அசாத்தியம்.

குணமில்லாசாத்யசன்னிகூறக்கேளாய்· சொடிதானருத்திரிகசன்னியோடு, அணமில்லாவந்தகமும்பக்கிநேத்திரம் அரிதானகண்டகுபுச்சமர்த்தேழோடு, திணமில்லாச்சீதாங்கமபின்னியாசஞ்சிரானவவிழ்கமிட்மிதுதீராது, பணமில்லாச்சன்னிபதின்மூன்றுஞ்சொன்னேன்-பக்குவமாய்ப்பார்த்திதனைப்பாலிப்பாயே. (௱௭௫)

## சன்னிகட்குக்காலவளவு.

பாலித்தசன்னிகட்குக்காலங்கேளாய்- பகர்தாந்திரிகசன்னிக்குநாளேழாகும், ஆலித்கவந்தகற்குப்பத்துநாளாம்- அதிகருக்கிருக்குப்பனிரெண்டேநாள்; சேலித்தசித்தப்ரமற்கிருபத்தோர்நாள்-சீதாங்கச்சன்னிக்குப்பதினைந்தாகும், காலுத்ததாந்திரிகற்கிருபத்தைந்து- காணுகின்றநாளேழிற்றீருந்தானே. (௱௭௬)

திருமேகண்டபுச்சம்பதின்மூன்றேநாள்- தீர்க்கருணீகசன்னிதொண்ணூறேநாள், பாருமேபட்சிநேத்ரசன்னிநாளெட்டு-பத்துநாள்ரத்தேமூசன்னிக்காகும், பேருமேபிரலாபமீரேழாகும்- பெரியசிங்குவாகத்துக்கிரெட்டாகும், ஆருமேஅபின்யாசம்பதினைந்தாகும்-அவதிநாட்சன்னிதனக்கறிந்திடாயே. (௱௭௭)

## தோஷசுரஉற்பத்தி.

அறிந்திடவேதருணசுரத்தவபத்யம்வந்கால்-ஆக்கிரமமாமேழுவிதத்தோஷமாகும், தெறிந்திடவேயேதென்றால்சொல்லக்கேளாய்-தித்திப்புப்புளிபழற்சிகசப்புமாகும், பறிந்திடவேபாக்குவெற்றிலையும்பாலும்-பரிமளமாந்திரவியமும்பச்சைத்தண்ணீர், தறிந்திடவேசயிற் பண்டம்ஸ்திரீசையோகம்-தரித்தேடுவாசித்தலழுதல்வழிநடையே. (௱௭௮)

வழிநடைதான்சுகந்தமாஞ்சந்தனம்பூ - மணமானகற்பூரஞ்சிவந்ததொருவஸ்திரம், நெழிந்திடைதான்நெய்யவெல்லமெண்ணெயுடன்மோ

ர்தான்-நெகிழ்ச்சியாந்தயிர்போற்கபுதாப்பிடவைகாற்று சுழிநடைதான்பெண்பார்வைமெய்நீண்டியாளல்-சுரவந்தவென்பதுக்கு ளொன்பதின்மேற், பழிநடையிப்படிக்கொத்தவபத்தியம்வந்தாக்கால் - பரிந்துமகாதோஷம்வந்துபிறக்குந்தானே. (௱எகூ)

தானென்றசுரக்கிலவபத்தியந்தன்னால் - சயித்தியக்காலுபசாரக்கால்பந்தத்தால், குளென்றசும்பிறந்ததோஷமாகும்-சுருக்கான மூர்ச்சையாய்மிகுந்துகாணும், காவென்றபிரமையொடுகெடியதாகம்-கருத்தழிந்துபுலம்பியேமார்தானோதல், ஆனென்ற அவபத்தியத்தில் வந்ததோஷம் அதின்குணத்தை யறிந்தானவிழ்தஞ்செய்யே. (௱அ௰)

செய்பமேவகருணசுரமாயிருக்கல் - ஸ்திரீசஞ்சாரஞ்செய்தாற்றிரிதோஷமாகும், உப்பமேவஇதின்குணந்தான் உடம்பெல்லாநோகும் உபரின்றமாருக்குளெரிகலுண்டாம், கையமேலசரிசமெங்குமாட்டங்காணும்-தவித்துமேபுலம்புமடிக்கடியெழுந்து, கையமேவகால்கைதான் குளிர்ந்திருக்கும்-கடினமாஞ்சித்தபிரமைகாணுங்காணே. (௱அக)

பிரமையாங்காச்சலொடுபிதற்றல்காணல் - பெருதாவுஷ்ணம்மாதல்தாகமாதல், வீறுமையாய்வயிறெறிதல்மூர்ச்சைகாணல்-வாதமாம்நாடியதுகுடிலமாதல், விறுமையாவியர்வையொடுசஞ்சலித்தல்-விக்கானவுழலையப்பிசமுமாதல், அறுமையாயங்கமெல்லாமழற்சியாதல்அதிகவிஷந்தோஷசுரமறிந்துபாரே. (௱அ௨

தோஷமாமகாசுரந்தான்சொல்லக்கேளாய் தூய்காணமயக்கமாய்ச்சுரந்தானுண்டாம், கூசமாம்நாளொன்றுக்கிரண்டுகாமூன்றுதுளிநடனேதாகமுண்டாய்க்காச்சலுண்டாம். நாசமாந்தலைநோவுநாக்கிலேதான்-நற்கடினமுள்ளைப்போலிருக்கல், போஷமாம்பிரலாபஞ் சித்தப்பிரமைபுலம்பலோடங்கமெல்லாம்பிரளும்பாரே. (௱அ௩)

பிரளவேசிங்குவாகதோஷங்காணும் - பொன்னிறமாய்நாக்கிலேகாணிருக்கும், மிரளவேநாவெடித்துநீரில்லாமல் - மிகதாக்குமுள்ளுபோற்றுணிருத்தல், திரளவேகாச்சலொமூர்ச்சையாகித்தியக்கமொடுமயக்கமாய்வியர்வைகாணல், வாளவேயுநட்சியொடுமிரட்சியாதல்-உகறிடுமேசரீரமெல்லாமுண்மைதானே. (௱அ௪)

உண்மையாங்கரணிசிங்குவாகதோஷம்உன்னைக்குக்கருக்கலர்த்தாமுள்ளுபோலாம், திண்மையாயெழுந்திருக்குஞ்சிக்கப்பிரமை-திரேகமெல்லாந்தினவெடுக்கும்வியர்வைகாணும், தூண்மையாய்சுவாசமோடழலை

யாகும்-சோரமாய்ச் சுரமுண்டாய்த் துடிப்புமாகும், சுண்மையாய்க்கால் கையுமசதியுண்டாம்-காந்தியாந்தேகமது கறுக்குந்தானே. (௱௮௫)

கறுப்பானகோஷமகோரேழுக்கானும்-காரியமாம்பக்யமவ பத்யமாகில், திறப்பானதிரிதோஷமொன்றொடொன்று- சேர்ந்துபின்னிநாடிய அகுடிலமாகி, நறுப்பான நாபியினிற்றோஷம்பற்றி- நாக்குமுகமூக்கோடுகண்சுருக்கி வெறிப்பாகுமநாளேழுபதினைந்தாகி- வியாதிசமனாகியே மேன்மையாமே. (௱௮௬)

## அதிசாரசுரஉற்பத்தி.

மேன்மையாமதிசாரம்விளம்பக்கேளாய் மிகக்குளுமையானதுகள் புசித்ததாலும், பான்மையாம்பாரித்தபசுமையாங்கறிகள் பருக்கவேயழன்றதுகள்காரத்தாலும், ஆண்மையாயழுதாலும்வமிநடந்தால்- அதிபேதியானதுகள்பச்சைப்பண்டம், பேண்மையாய்புசித்தாலு மிவைகளாலேபேதியாயதிசாரம்பிறக்குந்தானே. (௱௮௭)

## வாதாதிசாரத்தின்குணம்.

பிறக்குமேவாதாதிசாரச்செய்தி- பிரமியேவயிர்தானும்பேதியாகும், அறக்குமேயடிக்கடிக்குவாயுத்தான்பரியும்- அனலாகிநுரையுடனேமலங்கறுக்கும், திறக்குமேயடிவயிற்றிற்பிடுங்கல்நோதல் தேகமெல்லாநொந்துமேமலமுண்டாகல், மறக்குமலமறுகியேபேதியாகும்- வாந்தியொடுமந்தமாமயக்கமாமே. (௱௮௮)

## பித்தாதிசர.

மயக்குமேபித்தாதிசாரந்தானும் - மலஞ்சிவப்புற்றூஷணித்துவிடுதலாகும், தயக்குமேகாகமொடுவயிர்வலிக்கும்-தயங்கியேயழலைதான்மிகவுண்டாகும், வியக்குமேவியர்வையொடுமூர்ச்சையாகும்- மிக்காகவுகுடலேருமார்வலிக்கும் மயக்குமேமேனியெல்லாமழற்றிமீறும்-மிடறுநொந்துபுண்ணாகவெதும்பலாமே. (௱௮௯)

## சிலேட்பாதிசர.

வெதும்பலாஞ்சிலேட்பாதிசாரந்தானும் வெளுத்துமேசீதந்தான்மிகவுமாகும், வதும்பலாய்வயிறுநொந்துமலநுரைக்கும்-மார்க்கமாயிருமலொடுசுவாசங்காணும், அதும்பலாயடிவயிறுகனில்வலிக்கும்- அருசியாயிருந்துமேமேகமழைகட்டும், சிதும்பலாய்த்தேகமெங்குமவெண்மையாகுஞ்-சிக்குமேசலந்தானுங்கியக்கமாமே. (௱௯௰)

## தோஷாதிசாரம்

தியக்கானதோஷாதிசாரந்தானும்- தேகமுள்ளெரிச்சல்பிறங்குளுத்திகாணல், கயக்கானகாலசையுந்துளிர்ந்திருக்கல்- கண்டபேறுடன்புலம்பல்வாந்திபண்ணல், இயக்கானவிருமல்விக்கல்சுவாசமாதல்- எழுந்திருந்தாடுகலோடுகல்போராடல், வியக்கானசினைகாந்தம்வியர்வையுப்பல்- மிக்கநித்திரையில்லாதிருந்தலாமே. (௱௯௧)

## அசாத்யவதிசாரம்.

இருக்தலேயசாத்தியமாமதிசாரந்தான்- ஏாண்டத்தெண்ணெயைப்
போவிளகும்பேதி, மறுத்தலேமாமிசம்போல்வயிறுபேதி- மருவுகுாற்
கிழக்குாற்றுன்பட்டிருக்கும், திருத்தலேதேன்போலும்பேதியாகும்-சி
வறியேசுவாசமொடுகோழைகாணும், விருக்தலேவிக்கலொடுவியர்வை
யாகும்மீளாதுசாத்தியந்தான்விளம்புங்காலே. (௱௬௨)

விளம்பவேமலமிளகல்கட்டியாதல்- மிகக்கதுக்துவிடுதல்பலவர்ண
னமாதல், இளம்பவேயிரத்தம்போல்கழிதல்வீக்கம்- இளைத்தபொல்லா
நாற்றமாய்ப்பேதியாதல், திளம்பவேதேன்போலக்கழிசலுப்பல்-தேங்
காயின்றிருகற்போற்செரியாதிருத்தல், அளம்பவேயடிக்கடிதான்பேதி
யாதல்-அசாத்தியமாமதிசாரமறிந்திடீரே. (௱௬௩)

## சாத்யகுணம்.

அறிந்தசாத்தியகுணந்தான்ரோகிகட்கு அலர்ந்தகண்தான் கருநெய்
தற்பூப்போலாகும், தறிந்தமுகம்பூரணச்சந்திரன்போலாகும்- சமதாது
வாய்நாடிதானடக்கும், மறிந்ததொனிக்குயிலோசைபோலவாகும் மன
துதான்கறிசோற்றிலாசையாகும், தெறிந்ததுமல்தினம்பல்லுமுல்லைய
ரும்பதுவாய்ச்-சிவந்துமேநாக்குதனிற்றண்ணீருண்டாமே. (௱௬௪)

உண்டபின்புவியர்வைதான்கண்டுமாறல்-உறுவிசேஷங்காதிரண்டு
ஞ்சரியாய்க்கேட்டல், மிண்டபின்புமூக்குமணமறிதல்கைகால்மிகச்சிவ
ந்துநிக்கண்ணும்ரத்தமாதல், பண்டபின்புநித்திரையுந்தூரப்பார்வைபா
ர்க்கின்மெய்தான்சிவந்துமேபாங்குண்டாதல், நண்டபின்புநாடியுமே இ
றுகிக்காணல்-நற்குணஞ்சாத்தியமென்றேநவின்றிடாயே. (௱௬௫)

நவின்றிட்டவசாத்தியமாஞ்சுரமதிகமாதல் - நலங்கியேயதிகமாய்க்
குளிர்ந்துகாணல், அவின்றிட்டஅதமசுாமாயடித்தல்- அதிககண்ணைகா
ணிகக்கண்ணிரத்தமில்லை, கவின்றிட்டகண்காந்தியிலாதிருத்தல்- காது
கேளாதிருத்தல்வின்மேனிதன்னில், மூவின்றிட்ட மெத்தவுமேவியர்
வையாதல்-முகங்காந்தியிலாதிருத்தல்முகம்பாழாமே. (௱௬௬)

பாழாகக்கண்விழித்தவாக்கிருத்தல்- பாத்தகண்டான்மிகச்சிறுத்த
லாயிருத்தல், தூழாகத்தொப்புண்மார்மூக்குக்கால்கை- சோர்ந்துமேகு
ளிர்ந்திட்டுசுவாசங்காணல், மேழாகவிக்கலொடுதநுர்வாதம்போல்- மெ
ய்வலித்தல்சரீரமெங்குமிகவுமாடல், தாழாகத்தலைகோர்தல்பித்துபெத்
தல்-தடித்துமேதொண்டையினிற்சேட்பந்தானே. (௱௬௭)

தான்மூக்குமணமறியாதேயிருந்தல்- தருநாக்குமுரிசைநெரியாதிருத்தல், வான்மலங்கள்கபிலநிறமாயிருத்தல் மாசற்றநாடியதிசூட்சமாதல், தூனுடிசக்கரம்போற்சுற்றிபோடல் சுவதுக்கமொன்றுமறியாதிருத்தல், வேணிக்தவிபரமெலாங்காணுமாகில்-மீறுமசாத்தியமென்றேவிளம்பிடாயே. (௱௯௮)

விளம்பியதோர்வழக்கினிடவகையறுத்தல்- மிக்கானஜோதிஷந்தான்காலஞ்சொல்லல், வளம்பியதோர்தர்க்கமதுவாதுகூறல்-வயித்தியந்தான்பிணிமூன்றின்வண்ணை சொல்லல், தளம்பியதோர்சாஸ்திரத்தின்படியேபார்க்கில்-தாக்கானவிகபாமிரண்டுக்குண்டாண்மை, உளம்பியதோர்சாஸ்திரமில்லாமற்செய்தால்-உற்பவிக்குமியமாதியுடன்கண்டாயே. ()

நாடிதெரியாதபேர்கள்.

உற்பவித்தநாடிதெரியாதபேர்கள்- உண்டவர்க்கும்அப்பங்கம்பண்ணினோர்க்கும், கற்பவித்தப்பட்டினியாயிருந்தபேர்க்கும்- கனக்கவழிநடந்தவர்க்குமிளைத்தவர்க்கும், குற்பவித்தபேய்பிடித்தோர்கோபத்தோர்க்கும்-கூட்டுறவாய்ஸ்திரீபோகம்பண்ணினோர்க்கும், பற்பவித்தபத்தியந்தான்பிடித்தபேர்க்கும்பகர்கஞ்சாகள்ளபினிபாலிப்போர்க்கே. ()

பாலித்தவாய்வுசாதனையுள்ளோர்க்கும்பகர்கின்றகோழிமுதலிறைச்சிமீன்கள், சேவித்துத்தின்னவர்க்குங்குமரகண்டன்- சிறுகாக்கைவலியுளற்கும்பாஷாணங்கள், கோவித்ததெந்தகமும் விஷங்களான-கொடுமாமருந்துகளைத்தின்னபேர்க்கும், நாவித்தவிவர்களுக்குநாடிதானும்நடக்கைதான்செவ்வையிலேநடவாதென்னே. (௨௱௧)

என்னவேசாந்துவக்கிலியற்கைகேளாய்- இசைந்தவன்றபட்டினியேதானிருந்து, கன்னமேயிரண்டாநாள்காலமேதான் கைகழுவிப்பல்விளக்கிநாவழித்து, முன்னமேமுகங்கழுவிவெந்நீராலே- முடியாதுமறையவேவேட்டிகட்டி, பன்னமேயிடக்கைக்கிழாய்ப்படுத்துப்பட்டினியேதானிருக்கப்பண்புதானே. (௨௱௨)

பண்பானமூன்றுநாள்காலமேதான்- பல்விளக்கிமுகங்கழுவிவிபூதிசாற்றி, துண்பானசூரியநமஸ்காரம்பண்ணிச்-சுருதியைத்தானயந்தோர்க்குத்தானமீந்து, வண்பானவயித்தியர்க்குவரிசைநல்கி-மகாசெபங்கள்பண்ணியபின்மத்தியானம், நண்பாகநாலொன்றுய்காய்ந்தவெந்நீர்-நலக்கருந்தித்தேர்த்தொருவிற்றருந்திடாயே. (௨௱௩)

அருந்தியேநாலாநாள்கழித்துமற்ற- ஐந்தாநாள்கற்கமன்னச[illegible]மீந்து, நருந்தியேநவசாரந்தான்கழிக்குபட்டுப்-நண்பானகற்கமொடுகஷாய

நல்கத், தருந்தியேகாமதுதான்தணியாவிட்டால் சாந்தகமாங்குணமான வைதியர்கையில், வருந்தியேகாமப்பூதைதகுதிணையுமீந்து - மாத்திரைதான் செந்தூரமருவியுண்ணே. (௨௱௪)

உண்ணவேபத்தியமாய்ச்சுரம்விட்டேகும் ஓங்கியதோர்சுரந்தணிந்தபின்புதானும், விண்ணவேவிரேசனங் ள்வாங்கிக்கொள்ளமேன்மையாஞ்சடமதுதான்மெலியதாகும் வண்ணவேவாதசுரந்தனக்கேழ்நாளுந் மாசற்றலங்கணந்தான்மார்க்கமாகும், பிண்ணவேபித்தசுரந்தனக்கோராறு-போனலங்கணந்தான்புகலாமே (௨௱௫)

புகலானசேட்பசுரந்தனக்குத்தானும் - புகலுமேசொன்பதுபவாசமாகும், வகலானவாதசுரந்தனக்குத்தானும்-மகத்தானவுபவாசமூன்றுநாள்தான், திகலானபித்தசுரந்தனக்குத்தானும்- சிறிதாகப்போசனந்தானிடவுமாகும், நகலானசிலேட்டபமாஞ்சுரந்தனக்கு, நற்சூடுசஞ்சிகொடுத்திடநன்றாமே. (௨௱௬)

நன்றானவாதசுரந்தனக்குக்கஞ்சி நவநாழிக்குள்ளாகநாட்டலாகும் பன்றானபித்தசுரந்தனக்குக்கஞ்சி - பத்துநாழிகைதன்னிற்கொடுக்கலாகும், மன்றுசிலேட்பசுரந்தனக்குக்கஞ்சிமத்தியானந்தன்னில்வார்க்கலாகும், மின்றானவிக்கிரமவிதியேசெய்தால்-மேன்மையாமருந்தென்றேவிளம்பலாமே. (௨௱௭)

இலங்கணமில்லாதபேர்.

விளம்பவேயதிசாரமானபேர்க்கும்-மிகுந்தகெர்ப்பிணிஸ்திரீக்குங் கிழவனார்க்கும், இளம்பவேபாலர்க்கவர்க்குங்குழந்தைகட்கும்-இந்தணணாய்க்காருக்குஞ்சயரோகிக்கும், உளம்பவேயுபவாசமானபேர்க்கும்-உறுபித்தரோகிக்குங்கிராணியோர்க்கும், தளம்பவேசோகமாம்ரோகியர்க்கும்-குடுமுட்காச்சலாஞ்சுகதேகர்க்கே. (௨௱௮)

தேகர்க்குங்கெசத்ரசமேற்கொண்டோர்க்கும்-சிமையாரமெந்நேரமெடுக்கின்றோர்க்கும், தாகர்க்குஞ்சலரோகமானபேர்க்கும் - சஞ்சலக்கொர்பலபந்தமானபேர்க்கும், மாகர்க்குமகத்தானயோகத்தோர்க்கும் - நங்கையொடுவெகுபோகமருவினோர்க்கும்-வேகர்க்கும்பிரமியமாம்வேட்கையோர்க்கும்-மிகவாகுமிலங்கணமாம்விதியாகாதே. (௨௱௯

விதிபாகவயித்தியந்தான்செய்யும்பேர்கள்- வேதமாஞ்சாஸ்திரத்தின்விதிவைப்பார்த்து, நிதியாகதேகத்தின்செயலைப்பார்த்து- [illegible]யது திசைவாய்வுகிட்டம்பார்த்து, அநி [illegible]லக்கினியின் நிலையைப்பார்த்து

அசாத்தியசாத்தியமிரண்டுமறிந்துணர்ந்து; மதியாகமருந்தினிடவண்மைபார்த்து, மார்க்கமாயவயித்தியதகைவளமாய்ச்செய்யே (௨௱௰)

லங்கணவர்ச்சிதம்- சன்னிரோகநிதானம்-முற்றிற்று.

# குன்மரோகநிதானம்

செய்பானகுன்மத்தினும்பத்திகன்னைச் செப்பிடவேதுவர்ப்பான பொசிப்பினாலும், மையானமங்கையுடன்மார்க்கத்தாலும் - வகையாகுங் கிழங்குவகையருந்தலாலும், உய்யானமிளகுகாயுறைப்பினாலும் - உறபகையையடிக்கிடினுமங்கத்தாலும், நையானசண்டாளர்கோபத்தாலுமசலிப்பாலுங்குன்மமவந்துதாககும்பாமே. (௨௱௰௧)

பார்க்கவேகுருநிந்தைபண்ணினோர்க்கும் - பாலகனைச்சிசுவைப்பட்டினிவைக்கோர்க்கும், மார்க்குமமாமாதாவைப்பிதாவைநிந்தைவஞ்சனைதான்செய்தோர்க்குமடந்தைதன்னைக் கார்க்கவேகற்பழித்தகாமுகர்க்கும்-கருதியேசிவநிந்தைபண்ணினோர்க்கும், ஆர்க்கவேயஷ்டகுன்மமணுகுமென்று அரன்சொல்லத்தேவிசொலுளறிந்துபாரே (௨௱௰௨)

செய்யவேயஷ்டகுன்மச்செயலைக்கேளாய்- செயலானவாயுகுன்மம் வாதகுன்மம், ஐயவேபித்தகுன்மமெரிகுன்மமாகும் - ஏலானவலிகுன்மஞ்சத்திகுன்மம், தையவேசன்னிகுன்மஞ்சேட்பகுன்மஞ்சாகாசமாங் குன்மமெட்டுமாகும், கொய்யவேயிதினுடையகுணங்களெல்லாம்-குறிப்பறிந்தொவ்வொன்றாய்க்கூர்ந்துபாரே. (௨௱௰௩)

## வாயுகுன்மம்.

பார்க்கவேவாயுகுன்மம்பகரக்கேளாய்-பருகியதோர்பதார்த்தங்கள் செரித்திடாது தோர்க்கவேபசனங்காண்செல்லதாகும் துருத்திகொண்ட காற்றதுபோல்வயிறுமுப்பும்-ஊர்க்கவேஉளறுபெலன்றான்கெடுக்கும் உடலுணருநடைகுறையுமோச்சலாகும், வேர்க்கவேயடிவயிறுசனிலே வந்து-மிகப்பிரண்டுபில்லுப்போல்விருத்தமாமே. (௨௱௰௪)

## வாதகுன்மம்

விருத்தமாம்வாதகுன்மம்விளம்பக்கேளாய்மிகச்சுணுநடைகுறையும்மலமவிடாது, உருத்தமாமுடல்காணும்பிகந்கடுக்கும்-உறக்கமொடுதியக்கமாயுழலையாகும், தகுத்தமாஞ்சரீரமதுகனத்துத்தோன்றும் - சங்கையாயசன மிகத்தானுஞ்செல்லா, பிருத்தமாம்பெலக்கேடாங்கைகாலோயும்-பேசொணுநாவரலுந்தலையுநோமே. (௨௱௰௫)

## பித்தகுன்மம்

நோம்பித்தகுன்மத்தினுட்பங்கேளாய் - நுனிமஞ்சணிறம்போல முகமுமாகும், வாஞ்சத்திவாந்தியுண்டாய்மனமறுக்கும்-மயக்கமாய்வெ

ஞ்சதனிற்கோழைகட்டும், கார்கொருப்பாய்த்தாணிருக்குங்கைகாலோயு
ம்-கடுவெய்யிற்கண்டவுடனேதலைசுழற்றும்-மூமூத்தாஞ்சிவந்திருக்குந்தா
கங்காணு ம-முக்கியேமலம்வீழும்மூச்சுண்டாமே. (௨௱௰௬)

சிலேட்டுமகுன்மம்.

உண்டாகும்வாய்நீர்தாணிலைப்புண்டாகும்- உடலவற்றிருகருத்த
ழியுமூத்திரைக்கும், வெண்டாகும்பெலன்கெடுக்குமசனந்தள்ளுமமிக
கான தலையதிக்குமவெளுறுமேனி, தெண்டாகுநெஞ்சதனிற்புகைச்சலு
ண்டாம-திடுக்கிட்டுநடுக்கலுமாந்தேகந்தானும், திண்டாகுந்தலையங்கு
ம்பாரமாகும்-சிலேட்டுமமாங்குன்மமென்றே செப்பலாமே. (௨௰௭)

சன்னிகுன்மம்.

செப்பலாஞ்சன்னிகுன்மச்செயலைக்கேளாய் - தியக்கமொடுமயக்க
மாய்க்குளிருண்டாகும், அப்பமாமசனமிகத்தானுஞ்செல்லா அடிவயற்றி
லிரைச்சலுமாம்வாய்நீரூறும், உப்பமாய்வயிற்கழியுமூவ்வணமாகும்-உ
வர்க்கும்வாய்நெஞ்சதனிற்புகைச்சலுண்டாம், தெப்பமாய்மூச்சதுவுஞ்
சிதைத்தெழும்புந்-தேகமெங்குங்குளிர்ச்சியுமாய்த்திடுக்குமாமே. ( )

எரிகுன்மம்

திடுக்குமாமெரிகுன்மஞ்செயலைக்கேளாய் - சிறுவயிற்றிலெரிந்து
மேகுடல்குமட்டும், வடுக்குமவாய்நீர்சுழற்றுந்தலைவலிக்கும் - வயிறுப்
பிக்கிறுகிறுக்கும் பிளிந்தேக்காகும், வெடுக்குமயிர்கால்தோறும்வியர்
வையாகும்-மிகப்பொருமிவயிறுகழிந்திரைச்சலாகும், எடுக்குமேயுடலி
ளைக்குமிரங்காதன்னம்-எரியுமேயுடலெங்குமிருமலாமே. (௨௰௯)

சத்திகுன்மம்.

இருமலாஞ்சத்திகுன்மமியல்பைக்கேளாய்- ஈரலுக்குள்ளெரிவா
குமேக்கமாகும், திருமலாந்தியக்கமொடுமயக்கமுண்டாம்-சிறுவலியுமு
ண்டாகிவாந்தியாகும், பொருமலாம்பெலன்கெடுக்கும்மலம்விடாதுபே
ரானஅக்கினிதான்மிகவுமுண்டாம், செருமலாம்நடைகுறையும்அருசி
யாகும்-சிறுநசம்பெல்லாம்புடைத்துத்திமிருதாமே. (௨௨௰)

திமிராகவயிறாறுந்திரையுமேனி-செடமுலைந்துகருத்தழியுஞ்சிக
றுந்தூக்கம், வமிராகதயிறிறைத்துமுன்போலாகும்-வருத்தமாயசனமி
கத்தானுஞ்செல்லா, மூமிராகவிலாவதனிற்சொருகலாகுமுதுகுதண்
டுவலிகாணுமிடுப்புநோவாம், கமிராகக்காயமதுகடுப்புக்காணும், கனசுர
மாய்ப்பொய்ப்பசியுங்காணுங்காணே. (௨௨௧)

காணவேபஞ்சபூதியத்தைச்சொன்னேன்- கருக்குளைத்துக்தத்து
வத்தைக்கருதிச்சொன்னேன், நாணவேநாடியிடநிதானந்தன்னிலுற்கு

றிப்புந்தூர்க்குறியுங்நாடிச்சொன்னேன், ஆணைவயஷ்டவிதப்பரிட்சை சொன்னேன்-ஆக்கமாஞ்சுரமெல்லாமடங்கச்சொன்னேன், சாணவேசன்னிகுணஞ்சாதயவசாத்யஞ்சாற்றினேன்குன்மத்தின்சார்வைத்தானே

குன்மரோகநிதானம்-முற்றிற்று

---

## சூலைரோகநிதானம்.

---

சார்வானசூலையிடத்தன்மைகேளாய் சக்கசிறைப்பட்டிருக்குந்தீமையாலும், ஆர்வானஅறச்சுடுசோறருந்தலாலும் - அறவுமேசலிப்பாலுமோடலாலும், தார்வானசடைமிகுக்கசண்டையாலும்-கணைகயானதுவர்ப்பொசிப்புபுகைக்கலாலும். மீவானமோகத்தின்புணர்ச்சியாலும்-மிகுந்தபலியுறுதலினாற்சூலையாமே. (உஉங)

ஆமென்றவன்னத்துக்கிடையூறுபண்ணி- பகதிபாசகேசிகளைபடிக்குதபேர்க்கும், காமென்றகர்ப்பமுடையமாதைக்காதியேமனதினிவிச்சித்தபேர்க்கும். வாமென்றவாழ்மரக்கைவெட்டினோர்க்கும்-வழிமறித்துப்பொருள்பறித்தமதிகேடர்க்கும், எமென்றஎச்சில்தனைக்கலந்தபேர்க்கும்-இகத்திலேநோவெய்திச்சூலையாமே. (உஉச)

சூலைதான்பதினெண்கின்சூக்ஷங்கேளாய் துளைக்கின்றமேகத்தின்சூலையோடு, வாலையாமுகிரியென்றசூலைகாணும் வாதத்தின்சூலையொடுபித்தசூலை, ஆலைதான்சிலேட்டுமஞ்சூலையாகும் - ஆமென்றசூலையிற்கார்சூலையாகும், கோலகுன்மச்சூலையொடுலத்திசூலை-கொடிநிதம்பச் சூலையொடுசுரச்சூலையாமே. (உஉரு)

ஆமென்றசுரசூலைகெர்ப்பச்சூலை - அதிபக்கச்சூலையொடுதூரச்சூலை, பாமென்றபகினைந்துசூலையாகும்- பசியாலும்பழகியதோர்காடியாலும், தாமென்றசிலைநூதலாள்புணர்ச்சியாலும்-சருகிலையின் நீராலுஞ்சண்டையாலும், வேமென்றசமருந்தின்வெட்டையாலும்மிடுக்கானசூலைவந்துவிளையுந்தானே. (உஉசு)

### மேகசூலை.

விலைமேகசூலையின்றன்விபரங்கேளாய்-மிகக்கைகால் நடுப்போடுகுடைச்சலாகும், கணைநீருமங்கட்டிக்கைகால்வீங்கவ- கசிவோடுநளிருண்டாமேனியெங்கும், இளமையவரிசமுதுகான்சிவப்புமாகும்- எரிச்சலுண்டாங்கேகமெல்லாமினைத்துக்காணும்-உளைவோடுசுரமாகுந்தாகங்காணும்உறுகின்றபிரமையாமயக்கமாமே. (உஉஎ)

### முகிரிசூலை.

மயக்குகின்றசூலையின்றன்குணத்தைக்கேளாய் - மறைப்பானவாண்குறியினடியேயுற்று, அயக்கின்றவழன்றுகீழ்முதுகைப்பற்றி-அபா

னன்மேடைக்குடலையெச்சுற்றி பயக்குகின்றபாளியேவலிக்கும்பேர்து-படர்நாவிகளைநடுவிற்குழிக்குவாங்கும் தயங்குகின்றதலைவலியுஞ்சுருண்காணும்-தக்கணணுஞ்சிவந்துநோதலும்புந்தானே. (௨௨அ)

வாதசூலை.

கறுப்புமேகால்கைகாணுளைவுகாணும்-தடிப்பாகத்திமிருண்டாய்க்கூக்கமின்சுப, வெறுப்பபியேயபங்கமெல்லாங்குளிர்ந்துஞ்சற்றேறமெய்காணும பளபளக்குங்கண்முங்காணும, கறுப்புமேவில்நாணிக்கடுசுமாகும்- கடுத்துமேசிறுநீருஞ்சிவந்துவிழும். அதிர்ந்துமேமெய்யெல்லாங்குடைந்துநோகும-அதிகரிக்கும்வாதசூலையாண்மைதானே. (௨௨௯)

பித்தசூலை.

ஆண்மையாஞ்சரீரவற்றிக்கொப்புமுண்டாய்-அறவேவகைகாலுளைந்துகனத்திரண்டு, நோன்மையாய்நோய்மிகுந்துநோக்கங்கெட்டு-நுணுக்கமாந்தாதுவெல்லாநொய்பதாகி. செண்மையாட்சடக்கினிடச்செழுமைமாறித்-திரங்கியேமிகமின்னித்தெளிவில்லாமல், பேண்மையாமயக்கமொடுபலக்கேடாகும்-பித்தமாஞ்சூலையென்றேபேசலாமே. (௨௩௰)

சேட்டுமசூலை.

சூலையாஞ்சேட்மத்தைச்சொல்லக்கேளாய்-கொண்டை யெல்லாம்வலித்துமேசோழைகட்டும், ஆலையாமடிவயிறுகன்னில்நோவாம்-அங்கமெல்லாம்பண்போலஅழற்றல்காணும், வேலையாமெய்யெங்கும் வியர்வைதோன்றும்-மெய்வெளுத்துநிகக்கண்ணுமிரத்தமில்லை, பாலையாயிருந்தவுடல்பஞ்சுபோலாம் பலகாலம்வாயூறிப்பாவுமாமே, (௨௩௧)

ஆமசூலை.

பாவுமேயாமசூலையின்குணந்தான் -பாவானவசீரணத்தின்பண்பிறனும், காவுமேதண்ணீர்தான்குடித்தலாலும்- தகுந்தபுளிப்புக்கசப்புத்திக்திப்பாலும், ஊவுமேயுபவாசம்பண்ணலாலும் -உறவளர்ந்தாமமொடுசீதந்தானும், வாவுமேவயிறேருடுவிலாப்பக்கங்கள்வலித்துமேகடுப்புமிகக்குத்துண்டாமே. (௨௩௨)

உத்காரசூலை

குத்துமுக்காரசூலையின்குணந்தான்- கோர்வையாய்விலாவுகனில்முதுகில்நெஞ்சில், அக்கிபினில்நாபியிலபாணமாங்குதத்தில் - அதிகணமாங்கிசந்தான்வளர்ந்துமேவிப், பக்குமனற்பருக்கைப்போறசலத்துவாரப்-பதிநெருக்கிமூத்திரமாங்கிரிச்சியுண்டாய்க், தக்குசடங்கடுப்பெடுத்துமதிகலங்கித் தளர்ச்சியொடுமயக்கமாய்த்தள்ளுந்தானே. (௨௩௩)

### குன்மசூலை.

தள்ளுகுன்மச்சூலைதனைச்சொல்லக்கேளாய்-தளருமலமூத்திரங்காண்சிக்கலாகி, வள்ளுவயிற்பொருமிசத்தியிளைச்சல்மூர்ச்சை- வலித்தெரித்துச்சூலைபோல்வயிற்றிற்றோன்றி, தெள்ளுவாய்நீரூதத்தெப்பமுண்டாம்-சிறுத்துமேயூணுமெந்தவெதும்பலாகி அள்ளுமேயங்கமெல்லமழற்சிவாகும்-அதிகமாயுடலுலர்ந்தலுசியாமே. (௨௯௪)

### உலத்திசூலை.

உடலானவுலத்தியென்றசூலைதன்னை-உரைக்கவேயூஷ்ணமாம்பித்தந்தன்னால், வடலானவக்கினியால்வாட்சிதன்னும்- வலித்துத்தான்மெத்தவேவீங்கித்தோன்றும், குடலானவாதத்தால்குன்மத்தானும்- குடிலமாய்க்கனத்துமேயுடம்பெல்லாநோம், தடலானவுள்வலியும்பிறவிக்கமாகித் தடித்திலர்ந்துசடமெல்லாந்தயங்கும்பாரே. (௨௯௫)

### நிதம்பச்சூலை.

தயங்குகின்றநிதம்பமாம்சூலைதன்னைச்-சாற்றிடபிள்ளையதுதனைப்பெற்றக்கால், உயங்குகின்றயோனிவாய்வாநத்தமாகி உள்ளடங்கிச்சயிரத்தமூளைத்தேங்காய்போல், அயங்கின்றயோனிவாயடைத்துக்கொண்டு-அசைக்கிலங்குநீர்பெருகிசகனத்துள்ளே மயங்குகின்றசரீரமெல்லாம்வாடியூதி-மாசற்றசடந்தானும்வெளுப்புமாமே. (௨௯௬)

### காசூலை.

மாசற்றகாசூலைவண்மைகேளாய்மநவுதிசந்தான்திரண்டுதோலைப்பற்றித், தேசற்றவளையம்போற்றிரண்டுநொந்து- சிறந்திருந்தகரும்பின்பழுத்தங்கித்தங்கிக், கேசற்றநோவாகிக்கிழ்மதுரைப்பற்றிக் கெட்டியாய்வலித்துமேநோவுமுண்டாம், காசற்றகைகாலும்வலியதாகும்-கருத்தழிந்துமேனியுமேகருதும்பாரே, (௨௯௭)

### சுரசூலை.

கருகின்றசுரசூலைகருத்தைக்கேளாய்- கடிந்திரண்டுபக்கமாஞ்சூலைதோன்றிவருகின்றவாய்தனிலேரத்தமுண்டாய் வடிவெல்லாஞ்சுரந்தோன்றியுளைச்சலுண்டாய்ச், சொருகின்றதேகமெல்லாஞ்சூலையுண்டாய்க்-சுருக்கியேவயிறதுதான்வலித்துநோகும், தெருகின்றநெஞ்செரிந்து வாய்நீரூறிச்-செறியாமல்வாந்தியாய்த்தியக்கமாமே. (௨௯௮)

### பக்கசூலை.

தியக்கானபக்கமாஞ்சூலைகேளாய்- திருகியேயண்டத்திம்பொருமிநொந்து, ஐயக்கானசுரந்தோன்றிவலிந்துநொந்து-உடம்புப்புண்போலுளைந்துந்தலைவலியுமாகிப், பயக்கானபக்கத்திற்குற்றலுண்டாய்ப்- பாரித்துக்கனத்துமிகத்திமிருமுண்டாய்ந், மயக்கானகைகாலுமோச்சலாகிக்-கண்புகைந்துகருமாறிப்பாச்சலாமே. (௨௯௯)

## கெர்ப்பசூலை

பார்ச்சல்கெர்ப்பசூலையினைப்பகரக்கேளாய்- பண்டபனமருந்திட்டின் குணத்தினாலும், வாச்சலஞ்சனையாலுஞ்சூனியத்தாலும்- மாசற்றகாயமதுவேட்கையாலும், பீச்சவேமகப்பேறினுசீரக்காலும்-பிரண்டு சிக்கிக் கீழ்வயிற்றிலிரத்தம்வீழ்ந்து, கெச்சலாய்க்கெர்ப்பமேபோற்பிரள்வுற்றாறிக்கீழ்வயிற்றில்வலிதோன்றிமயக்கமாமே (௨௪௰)

## தூரசூலை.

கீழ்வயிற்றிற்றூரமாஞ்சூலைகேளாய்-கெடியுண்டிமறுக்துமேவாய் நீறாறிப், பாழ்வயிற்றில்செரித்திரல்பற்றிப் பக்கமன்றிச்சிரத்தோடுவயிரூதி, ஆழ்வயிற்றிற்றிரண்டுமேபிரள்வுற்றேகான்-அடிக்கடிவந்தமர்ந்தொதுங்கியேழும்பிமீளுங், கீழ்வயிற்றில்வெளிபட்டுதிரஞ்சிக்கும்கிளத்துமலசலந்தானுஞ்சிக்கிப்போமே. (௨௪௧)

சிக்கானபதினைந்துசூலைகன்னில்- சிறப்பாகக்குணைகுணத்தின்செயலைச்சொன்னேன், அக்கானவசாத்தியமாஞ்சூலையாறு ஆகாசகுணங்கண்டாய்மூதிரிச்சூலை, உக்கானவுக்காரசூலைசேட்பம்- உருகிருன்மச்சூலையோடாமைசூலை, நிக்கானநிதம்பமாஞ்சூலையசாத்யம்-நீங்கியசாத்தியநவமாஞ்சூலையென்னே. (௨௪௨)

சூலைரோகநிதானம்-முற்றிற்று,

---

# வாத இயல்பு.

என்னவேவாதம்தானெண்பகாகும்- இகத்திலேமனிதர்களுக்கெய்யும்வாறு, பின்னவேபொன்தனையேசோரஞ்செய்து பெரியோர்கள்பிராமணரைத்தூஷணித்தும், வன்னமே வச்சொத்திற்சோரஞ்செய்துமாதாபிதாகுருவைமறந்தபேர்க்கும்,வ வேவேதத்தைநிந்தைசெய்தால்- காயத்திற்கலந்திடுமேவாதந்தானே. (௨௪௩)

தானென்றகசப்போடுதுவர்ப்புறைப்பு- சாதகமாய்மிஞ்சுகிலுஞ்சமைத்தவன்னம், ஆனென்றவாறினதுபொசித்தலாலும் - ஆக யதேறலதுகுடித்ததாலும், பானென்றபகலுறக்கமிராவிழிப்பு-பட்டினியேமிகவுறுதல்பாரமெய்தல், தேனென்றமொழியார்மேற்சிந்தையாதல்-சீக்கிரமாய்வாதமதுசெனிக்குந்தானே. (௨௪௪)

## வாதம்வர்த்திக்குங்காலம்.

வாதவர்த்தனைகாலமேதோவென்னில்-மருவுகின்றவானி கர்க்கடகமாகும், ஆதவைப்பசியோடுகார்த்திதன்னில்-அடருமேமற்றமாதங்கள்தன்னில், போதவேசமிக்குகின்றகாலமாகும்-பொருந்தியேயிவர்தொழில்தான்கண்திறத்தல், காதவேகண்மூடல்-கைகாலசைத்தல்-கடிந்தோட்டமுடக்கலொடுநீட்டலென்னே. (௨௪௫)

என்னவேவாதமதுஎண்பதாகும்- எற்றமாம்பேருடையவெழிலைக்கேளாய், வன்னவேதஸ்தம்பம்வாதகர்ஷணம்-வகையானகாஸ்தம்பந்தஸ்தம்பந்தான், பொன்னவேபூசிரவாதத்தினோடு- பெரியகளாஞ்சகமூருஸ்தம்பம், குன்னவேவாதகர்ன்னங்குரிஷகிரிஷ்கம்-கூறுனநரித்தலையின்வாதமாமே. (௨௪௬)

தலைக்கும்பவாதமொடுமலைக்தகம்பம் - தருக்கானபாணிகம்பங்கூனிவாதம், அலையஆகுனிவாதம்அவேஷவகந்தான்-அதிவாதம்உபகதம்பம்நெற்றிசூலைநலைகன்னசூலைசெவிபடுவாயாகும் - கடுபக்கவாதமொடுகூஷவாதம்-திலையபெய்வாதமொடுபிராணலையம்தான் - செலஸ்தம்பமொடுசந்துவாதமாமே. (௨௪௭)

சந்துவாதக்கோடுசகனவாலங் - தரித்தஅத்புதவாதமூரகன்வாதம, உந்துமூரகாரியோடுவஸ்வதம்பம்-உறுதிபசத்தம்பம்நேத்திரபவுக்ரம்அந்துதெண்டவாயுவொடுவஷ்டதந்திரம்- அதிசவணவாயுவொடுமகாவாதந்தான், முந்துமிருக்துவாதமோடுதாவாதம்முகிழ்-மூத்ரவதாவாதமுமாமென்னே. (௨௪௮)

என்றசுக்கிலவாதஞ்சவரங்கவாதம் - எழில்ஊர்த்தவாதமொடுமஞ்ஞானஸ்தம்பம், தென்றகிரக்கம்பவாதமும்சத்தம்பம்- செயவச்சிரரூபமொடுகண்டக்கிராம், நன்றதாம்நகாரியொடுபதிகவாதம்- நலிபோனிசூலையொடுகர்ப்பசூலை, குன்றவஷ்டசூலையொடுகுடல்வாதந்தான்- குறியசுவாதமெச்சுவாதந்தானே. (௨௪௯)

தான்மூடுவாதமாம்வசுவாதந்தான் தனுபீசத்தம்பமொடுதந்திரவெட்டி, வான்வாதசுரோணிதஞ்சிநவாதசுரோணிதம்-மகத்தானவயகிதவாதச்சுரோணிதம், ஊனுதிரவாதசுரோணிதந்தன்னோடு-உறுபயித்யவாதச்சுரோணிதமுமாகும், தேன்செட்பவாதசுரோணிதந்தான்மிக்கச்- சினத்துதாவாதசுரோணிதமுங்காணே. (௨௫௰)

காணவேகுணவவதானகமாம்வாதம்- கண்டகவதானகமாம்வாதமாகும் தேணவேசிரக்கம்பவதானகந்தான்-சிறியதோர்வாததலைநோக்காடு, பூணவேபித்தத்தின்றலைநோக்காடு- புகழானசேட்டுமத்தின்றலைநோக்காடு, சாணவேசன்னிவாதத்தின்றலைநோக்காடு-தருாத்தபித்தத்தின்றலைநோக்காடே. (௨௫௧)

நோக்கானகிருமிகுந்ததலைநோக்காடு- நுகர்சூரியவாதமொடுதந்திரவாதம், ஊக்கானகர்ணவாதந்தன்னோடு - ஒருதலையினவகாதவாதமுமேயாகும், வாக்கானவாதகன்னசூலையோடு- மருவியதோர்பித்தகன்னசூலையாகும், தேக்கானசேட்பகன்மசூலையோடு- செயமாத்தருமிகன்னசூலைதானே. (௨௫௨)

தானானதந்தவாயுவின்றன்னோடு- தாக்கானவாதங்காமினஞ்சதாகும், ஆனானவான்றனையேமிதியேமாந்தர்- அகதிபாதேசியர்கட்கன்னமீயார், கோனானகுருமொழியைமறந்தபேர்கள்- கொலைகளவுபொய்காமங்குறித்தபேர்க்கு, ஊனானசடந்தன்னில்வாதம்வந்து- உற்பவிக்கும்வேகத்தினுண்மைதானே. (௨௫௩)

வாதஸ்நம்பம்.

உற்பவிக்கும்வாதமதுளெழுந்துபொங்கி- உயர்காலின்புறவடியைக்குடைந்துபற்றித், தெற்பவிக்கும்வீக்கமாய்ச்செழும்பலுண்டாய்த்தேகமெங்கும்நோவாகித்திமிருமாகி, விற்பவிக்கும்விலலுபோல்விதனமாகிமிடுக்கானமாந்தனைப்போல்விதனமாகிப்பற்பவிக்குமபான்றனையேநினையாதூடர்படுகின்றவாதஸ்தம்பமுமாம்பாரே. (௨௫௪)

வாதகருஷ்ணன்.

பார்க்கின்றவாதவுள்ளடியிற்சாணி- பதித்துவைத்ததுபோலப்பாரமெங்கும், நோக்கின்றகுதிநரம்புங்கால்களெங்குங்கொடிதானபாரமாய்த்திமிர்ப்புண்டாகி, வார்க்கின்றவார்த்தைகள்தான்மிகவேசெய்து வாறுகினுநிமிருகினும்வசங்கொடாமல், ஏர்க்கின்றகாலுளைக்கும்வாதகஷ்ணம்சதலறமில்லாதார்க்கெய்துங்காணே (௨௫௫)

கரஸ்தம்பவாதம்.

எய்தியேவிரிவுதனிலிரண்டுகாலும்- இசைந்தவுள்ளடிதனிறுமெரிந்துநோவாம், ஐதியேயக்கினியில்வைத்தாற்போல - அங்கமெல்லாமிக வெளுத்துலத்தியாகும், பொய்தியேபுனைதனிலேபுழுக்களூர்தல்-யோகவேமிகவூர்ந்துநடைகொடாது, கைதியேவாயுலர்வுறறுடலகனக்கும் கணக்கானகரஸ்தம்பங்கருதிப்பாரே. (௨௫௬)

தலஸ்தம்பம்.

சருதியேமிகக்கனத்துமுள்ளங்காலைக் - கனக்கவேகுடைந்துநொந்துகருகிக்காணும், வருதிதியேவணக்கஞ்சற்றிலாமலேற - வலித்துமேமேனெக்கிவருத்தங்காணும், சருதியேசடமுலர்ந்துமேல்மூச்சுண்டாய்த்-தாகமாயுடம்புலர்ந்துதளர்ந்துகாணும், கருதியேகடுவுப்புபுளிப்புதன்னற்கனவாதங்கோபித்தேதலஸ்தம்பங்காணே. (௨௫௭)

பூசுவாதம்.

தம்பமாமலத்துவாரந்தனைத்தான்- தைத்ததோசம்புபோற்குடைந்துநொந்து, உம்பமாமுள்ளடியினளவாய்ப்பற்றி-உறுதியாய்மிகநொந்துகுடைச்சல்காணும், நம்பனூர்பதம்போற்றுநார்கள்தன்னை- நணுகயேயுருக்குலைந்துநலிக்கப்பண்ணுர், கம்பமாங்கணைத்துதிரம்வலியுண்டாக்கும்·கனத்ததோர்பூசுவாவாதமாமே. (௨௫௮)

காளாஞ்சகம்

மர்தமாங்கால்கையில்குரங்கிரண்டும்- வகுத்தாசந்துமுறுக்கியேகுடைந்துநொந்து, நாதமாநடைகாணுந்நான்கொடாம-நலிந்துமேமுடமா

கிக்காடுகட்டிச், சேதமாஞ்சடங்காணுமிகவெளுக்துக்- தினமேவாடுசிரங் குமாய்ச்சேட்பமாகிக், காதமாயருசியொடுமயக்கமாகுப்-கருதியகாளாஞ் சகமாம்வாதமாமே. (உருசு,

### மூருஸ்தம்பம்.

ஆமென்றவாதமதுஉள்ளடங்கி- அடிக்துடைக்தான்குரங்கிரண்டு மளவாய்ப்பற்றிக், காமென்றகைகாலிவிரலுஞ்சுற்றிக்- கனத்துமேசா ணியதுபொதிந்தாற்போலத், தேமென்றசிரந்தனிலேபாரமுணடாய்க்- தேகமெங்குமூதியேதிமிருண்டாகும், நாமென்றநடக்கொணுவொடுக்க மாகி-நவிமூருஸ்தம்பமதுநணுகுங்காணே. (உசுய)

### வாதகண்ணகம்.

தம்பமாநடக்கும்போதுங்கரித்தும்- தாவியேயுயரமாயெட்டும்போ தும், வம்பமாய்வள்ளத்திலிறங்கும்போதும் - மயக்கமாய்த்தள்ளாடிஇ டைந்துவிழ்ந்தும், வெம்பமாம்பாம்புவிஷமேதும்போல- மிக்கானசரீர மெல்லாந்தளர்ச்சியாகும், சிம்பமாப்புள்ளுப்போல்பாப்புகாணும்-செறி வாதகண்ணகச்சிறப்புமாமே. (உசுக)

### குரிஷிகிரிஷம்

சிறப்பானபாம்புவிஷப்போலேயேறிச் - செறிவாகஇறங்கியதோர் செய்கைபோலும், அறப்பானகூனையாயனையிற்றட்டைச்- சுழலவேசு ருக்கித்தான்பற்றியங்கம், பிறப்பானபீறியதோர்குடலைப்போலப்- பிதி ர்க்கின்றவன்போலும்பிரமியென்ன, முறப்பானதோலில்முள்ளுபொதி ந்தாற்போலமுயன்றிடுங்காண்குரிஷிகிரிஷமூர்க்கந்தானே. (உசுஉ)

### நரித்தலைவாதம்.

மூர்க்கமாமுயன்றமுழங்கால்தான்வீங்கி- முதிர்ந்தாக்சமுந்திரண் டுமுயற்சியாகி,நீக்கமாய்நின்றிடவொணுமற்றூனும்-நிமிர்ந்திடுகில்சந்து ந்தான்முடக்கொணுமல், தீர்க்கமாய்த்துண்டித்துமிகச்சிக்கென்றுசெழு மைநரித்தலைபோலமிகவேவீங்கி, நார்க்கமாய்நாடியுமேபடபடக்குநரி த்தலையின்வாதமென்றேநவிலலாமே. (உசுரு)

### கும்பவாதம்

நவிலவேதோள்மீதுங்காத்தின்மீதும்- நவிந்துமெத்தவாகியேநோ வுண்டாகும், கவிலவேகன்னமொடுநயனந்தானும்- கடுத்துமேவிருவிரு ப்புமெரிவுங்காணும், துவிலவேதுடிப்பாகுஞ்சிரசுதன்னிற்-சுழற்றியே நாபிக்கீழ்வலியுமுண்டாம், அவிலவேயடிநாக்கிலழன்றுகாணும்- அலரு மேவருகும்பவாதந்தானே. (உசுச)

### மலைத்தகம்பம்

கும்பமாங்கையின்மணிக்கட்டுதன்னிற்- றுவிந்தனையிற்மொசனை போலூரத்திக்காணும், திம்பமாமங்கங்கள்துடிப்பதாகுந்-துண்டுகே கா ல்கையுநடுக்கமாகும், அம்பமாமனைக்குக்கீழ்திமிருண்டாம்-அகரமேகி

கக்கறுத்துவெடிப்புண்டாகும், வம்பமாம்வாயுத்தான்பரியுநாற்றம் - வ
ருமலைத்தகம்பததின்மார்க்கமாமே. (௨௬௫)

## பாணிக்கம்பவாதம்.

மாதுர்மாய்வாய்வுமாய்மெய்நிறைந்துவயிறுகனிற்பசியிலாதானு
மற்று,நார்க்கமாய்ஞாலத்துநடக்கையற்று-நடுக்கமாங்கையிரண்டுந்திமி
ருமுண்டாம், ஊர்க்கமாயுறக்கமில்லாதுணர்ச்சியற்று-உசுறிமேயசரீரமெ
ங்குமுலர்ந்துகாணும், பார்க்கமாய்வாய்விட்டுஅலத்தலாகும்- பாணிகம்
பவாதத்தின்பாங்குதானே. (௨௬௬)

## கூனிவாதம்.

பாங்கானமலைபாண்டப்பையிற்றானும்- பண்பாகத்தடங்கியேமல
த்துவாரம், நீங்காமலடக்கியேநோவுமாகி நினைவில்லாச்சத்தியொடுமயக்
கமாகித், தேங்கானதேகமெங்கும்வலியுமாகிச் சிதளமாய்க்குளிர்ந்துமே
காணுங்கண்டாய், கோங்கானகோழிப்பேனூர்தல்போலும்- குறிகாணு
ங்கூனியாம்வாதந்தானே. (௨௬௭)

## ஆகுனிவாதம்.

கூனியேதேகமெங்குக்குற்றமுண்டாய்க்- குளிர்குளிர்ந்தேயிருமி
யேவாய்நீரூறி, ஆனியேயங்கமெல்லாமசைதலாகி அடிச்கடிக்குவியர்வை
தானதிகமாகி, மேனியெல்லாங்குறுகியேஊதலுண்டாய் வெளுக்குமே
சரீரந்தான்வீக்கமாகும், பாணியேஅடிக்கடிக்குவருந்திக்கேட்கும்- பண்
பானஆகுனியின்வாதந்தானே. (௨௬௮)

## அஷேவகம்.

வாதமேகோபித்துச்சரீரந்தன்னில் - வயிறுவிலாப்பக்கங்கள்வாடி
யோடி, நாதமேயுட்புகுந்துஇருபத்தஞ்சு - நலமறியாரலைத்தான்பற்றி
நொந்து, காதமேகைகாலுமேமாய்ந்துபோகும் கனக்கவேநோவாகிச்சுரு
ளநொந்து, ஆதமேயங்கமெல்லாமசைதலாகும்- அஷேவகமாம்வாதத்தி
னுண்மைதானே. (௨௬௯)

## வாதஉபகதம்.

ஆண்மையாங்காலோடுகையுஞ்சந்தும்- அங்கமெல்லாமிகத்திமிர்த்
துச்சாணிதானும், பூண்மையாய்ப்பூசினதுபோலேகாணும்- புரண்டுதா
ன்விருவிருத்துப்புளகமாகிப், பாணமையாங்காதசையுமுஷ்ணமாகிப்-ப
சித்துமேமிகநாணிநடைகெடாது - வாண்மையாமவாட்டதுறுமயக்க
மாகும்-வாதவுபகதந்தன்னைவகுததவாறே. (௨௭௦)

## நெற்றிசூலை.

வாறானநயனந்தன்புருவமற்றை - மத்தியத்திற்குடைந்துமேமூக்
குத்தண்டு, கூறானரூரவினைததான்பற்றிநொந்துகுடைந்துமேகையோ
டுகால்கள்ரெண்டும், ஆறான அங்கமெல்லாங்கடுப்புண்டாகும் அழகுராலா
ய்நித்திரையுமயக்கமாகும், தேறானசிரசுதனில்குற்றமுண்டாய்ச்- சிறு
நெற்றிச்சூலையின்றன்செய்கைதானே (௨௭௧)

### கர்ன்னசூலை.

செய்கையாஞ்செவித்துவாரந்தன்னினின்று - சிக்கெனவேகுசிகொண்டுகுடைந்தாற்போலச், சைகையாய்நோவுண்டாய்ச்சலிக்குஞ்சிந்தை சலத்தின்மேல்மனத்துவாய்த்தாகமுண்டாய, வைகையாய்வயிறுதனில் மந்தமுண்டாய் மயக்கமாய்மனதுதனிற்பயமுமுண்டாய்க், கைகையாய் வாய்க்கசந்துபுளிப்புண்டாகும்-கர்ன்னசூலையின் குணத்தைக்காணுங்காலே. (௨௭௨)

### செவிபடுவாய்.

காணுமேசெவிதனிலேசத்தம்போலக்- கடலிரைச்சல்போலவேமுழக்கங்காணும், நாணவேசெவியுறுதல்நரம்பைப்பற்றி நணுவுகளிமண்கொண்டுஅடைத்தாற்போலக், கோணவேகொண்டைதனிற் சுபந்திரண்டு-சுப்பிரமாய்ச்சட்டிபாயிறங்கிவிழும் வூணவேபிறர்சத்தஞ்செவியிற்கேளா-உண்மையாஞ்செவிபடுவாயுண்மைதானே. (௨௭௩)

### பக்கவாதம்.

உண்மையாயுடம்பெல்லாம்வாயுவாகி-உயர்கின்றநாடியது அசைவுமன்றி கன்மையாய்க்கர்பமீதினிலேயேறிக்-கசகியேயிழிந்துமேவலித்துகாணும், பண்மையாய்பக்கத்திலிசுவுமுண்டாய்ப் பாரித்துப்பணைக் கையுங்காலுங்கோணும், வெண்மையாயுடம்பெங்கும்வியர்வைகாணும்-மேவிவுபக்கவாதத்தின்விபாந்தானே. (௨௭௪)

### பக்ஷவாதம்.

தானானகால்கோணிச்செற்றாற்போலத்-தாக்கானதரைதனிலேநடக்கொணாது, கானானகைகளொன்றும்பிடிகொடாது- கனமானஉணர்ச்சியன்றிகைகள்சோரும்,மானானமயிர்க்கூச்சுந்திமிர்ப்புண்டாகும்-வாய்தானுங்கோணியேதண்ணீர்விழும், பேனானபித்தம்போலழன்றுகாணும்பிறிவுபட்சவாதத்தின்பெற்றியாமே (௨௭௫)

### பேய்வாதம்,

பெற்றியாம்பெருமையாங்காலுங்கையும்-பெருவயிறநெஞ்சோடுவிரலுமுழக்கும், எற்றியாமெறிகழுக்குமெங்கும்பற்றி - வக்கமாய்நோந்துவுடம்பெங்கும்வீங்கி, உற்றியாமூணவேநிமிர்க்கெடுத்துஉறுதியாய்ப்பிடிக்கவுமொணமலாகும். சக்தியாய்வாய்கசந்துமயக்கமாகும்- தரித்திடவொண்ணாதுபேய்வாதந்தானே. (௨௭௬)

### பிராணலயவாதம்.

வாதமாய்வலித்துமேசண்கள்தானும் - வரிசையாங்கருவிழிற்சோதிதன்னில், ஊதமாய்மூழுவெளுப்பாய்க் கண்மறைத்துஉக்கிரமாய்ப்பருகுதுகெகிட்டலாகும்,நாதமாய்க்கைபிரண்டுங்காலுர்வற்றி-நடுக்கமேயுண்டாகிநலியுந்தேகம, வேதமாய்சசொன்னதுதானதீராதென்று விளக்குபிராணலயமாம்வாதந்தாமே. (௨௭௭)

## சிலேட்டுமத்தம்பம்.

தாமென்றமலத்துவாரத்திறேடு- தாக்கியேசெலத்துவாரங்கொடங்கி, வேமென்றநீரிறங்கும்போதுதானும்- வெடிவுண்ணில்நோவுபோற்கிலேசம்பண்ணும், வாமென்றமலங்கடுத்துச்சிறுகிவிழும்-மயிர்க்கூச்சுண்டாகியேவருததம்பண்ணும்,தேமென்றதித்திப்புப்போல்நீராகும்-சிறுகிவிழுஞ்சிலத்தம்பச்செய்கையாமே. (௨௭௮)

## சந்துவாதம்.

செய்கைகான்சந்துகளு மிகத்திமிர்ந்து- செடமெங்குநொந்துமே மிகஅழற்றி, நைகையாய்நளுத்துமேமயிர்க்கூச்சிட்டு - நாணியேமுன் போலநகைகொடாது, மைகைதான்மயக்கமொடுவாய்நீரூறும்- வரண்டிடுமேநாவுகானடிக்கடிக்கு, கைகைகான்றாணிதனிற்றரிக்கொணுது-சஞ்சலிக்குஞ்சந்துவாம்வாதங்கேளே (௨௭௯)

## செகனவாதம்.

கேளுமேகழுத்தின்கீழனைக்குமேலும் - கெடியானகாமிரண்டுமிக வேநொந்து. வாளுமேசரீரமெல்லாங்கனத்திருக்கும்- வாலிபர்க்குமனங்கண்ணுமயக்கமாகும், எளுமேயிரண்டுகண்ணுமெரிச்சலுண்டாம்-ஏற்றமாய்மலந்தானுமிறுகிக்காணும், தேளுமேகொட்டினதுபோற்கடுக்கும்-செகனவாதத்தினிட தீர்க்கந்தானே. (௨௮௰)

## அற்புதவாதம்.

தீர்க்கமாய்ஸ்திரீசங்கம்பண்ணும்போதும் - திடுக்கெனவாயோர்த்தைகோபித்தபோதும்,ஊர்க்கமாயுறக்குதான்பாடும்போதும்-உண்ணுமவ்வல்கச்சாயம்பாக்குத்தானும் ஆர்க்கமாய்த்தட்டியேகடித்தபோதும்அழகானமுகந்தன்னில்வாயுகோபித்துக். தார்க்கமாய்மிமச்சிதறி வாயுங்கோணும் சாங்கமாயற்புதவாதந்தானே, (௨௮௧)

## ஊரகன்வாதம்.

அற்புதமாய்நோவாகிப்புருவங்காது- அங்கத்திற்பாகிதான்வலித்தெப்போதும், தற்புதமாய்க்கோணியேதலைவாயும்- தாவவேமிகநடுங்கிக்குளிர்ந்துகூசும் விற்புதமாய்விழிகளுந்தான்மிமைப்புறுது-மெலிவாகிச்சரீரமெல்லாம்வியர்வையாகும், புற்புதமாய்வாய்நீருமிகவேயூறும்- புகலுமோரூரகவாதத்தின்பேரோ. (௨௮௨)

## ஊரகாரிவாதம்.

போானநெஞ்சுடனேகுரலுநொந்து-பெருமீசல்தன்னிலேநோக்கிவாயு, ஆரானவன்னத்தைகஇறங்கொட்டாமல்-ஆர்வசனங்கொளளாமனுதாம்விம்மிப், பாரானவாயுதான்மிகவுமூறிப்- பாரமாய்நெஞ்சடைத்துப்பசத்திருக்கும் கூரானமேனியுமேகூச்சலுண்டாம்-கொடிதானவுரகாரிவாதமாமே. (௨௮௩)

## ஆசுவதம்பவாதம்.

வாதமாயுடல்வெருத்துவடிவெல்லாநோம்- மயக்கமோடிருமலாமீளையுண்டாம், நேதமாய்நெஞ்சடைத்துப்பொறிகலங்கும்-நெருப்பாகவுடல்காணுநெடுமூச்சுண்டாம், கோதுதான்மயக்கத்தில்மருத்தினீட்டால் குளிர்ச்சியாய்க்கோபிக்குங் கூச்சலுண்டாம், பாதந்தான்றிமிருண்டாய் முட்போலாகும்-பருத்தஆசுவதம்பமபகாலாமே. (௨௮௪)

பகாவேவாதமதுகோபித்தப்போ- பண்பாகஸ்திரீகோஷ்டிபதுதான்செய்யில், நகாவேவெகுதூரவழிநடக்கில்-நளிநானகாற்றுமேபனிமேற்பட்டால், மிகாவேகாய்கள்கனிகிழங்குதன்னை-மிகவருந்திமீறியேதயிர்தான்கொண்டால், முகாவேமுதுகெலும்பைமுறுக்கிநொந்து- முழங்காலுங்கணைக்காலுங்கடுப்புண்டாமே. (௨௮௫)

## பாசத்கம்பலம்.

கடுத்துமேசரீரமெங்குஞ்சோம்பலாகிக் - கண்மயங்கிப்புகைந்துமேகூடிக்காணும், வடுத்துமேசரீரமெல்லாமிகவும்பற்றிவாய்வரண்டு புளித்தேங்காய்மந்தமாகி, நடிந்துமேநாடியெக்குப்படபடத்துநாம்போடுசகைதகளெல்லாபித்தமாகும், அடுத்துமேஇவ்வாதமசாத்யமாகும்-அடுடாசத்தம்பமென்றேயறையலாமே. (௨௮௬)

## நேத்ரபவுத்ரம்.

அறையவேநெற்றிபொட்டுநாவுங்காது அடைட்டியேயநோவாகிக்குடைச்சலாகும், நிறையவேஉடம்பெங்குமுகலாகும்நிற்கவுந்தானொட்டாமல்தள்ளிப்போடும், குறையவேதேகமெங்குங்குடைச்சலாகும்-குருவியர்வைமயக்கமொடுகூச்சலுண்டாம், மறையவேநேத்ரபவுத்திரமுமாகும் மறைசொன்னபடிபாணும்வழுத்தினேனே. (௨௮௭)

## தெண்டவாதம்.

வழுத்தவேமூலாதாரத்தைப்பற்றி- மருவியேமேலேறிமுதுகுண்டாதல், விழுத்தவேசிரசில்வந்துவிபர்வுமாகி-விகுவாகநோவாகிமேனிகண்ணிட், பழுத்தவேஉடம்பெங்குமபஞ்சுபோலாம்-பாங்கானமலசலமுமஞ்சளாகும், குழுத்தலவதெண்டமாமவாதந்தன்னைக்-கூறினேன்குணமெல்லாம்கூர்ந்துபாரே. (௨௮௮)

கூர்ந்திட்டமலசலங்கள்தாரிசமானல்- கொண்டடக்கிப்பின்புதான்கொடிதாய்தள்ளிப் ஊர்ந்திட்டசரீரத்திலுகாமீறி- உலக்கேசப்த்துநத்தலையதனிலெண்ணெய்வார்க்கில், வார்த்திட்டவழிநடக்கில்மெத்தவும்தான்-வாதந்தானுற்பவித்துநடைகொடாமல், நார்த்திட்டநரம்போடுஎலும்பிற்சூழ்ந்து நணுகியேஒடிநெஞ்சிலேறுந்தானே. (௨௮௯)

## அஷ்டதந்திரவாதம்.

எறியேஉணர்ச்சியற்றுஉள்ளுக்குள்ளே- இருந்தால்நானாமழைக்காற்போல்சத்தமுண்டாம், காறியேகண்ணீருமுண்டவாய்நீர்-சரந்துமேமு

ன்போலவிழித்திடாமல்,பாரியேபற்கிட்டிமூச்சுமற்றுப்- பல்காலும்பித்ற்றியேபிணத்தைப்போலச், சீறியேஅடிக்கடிக்குச்சேட்ப முண்டாம் செருக்குமஷ்டதந்திரத்தின்சேதிதானே. (உசூ௰)

வசனுவாதம்.

தானுனதிரேகமெங்குந்தான்வலித்துச்-சங்கர்பவிகற்பமாய்க்கிலேசமாகி, பானுனபலகுணங்கள்மிகவேயாகும்-பரமசிவனடியார்கட்கணுகிடாது, தூனுனதுஷ்டனையேபற்றிநிற்கும்- துடிப்புண்டாய்ச்சோரவே சொருகிவிழும்,காணுனகாயமதுகதித்துக்காணும்-கனவசனுவாயுன்றன் கணக்குத்தானே (உசூக)

மகவாதம்.

கணக்காகக்கதித்துமேல்வயிற்றைப்பற்றிக் - கருகியேபொருமித்தான்வலித்துவீங்கி, கிணங்காகக்கீழ்முதுகில்விதனமாகிக்- கிஞ்சுகமாய் விதனவூணற்பமாக்கும்வணங்காகமலசலந்தான்பலகாலுண்டாம்வருத்தமாய்ச்சடந்தானும்அழன்றுபோகும், மணக்காகமேனியுமோமஞ்சளாகும் மகவாதகுணமென்றேமருவலாமே (உசூ௨)

மிருத்துவாதம்.

மருவலாய்முடியாவாய்தனிலொதுங்கி- மண்டியமேநோக்கியபானவாய்வில், எருவலாயேறிவாயால்நுரைப்பட்-டிறுகிசியதேகமெல்லாம்வலிக்குங்கண்டாய், திருவலாய்மலங்கள்ளுஞ்சோரையாகும் சுருக்கென்றுகால்கையுஞ்சேர்ந்துபோகும், பருவலாய்மனதுதான்பயமுண்டாய்ப்-பாரமிருத்துவாதத்தின்பண்புதானே. (உசூ௩)

உதாவாதம்.

பண்பானகுக்ஷியைத்தான்பொருமிநொந்து-பருத்துமேமிணறுகான்கனைத்துமெத்த, எண்பானவிக்கலுமிஇளைப்புண்டாகி-இணைவிழிநீர் பாய்ந்தங்கயிளைப்புமாகி, மண்பானவாதமதுநிரம்பியேறி-வாயினுன்மலந்தானும்புறப்பட்டாற்போல்,விண்பானநீரதுவும்விடுத்துநிற்கும்-மிகுமுதாவாதமென்றேவிளம்பலாமே. (உசூச)

மூர்ச்ச உதிரவாதம்,

விளம்பவேவிடுமூச்சம்வாயிற்றோன்றும்- மீறியேநெஞ்சுதனிலழன்றுநோகும், கிளம்பவேநெஞ்சுதனில்விக்கமுண்டாம்-நித்திரையில்லாமலேவெதும்பலாகும், வளம்பவேவயிறுதனில்நோவுமாகும் மகத்தானவிக்கலுடனிருமலுண்டாம், அளம்பவேஅடிவயிறுகனத்துநோகும்- அசைமூத்ரவுதிரமென்றவாதந்தானே. (உசூரு)

சுக்கிலவாதம்.

வாதமாமுடலிறுகிமிகவும்வற்றி-மலமூத்ரஞ்சிக்கியே கீழ்விழாமல், நாதமாம்நாக்கோடு மூக்குகன்னில் - நணுக்கமாயுதிரந்தானருவியாயும், சேதமாய்ச்சேட்டுமமும் கோழையுண்டாம்- செயலோடு

டுசுவாசமாய்ருசியுண்டாம்,சூதமாய்ச்சுக்கிலந்தான்றுன்னியாகும்-தூரிய
சுக்லவாதத்தின்சூக்ஷந்தானே. (௨௯௬)

## சவ்விரங்கவாதம்

சூக்ஷமாய்த்தெய்வவுடல்திகைத்தங்கூர்ந்து- தேகமோவெளுத்து
ப்பின்கறுப்புமாகும், ஆட்சமாயரூசியொடுவாந்தியுண்டாம்- அடிக்கடிக்
குத்தண்ணீர்தானதட்டிக்கேட்கும் ஊட்சமாம் அன்னத்தைமுன்னே
காணில் ஓக்காளந்தன்னேடுபசமுமாகும், தாட்சமாய்ச்சலிப்போடு உ
றக்கமாகும்-சவ்விரங்கவாதமென்றே சாமறூறாலே. (௨௯௭)

## ஊர்த்வவாதம்

நூலானசுவாசந்தான் மேமேலேநோக்கி- நுணுக்கமாமிடையுடனேவயி
றுவிம்மி, வாலானவாய்தனிலேநுரையுமுண்டாய்வாய்கழுத்துமார்புமே
மிகவுநொந்து, ஆலானவங்கமெல்லாமழன்றுகாணும்அடித்துடையுமடி
க்கையுமிகவேவறறும்பாலானமேனியுமேபசுமைகாணும் பருவூர்தவவா
தமென்றேபகாலாமே. (௨௯௮)

## மைஞ்ஞானத்தம்பம்.

பகர்கின்றகூரலதனைப்பற்றிநொர்து- பாரமாய்வலித்துமேகிழ்நோ
க்கெய்தி, நிகர்கின்றகண்ணதனைமூடிக்கொண்டு- நெருநெரானமூக்காலே
சுவாசம்போகும், திகர்கின்றவிரண்டுசெவிதன்னில்நொந்து- செழுமை
யாங்கொட்டாவிவாய்மூடாமல், மகர்கின்றவாய்வாண்டுநெஞ்சுகாயும்-
மைஞ்ஞானத்தம்பமாம்வாதமாமே (௨௯௯)

## சிரகம்பவாதம்.

தம்பமாய்உதிர்கண்டசாம்பிற்புக்கித்-தலையோடுசரீரமெல்லாந்தாக்
கிப்புக்கும், கம்பமாங்காதிரண்டுமிகவுங்கேளா-கையோடுகாலிரண்டும்வ
சக்கேடாகும், நிபபமாய்நினைவுதான்கலங்கிக்காணும்- நெடுமூச்சுங்கொ
ட்டாவிநித்திரையுமாகும், சிம்பமாய்தலைநடுக்கிக்கனப்புமுண்டாம்- சிர
க்கம்பவாதமென்றேசெப்பலாமே. (௩௱)

## சதர்தப்பம்.

செப்பவேநடுநாக்குநுனிநாக்குந்தான் - தெறித்துமேமேதள்விஷம
போற்கனவுமாகும், அப்பவேயடிநாக்குத்தானதிடிக்கும் அழகானவா
ய்தானும் அதிர்தல்போன்றும், உப்பவேவுண்ணுங்கிங்கட்டிதூக்கும்-உரி
சைதானில்லாமலூறும்நாக்கு-வெப்பமேவவிஷந்தானுமமுதமபோல்-வெ
ளிபானசதஸ்தபபம்விதியிதாமே. (௩௱௧)

## வச்சிரரூபம்.

விதியானபிடரியைத்தான்மிகவிழுத்துமிகக்கண்களசைவில்லாமே
மேலேநோக்கிக், ததியானகுரூக்கைபோற்சத்தம்பெற்றுக்-தலைநோவுமி
குதியாய்நடுக்கலுற்று, குதியானநரம்பிழுத்துத்திமிருண்டாகிக்- கொட்
டாவிசோபலாய்க்கூச்சலுண்டாய், வதியானமலசலமுஞ்சுருக்கிவிழும
வச்சிரரூபந்தன்னிர்வணயிதாமே. (௩௱௨)

## கண்டகிரகம்.

வகையானசூலந்தனைப்பற்றிநொந்து - மாரோடுபிடரியினில்வலியுண்டாகி, நகரானசரீரமெல்லாம்நொந்தழற்றி நறுணுக்கமாய்ச்சுவாசமதுபுறப்படாமல், முகையானநாவாலே மூச்சுமாறிமுகத்திலேவியர்வாகிவிலாநோவுண்டாம், பகையானவன்னந்தனைநப்பருகொட்டாது-பரியகண்டகிரகத்தின்பண்புதானே. (௱௩)

## நகாரிவாதம்.

பண்பானசூலந்தனை விலாப்பக்கங்கள்- பலகியேபருநாம்பைப்பற்றிநோகும், வண்பானகீழ்வாதான்மேல்வாய்தன்னில்- வாயுவங்கேபூரித்துவசனங்கொச்சை, நண்பானநடுநாக்குமரமபோலாதல்- நசையானதேகமென்குஞ்சொரிச்சலாகும், விண்பானமேலுதடுதடிப்புமாகும் - மீறியதார்நகாரியாம்வர்தமாமே. (௱௪)

## பதிதவாதம்.

காரியாய்மிகவார்த்தைதபேசும்போது - கழுத்திலுள்ளநரம்புமிகவிசைத்துநோவாம், வாரியாய்வார்த்தைகள்தான்விக்கிபேசி- வார்த்தைகள்தான்பேசுவதிற்றெரிந்திடாது நாரியார்போகமதுவிரும்பிடாது - நலுக்கமாய்த்தாதுவெல்லாமிளைத்துக்காணும், பாரியாயடிக்கடிக்குப்பசியேயுண்டாம்-பதிதமாம்வாதமென்றேபகரலாமே. (௱௫)

## யோகினிசூலை.

பகாவேமலத்வாரந்தன்னிற்றோன்றிப்- பக்கமாயிறங்கியேயோனிபற்றித், திகாவேகுறங்கடிமறையுமூன்றுஞ்-சிக்கெனவேகால்கொண்டுகுடைந்தாற்போல, அகாவேயடிக்கடிக்குநோவுமாகும்-ஆசனமுங்கடுத்துமேநீரிறங்கும், நகாவேநடக்கும்போதுறக்கமாகும்-நவில்யோனிசூலையென்றேநாட்டலாமே. (௱௬)

## கெர்ப்பசூலை.

நாட்டமாய்க்கன்னியர்கள்தூடக்குங்காலை - நலமானகெர்ப்பத்தின்றோகைதன்னில், பாட்டமாய்ப்பற்றியேவாய்வுதோன்றி- பழகியேபுருஷசங்கைபண்ணும்போது, தாட்டமாய்த்தடைப்பட்டுமலத்தைச்சிக்கித்தத்தளித்துக்கடுப்பாகி விலாபக்கம்போய், கேட்டமாய்மனதுதனிற்கிலேசமுண்டாம்-கெர்ப்பமாஞ்சூலையென்றேகிர்த்திப்பாயே. (௱௭)

## அஷ்டசூலை.

கீர்த்தியாய்மலங்கடுக்குங்கெடியாஞ்சோபங் - கிழானவருரோகைதனிலேநின்று, ஆர்த்தியாயலங்கிடக்கோபித்துநின்று- அதட்டியாயிருகுறங்கும்யோனிகாணும்-கார்த்தியாயுமித்தணிவின்காற்றளாகிக்- கடினமாய்நீர்தானுந்துளியாயவிழும், வேர்த்தியாய்மொருமொறெனக்கடிக்கும்பல்லை-மீறுபட்டசூலையிடவிளையந்தானே. (௱௮)

## குடல்வாதம்.

வினையாகப்பலவிதமாய்க்குடலைப்பற்றி-மிடுக்காகவலித்துமேநாபி தன்னில், அனைபாகவடிவயிற்றில்நொந்துகொந்து- அழகானவிலாதன்னில்வலித்துவீங்கி, மினையாளமிக்கவலிபிழிந்தநோவாம்- மிடுக்கானநளிரோடுகாச்சலுண்டாம், தினையாகத்திடுக்கிட்டுதலையுநோவாம்-செப்பினேன்குடல்வாதச்சேதிதானே. (௯௱௯)

## அசுவவாதம்.

சேதியாய்ச்சிறுகுதிரைப்பாச்சலாகிச்-செகமெல்லாமிகச்சுருக்கிக் கோட்டிபண்ணி, மேதியாய்மேலேறிக்கீழநோக்கி வெறிகொண்டாற்போல்மிரண்டுஅண்டம்வீங்கி, ஏதியாய்யிரண்டுவிரையுள்ளேபுக்கிஇணையிலிங்கமுட்கருக்கிபிழிந்துநோவாம், ஆதியாயடிவயிறுஇசிவுகாணும்அணியசுவவாதமென்றேயறியலாமே. (௯௱௰)

## மெச்சுவாதம்.

அறியவேயாண்மையாமிலிங்கந்தன்னை- அடவாகச்சுருக்கியேகுழிந்துநோவாம், நெறியவேநீர்க்கடுத்துச்சிவந்துக்காணும்- நேர்மையாய்குளிரோடுசுரமுமுண்டாம், வறியவேதியக்கமொடுமயக்கமுண்டாம் வாடியேதேகமெங்குமசதியாகும், குறியவேகொட்டாவிசோம்பலாகும்-குறிப்பானமெச்சுவாதமுமாமன்றே. (௯௱௰௧)

## மூடுவாதம்.

மெச்சானபிடரிநரம்பதனைப்பற்றி-மிடுக்காகவிரங்கியேமலத்துவாரம், பிச்சானததுகலங்கிமேலேயேறிப்- பிறவடியுங்குறங்கடியுஞ்சுற்றிநொந்து, குச்சானகோவணந்தான்தனைத்தாற்போலக்-குறுக்காகிலிங்கத்தில்வலித்துநொந்து, கச்சானகாற்றுக்குமிகுதியாகும கடுமூடுவாதத்தின்கருமந்தானே. (௯௱௰௨)

## வசுவாதம்.

கருமமாய்க்குடல்முடங்கிவயிறுளைந்து கனமாகநொந்துமேமயிர்க்கூச்சிட்டுப், பருமமாயுடம்பெங்குந்தடிப்புண்டாகிப்- பாரமாயுடல்கனத்திப்பங்கமாகும், வருமமாய்த்தோலெல்லாமிறுகிக்கொண்டு- மாசற்றவுடம்பெல்லாமவாட்டமாகும், உருமமாய்அசலந்தான்வேண்டாதாகும்-உயர்வசுவாதத்தினிடவுண்மைதானே. (௯௱௰௩)

## பீசஸ்தம்பம்.

உண்மையாயிரண்டுவிரல்தானும்வீங்கி- உயர்கின்றபுண்போலவலித்துநொந்து, தண்மையாய்ச்சலாகையதுஏற்றினாற்போற்-தாக்கானபீசமெனகும்வலித்துநொந்து, வெண்மையாய்நீருவித்துளியாய்விழும்- விம்முமேயடிக்கடிக்குக்கண்டுநாளும், பெண்மையாய்மனமதுதான்பித்தல்காணும்பீசமாந்தம்பமென்றேபேசலாமே. (௯௱௰௪)

### அந்திரவெட்டி.

பேசவேவிரையிரண்டும்பெருத்துவீங்கிப் - பெருந்தவேநோயோ டேஇசிவுமாகிக், காசவேகளகளவென்றிரைச்சலாகிக் கலமானகுடல்த ளிமேலசக்நித்தேதான், வாசவேவயிற்றினைத்தான்முறுக்கிமெத்த- வலி யோடுகுளிர்தானுஞ்சுரமுமுண்டாம, ஆ'வேயடிவயிற்றிற்குற்றலுண் டாம்-அத்திரமாவெட்டியென்றேயறிந்திடாயே. (௩௱௰௫)

### வாதசுரோணிதம்.

அறிந்திட்ட அங்கமெல்லாமெலிவமாகி- அசைவானசவ்விடங்கள் வீக்கமாகி, நறிந்திட்டநடைகொடாதானிருத்தல் - நலியாகிமொழிமொ ழியவீக்கமாகச், சொறிந்திட்டதேகமெங்குமசைவுகாணல்- சோற்றின் மேனினைவின்றித்தூக்கமாகல், வறிந்திட்டவாயதனினீர்தானூறல்- வா தசுரோணிதந்தானுயவகுத்தவாறே. (௩௱௰௬)

### சித்துவாதசுரோணிதம்.

வாரூனசரீரமெல்லாநுழைந்துஊதல் - மாசற்றதோல்தானுந்திரை ந்துபோகும், நாரூனநாறுபோல்நாயபுசுக்கும்- நாக்குத்தான்வழவழசுது க்கோழையாகும், நூரூனநெருப்புத்தான்பட்டாற்போல-நொந்துமேச டமெல்லாங்கொப்பளிக்கும், வீரூனவுரிந்துபின்னைவெதும்பிவீங்குப- மிக்கசித்துவாதசுரோணிதமதாமே. (௩௱௰௭)

### வைகிகவாதம்.

ஆமென்றவீங்கினதோர்விடத்தில்ரத்தம்- அழுத்தமாய்த்திரண்டு மேளங்கும்பாய்ந்து, ஓமென்றுஒட்டியேதிரண்டிருக்கும்- உதிரமாய்த் தொட்டடனேமெத்தென்ரூகும், தேமென்றதேகமெங்கணு முசுக்கும்- சிறியதோரிருமலொடுகாச்சலுண்டாம், பாமென்றபடர்தனிமேலதிமிரு ண்டாகும்-பாரமாய்வைகிதமாம்வாதந்தானே. (௩௱௰௮)

### உதிரவாதசுரோணிதம்

வைகிதமாய்க்கணைக்காலுமுழங்கால்தானும்- மற்கடாஞ்சந்துபுறவ டியும்வீங்கிச், செய்கிதமாஞ்சிறுவிரல்கள்மிகவும்நொந்து- சிந்தைதடுமா றியேசலிப்புண்டாகும், பைகிதமாம்பயித்தியத்தில்லாதமிஞ்சிப்பாரமா ய்உற்பனித்துஅழலுண்டாகும் உய்கிதமாம்அசனமதுதானும்வேண்டா உதிரவாதச்சுரோணிதத்தினுணர்ச்சியாமே. (௩௱௰௯)

### பயித்தியவாதசுரோணிதம்.

உணர்ச்சியாய்ச்சுரோணிதந்தான்மிகவெதும்பி - ஊக்கமாய்த்தேக கமெங்குமிகவேநொந்து, முணர்ச்சியாய்முழங்கால்கள் முழங்கையொ க்க-முனையானசிறுவிரல்கள்கன்னம்நெற்றி, தணர்ச்சியாய்ச்சந்துசருவா ங்கமெங்கும்-தாஷ்டீகமாய்க்குடைந்துசுரமுமுண்டாம, பணர்ச்சியாய்ப் பாண்டதுபோன்மேனியாகும் - பயித்தியவாதசுரோணிதத்தின்பண்பு தானே (௩௱௨௰)

## சேட்டுமவாதசுரோணிதம்

பண்பாகவுடல்குளிர்ந்தவெறாவீங்கிப்-பனைதப்பானவிடந்தொட்டாற்பாரநோவாம், திண்பானசிரசுநெற்றிநோக்காடுண்டாப்-சிலேட்டுமமாய்க்கோழையொடுசுவாசமாகும், மண்பாகமயக்கமொடுகனவுமுண்டாம்-வாய்வரண்டுருசியில்லாவருக்கமாகும், நண்பாகநாடியுமேபடபடக்கும்-நற்சேட்பசுரோணிதமாய்நாடுங்காலே. (௩௨௧)

## உதரவாதசுரோணிதம்.

நாடுமேசுரம்வந்துநடுக்கலுண்டாம்-நாவரண்டுதலைநொந்துடப்பமூர்த்தி, வாடுமேதேகமெல்லாமணிச்சம்பூப்போல் மகாவருக்கமுண்டாகிமயக்கமாகும், சாடுமேபடிக்கடிதான்பேதிகாணும்-தவிக்குமேதண்ணீர்தாகமட்டமாகிக், தேடுமேசோற்றின்மேல்நினைவுகாணும்-செயவுதாவாதசுரோணிதந்தானென்னே. (௩௨௨)

## குணஅவதானகம்.

என்னவேகுமரிதான்கெர்ப்பமுண்டாய்- எறியேநாள்மூன்றுதிங்கட்குள்ளே, வனனவேவயிறிழிந்திரத்தம்விழ்ந்து-வாடியேவயிறெல்லாஞ்சுருக்கிக்கொண்டு, கன்னவேகால்கையுமுடக்கமாகிக் - கருதியேதேகமெங்குங்காந்தளாகும், குன்னவேகோபமதுமிகுதியாகும்-குணவதானகமென்றேகூறிடாயே, (௩௨௩

## கண்டகஅவதானம்.

கூறியேகெர்ப்பமுண்டாய்பாவின்றபோது-குணகியேபச்சுடம்பில்வலிப்புத்தோன்றி, மூறியோமூக்கோடுபுருவந்தன்னில்-முட்காமாய்மிகநொந்துவலிப்புண்டாகி, நாறியேநாக்கோடுஉண்ணாக்குந்தான் நவித்துமேபல்லெல்லாங்கடுப்புண்டாகும், ஆறியேமுன்சொன்னததுவசாத்யம் அரியகண்டகவவதானந்தானே. (௩௨௪)

## சிரக்கப்பஅவதானகம்.

அவதானவடிசிரசுதன்னைப்பற்றி அதட்டியேபின்னெல்லாம்பற்றிநொந்து வவதானவடிப்புகுறங்சடியிற்சென்று - வளைத்துடம்பெல்லாநொந்துவாட்டமாகிச், சிவதானதேகமெங்குந்திமிருண்டாகும்- செடம்போகுங்காலத்தில்மூன்றுங்காணும், பவதானசிரக்கப்பவதானகந்தான் பாடியதோரிம்மூன்றுமசாத்யமாமே. (௩௨௫)

## வாதத்தலைநோக்காடு.

சாத்தியமாம்வாதத்தின்றலைநோக்காடு- தண்மையாப்பிடரிபற்றித்தலைநோவுண்டாம், காத்திரமாய்க்காதிரண்டுந்தான்வலித்துக் கதுப்படியுங்குறட்டோடுமூக்குஉச்சி, நெத்தியுமாய்நெற்றியொடுநோவுமாகிநெருக்கானவாப்படிததாற்போலேகுற்றும், மாத்தியமாய்மனக்கிலேசப்படுத்தும்வாதத்தின்றலைநோவுவண்மைதானே, (௩௨௬)

### பித்தத்தலைநோக்காடு.

வண்மையாய்நிற்கின்றமூக்குத்தானும்- வடிந்துமேநீர்ப்பாய்ந்துத் தலைகனத்து, வெண்மையாய்வாய்நீர்தான்மிகவுமூறி- மீறியேஉண்ணுக் கைப்பற்றிநொந்து, திண்மையாய்ச்செவிதனிலேகுற்றலுண்டாய்ச்-சிர சுதான்பாரமாய்மிகக்கனக்கும், கண்மையாய்க்கண்ணேடுபுருவங்குற்றம் கனமானபித்தத்தின்றலைநோக்காடே. (௫௨௭)

### சேட்டுமத்தலைநோக்காடு.

நோக்காட்டில்மிகத்தண்ணீர்குடிக்கையாலு- நுகர்ந்தபின்புலாவாம ற்படுக்கையாலும், நீக்காட்டில்மிகத்திரண்டுசேட்பந்தன்னிச்-சிரசெங் கும்நோவாகிப்பிடரியோடு, மேவங்காட்டில்தேக மெல்லாமிகவெளுத்து மேனியுமேமாமிகவுலர்ந்துசூழமுண்டாம், சாக்காட்டிற்பசியற்றருசியி ல்லாதால் சண்டாளச்சேட்டுமத்தின்றலைநோக்காடே. (௫௨௮)

### சன்னிவாதத்தலைநோக்காடு.

தலைநோக்காடாகியேமிகவருந்தி-சஞ்சலத்தால் மனக்கிலேசங்காலு முண்டாய், பலைநோக்காய்நெஞ்சடைத்துப்பெருமூச்சாகிமறுகாதிரண் டினிலாப்படித்தாற்போலும், புலைநோக்காய்வாய்தானும்பேசவொட்டா ப்புழுக்கள்சாலூர்கல்போற்றேகமாகும், கதநோக்காயுணர்ச்சியறிவில் லாதாகும்-கனசன்னிவாதத்தின்றலைநோக்காடே. (௫௨௯)

### இரத்தபித்தத்தலைநோக்காடு.

சன்னியாய்க்குளிர்ந்துமேவெச்சென்றுகும்- தாகமேமிகவுண்டாய் மயிர்க்கூச்சாகும், தின்னியாந்திமிர்நிமிர்த்திரத்தமீறிச்செவிமூக்குவாயா லேரத்தம்விழும், உன்னியாயுடலதுதான்றுடிப்புண்டாகும்-ஊக்கமாஞ் சுவாசமதுமெத்தவாகும், கன்னியாஞ்சரீரமதுகருகலாகும்- கதித்தெழு ந்தரத்தபித்தத்தலைநோக்காடே. (௫௩௰)

### கிருமிகந்ததலைநோக்காடு.

கதித்துமேமெளலிபற்றித்தலைநோவுண்டாம்-சுடிமூக்குத்தண்டுபு ருவம்வலிக்கும், வதித்துமேவாய்நீர்தான்மிகவுமூறும்- வடிவமெல்லாம் நோவாமேனமறுக்கும், குதித்துமேனைகாலுமிடறும்பற்றிக்-குற்றியே விறுவிறென்றேதானிருக்கும், நதித்துநாணற்பூப்போற்கிருமிவிழும்- நாறுமேகிருமிகந்ததலைநோக்காடே. (௫௩௧)

### சூரியவர்த்தம்.

கந்தமாம்வலப்பக்கமிடப்பக்கமாதல்-கண்ணடியு மூக்கடியும்புருவ ம்பற்றி, புந்தமாம்புருவத்திலூசிகுற்றல் போல்வலிக்குங்கண் தானுந் சுருங்கிக்காணும், பங்கமாமுடம்பெங்கும்பாரமாகும்- பகற்போதுதாழ் ந்தவுடனேவுமட்டாம், துந்தமாந்துந்துமிபோல்வலியுண்டாகும் சூரிய வர்த்தந்தன்னின்சுருபமாமே. (௫௩௨)

## சந்திரவர்த்தம்.

சுருபமாயுடம்பெங்கும்வலியுமாகித் துப்பியேமூக்கடைந்துச்சுக ந்தமற்று, புருவமேமிகவலித்துநெற்றியோடு-புண்போலக்குடைந்திட் டுப்புளகமாகி, அருபமாயந்தியின்போதுதோன்றி-அர்த்தராத்திரிமட்டு மலைச்சலாகி சருபமாய்விடிகிறநேரத்திற்றணும்- சாய்க்குமேமாசந்திர வர்த்தமாமே. (௧௩௩)

## சர்ணுவர்த்தம்.

வர்த்தமாய்மார்போட்டுபிடரிகாது- வலித்துமேயாப்புகொண்டடி த்தாற்போலக், குற்றமாய்க்காதிரண்டுங்குடைச்சலாகும்- கோணியேக மூக்குங்க துங்கனக்கும். அற்றமாயுச்சியிலுநெற்றிசுன்னில் அடிக்கடி க்குநோயாகியசதியாகும், பற்றமாய்ப்பசியின்றிஉறக்கமின்றேல்- பாரக ர்ணுவர்த்தமென்றேபகரலாமே. (௧௩௪)

## ஒருதலைவாதபேதம்.

பகாரனவொருதலையைப்பாதிநொந்து பகழிகொண்டுகெளவி துளை ப்பிளந்தாற்போல, நிகாரனகண்ணுநீர்பாயந்தகாந்தி- நெடுமூச்சுவிட்டு மேநினைந்துதன்பர், திகாரனசடந்தானுங்கிடுக்குண்டாகிச்-சிறுக்கிரு மலாகியபசிகாணுது. வகாரனவாதமாய்மயிர்க்கூச்சாகும்-வாகாதபேதக் தொர்தலைவலியுமாமே. (௧௩௫)

## வாதகர்ன்னசூலை.

வலியாகிச்சிவிழுந்துகாதிரண்டும் மகத்தசமுத்திரம்போலிரை ச்சலாகிக், கிலியாகிச்செவிதனிலேசத்தமுண்டாய்- கேள்விகள்தான்வ சனமதுகேட்டிடாது, பெலியாகிப்பிறர்வசனத்திசைகேடாகும்- பேய் கொண்டமனமதுபேச்சுதானு, ஆலியாகியாணவகாயிபங்குறைக்கும்- அடங்காதவாதகர்ன்னசூலைதானே. (௧௩௬)

## பித்தகர்ன்னசூலை.

காமென்றஇரண்டுசெவிதன்னிலேதான்- தாக்கானகிரந்தியேஎழு ந்துநொந்து, ஊமென்றஉதிரமொடுசீயும்பாய்ந்து- ஊற்றையாங்கும்பி போல்நாற்றமாகும், காமென்றசிரசெங்குமளிபோலூறும்- காதிரண்டு ம்பருத்துமேவீக்கமுண்டாம், பேமென்றபுளகிதமாய்த்தலையெங்கும் நோம்-பித்தகர்ன்னசூலையென்றேபுகலுவீரே. (௧௩௭)

## சேட்டுமகர்ன்னசூலை.

புகலவேகாதுக்குட்குறும்பிசேர்ந்து பொருங்கோலைக்கொண்டுதா ன்குடைந்தாற்போல, நுவலவேநோவாகிப்புண்தானுண்டாம்- நோக்கா னசடந்தானும்நுணுக்கமாகும், இகலவேஇரைச்சலதுகொஞ்சந்தானு ம்- ஏற்றமாய்த்தினவுமேமிகவுண்டாகும், உகலவேயக்கைகயெல்லாம வெளுத்துக்காணும் அரிதானசேட்பகர்ன்னசூலையாமே (௧௩௮)

### கிருமிகர்ன்னச்சூலை.

ஆமென்றகம்புழுவரிசிபோல - அடைத்துபோகாதிரண்டுந்தான் னிப்போகும், போமென்றபுழுக்களதுமெத்தவூர்ந்து- டரண்டுமேபுண் ணாகிஉதிரம்பாயும், தாமென்றசீயோடுசில்லுங்காணும் துடிக்குமேபட படத்துக்காதிரண்டும், கேமென்றசத்தமதுசேட்டிடாது-கிருமிகர்ன்ன ச்சூலையென்றேகீர்த்திப்பாயே. (௫௩௯)

### தந்தவாய்வு.

கீர்த்திப்பாய்செட்டியாய்ச்சடிக்கலாலும்-செடியானசீதளங்கள்மிக வேயூறிப், பார்த்திப்பாய்ப்பல்லதனிலடக்கிறலும் - பலபலவாமுதிரந் தான்பற்றலாலும், மூர்த்திப்பாய்முகமெல்லாமிகக்குடைந்து-முகுளித மாந்தந்தங்கள்சதைசளைந்து, நார்த்திப்பாய்நாவடிவுநரம்புநோவாம்-நா றுதந்தவாயுவின்றன்னலமதாமே. (௫௪௰)

நலமான்வாய்வதுகோபித்தக்கால்நற்சந்துகுடைந்தமேபல்லுநோ வாம், தலமானதலையோடுபிடரிகுற்றம் காக்கானமலைமிறுகி நீருங்கட்டு ர், குலமானபெருநாம்புதான்முடக்கும்- குடைச்சலாய்வாய்தானும்வா ண்டுகாணும், பெலமானகுளிரோடுசுரமுமுண்டாம் - பேர்பெரியவாத மென்றேபேசலாமே. (௫௪௧)

ஆமப்பாவாதமதெண்பத்துநாலு- அதினுடையகுணகுணங்கள டங்கலாக, ஓமப்பாவடமொழியைப்பிரித்துப்பார்த்து - உலகதோர்பி ழைக்கவென்றேஉறுதிசொன்னேன், தாமப்பாதன்வந்திரிசதாசிவனைக் கேட்கச்- சதாசிவன்றான்சொன்னபடிநானுங்கேட்டு- நாதாக்கள்சொன் னபடிநாட்டினேனே. (௫௪௨)

வாதரோகநிதானமுற்றிற்று.

---

## பித்தரோகநிதானம்

நாட்டினேன்பித்தத்தின்பெயரைத்தானும்- நாற்பத்திரண்டானகு ணகுணங்கள், ஆட்டினேனூர்த்துவபித்தம்தன்னோடு - அமலகபித்தம் உன் மாதபித்தம், தாட்டினேன்தமகபித்தம்வாதபித்தம்நனித்தவோர்வன்னி பித்தஞ்சேட்டபித்தம், தூட்டினேன்சுரோணிதபித்தம் விகாரபித்தம்து டியானவிரதபித்தந்துகையைக்கேளே. (௫௪௩)

துகையானவுரத்தபித்தமிரத்தபித்தஞ்- சுழிகாசப்பித்தமொடுசுவா சப்பித்தம், வகையானசேட்பபித்தக்கருப்பித்தந்தான் - மாகசப்பான்பி த்தசீர்ணபித்தம், அகையானவருசிபித்தபெரிபித்தந்தான்- அழல்பித் தந்துடிப்பித்தம்விஷப்பித்தந்தான், முகையானஅதிசாரப்பித்தந்தானும் மூலபித்தமூதரிபித்தமுறைமையாமே. (௫௪௪)

சர்மந்தான்சிவப்பாகவட்டணித்துச் - சலவைபோல்வெளுக்குமேதினவுண்டாகும், வர்மந்தான்ரோகமதுமிகவுண்டாகும்-மயிரெல்லாஞ்சுருண்டுமேஉண்டையாகும், கர்மந்தான்பித்தசேட்டுமமிகுக்கும் - காயந்தான்கதித்துமேதிமிருண்டாகும், தர்மந்தான்சடமெல்லாமூதலாகும் தாக்கானதேத்திருக்குஷ்டந்தானே. (௩௱யக)

## சித்துமாகுஷ்டம்.

தாக்கானவாதபித்தத்துற்பவித்துத் தளிரானசுரைப்பூவின்வண்ணமாகி, வாக்கானவடிவமெல்லாந்திமிருண்டாகி- வட்டணித்துப்பசுமஞ்சள்வர்ன்னமாகும், தேக்கானதிமிரோடுசெந்நீருண்டாய்- தேகமெங்குமசைக்கொணுச்செழுமையாகும், நீக்கானநினைவோடுமறதியாகும்-நிலவரமாஞ்சித்துமாகுஷ்டந்தானே. (௩௱ய௨)

## சதாருகுஷ்டம்.

சித்தானதண்டிப்பாய்ரத்தவர்ன்னம்-செழும்பச்சைவெள்ளையாய்ச்சிவப்புமாகும், எத்தானவெரிப்போடுதினவுமாகும்-எளிதானசேட்டுமவாதத்துற்பத்தி,பத்தானகாடுகட்டிப்புண்ணுமாகும்- பாம்புதோல்போற்றிறைந்துபருத்துக்காணும்,வித்தானமூக்கோடுகாதுகன்னம்-மிகத்தடிப்பாஞ்சாதாருகுஷ்டந்தானே. (௩௱ய௩)

## சுவேதகுஷ்டம்.

தடிப்பாகத்தவளநிறம்போல்வெளுத்துச்சர்வாங்கமும்வெளுத்தாற்றான்றிரும்பும், மடிப்பாகமயிர்வெளுத்தாலசாத்யமாகும்வரிவதடுவுள்ளக்கைக்குதயங்குய்யந்தான், நெடிப்பாகநெருப்புப்பட்டதுபோற்புண்ணாய் - நிறமிருந்தாலசாத்தியமென்றேயுணாக்கலாகும், வெடிப்பாகமேனியெல்லாம்வெளுத்துவிங்கில்- வெண்சுவேதகுஷ்டமென்றேவிளம்பலாமே. (௱௰௪)

## குஷ்டம்வரலாறு.

விளம்பவேமிகுந்தஊஷ்ணந்தன்னாலும் மிகுந்தசீதளத்தாலுமழற்சியாலும், வளம்பவேமந்தத்தால்வாந்தியாலும்- மகத்தானபெண்ணோடுமருவலாலும், இளம்பவேகிலேசங்கள்மிகுதலாலும்- கெடியானவுரக்கங்களடைதலாலும், தளம்பவேமயிருகிர்களதவிடுமண்கள்- சாதத்திற்பருகலால்மிகுக்குங்குஷ்டம். (௱௰௫)

குஷ்டந்தான்பதினெட்டுவரவேதன்னிற்- குருநிந்தைசிவநிந்தைமறையோர்நிந்தை, திஷ்டந்தான்தேவதையைத் தூஷணைக்குமோ தம்செப்பலாற்றிருடலாற்பரதாரத்தை, அஷ்டந்தானுசையாலடைக்கலத்தை அபகரித்தலகதிபாதேசிதன்னை, வஷ்டந்தான்வைதலாற்காப்பழித்தல்- வந்திடுமேபதினெட்டுகுஷ்டந்தானே. (௱௰௬)

## சாத்யம்.

குஷ்டந்தான்பதினெட்டில்சாத்தியந்தான் கூறக்கேள்விற்பொட்கபாமற்குஷ்டம், இஷ்டந்தான்கெசசர்மகுஷ்டமோடு - கிருஷ்ணகுஷ்டமவுதும்பர்குஷ்டந்தானும், திட்டமகேதேத்திருக்குஷ்டமோடு- செயசித்துமாகுஷ்டங்கிடீபகுஷ்டம், தட்டந்தான்மிகுந்தசாதாருகுஷ்டம்சமகிருஷ்ணகுஷ்டமசாத்தியமாமென்னே. (௱௰௭)

## அசாத்யம்.

ஆமென்றபத்துந்தானசாத்யமாகும்- அசாத்யமதுதானெட்டுஅறிந்துபாரு, போமென்றபூர்வத்தின்கன்மத்தாலும்- புவிதனக்கும்மிகுகன்மஞ்செய்தபாவம், பாமென்றபெரியோர்கள்சாபத்தாலும் - பாதகங்கள்மனதறியப்பண்ணும்பேர்க்கும், கோமென்றகுஷ்டமாம்ரோகம்வந்து- கூடுமென்றுலூகிமுனிகூறினேனே. (௱௰௮)

குட்டரோகநிதானம்-முற்றிற்று.

---

## பாண்டுரோகநிதானம்.

கூறவேபாண்டுவிடப்பெயரைக்கேளாய்-குறிப்பாகவைந்துவிதமாகும்பாரு, வாரவேவாதமாம்பாண்டுவோடுமார்க்கமாம்பித்தத்தின்பாண்டுவாகும், தேறவேசிலேட்டுமமாம்பாண்டுதானும் - திரிதோஷப்பாண்டோடுவிஷப்பாண்டாகும், ஆறவேபாண்டுமிடவாண்மையெல்லாய்- ஆராய்ந்துசொல்லவேயறிந்துகொள்ளே. (௱௰௯)

உற்பத்தி.

அறிந்துமேஉற்பத்திசொல்லக்கேளாய்-அதிசாரமதமிளகியெச்சே ரந்தான், பிறிந்துமேபிளியுப்புபெருத்தலாலும்-பெத்தமாமக்கினியிலிரு த்தலாலும், மிறிந்துதாம்பூலமிகஅருந்தலாலும்- மீறியேமதுக்களைத்தா ண்புசித்தலாலும், பறிந்துமேபகல்நித்திரையேசெய்தலாலும்- பாண்டுவெ ந்துபாரிலுள்ளோர்படும்பாடாமே. (௫௰)

பாடானபஞ்சத்தை நிருடினோர்க்கும்- பாங்கானசிவதுயிலைப்பரு கினோர்க்கும், மாடானபசுவதைப்பட்டினியதாக-வைக்கின்றோர்மறை வழியைநடந்திடாதார், காடானவாரணியந்தனிற்பறித்துக்-கடுவதைக க்குவதைகள்செய்கின்றோர்கண்காணுக, கோடானபழிசொல்லிக்குடிகெ டுக்கும்-கொடும்பாவிபாண்டுவினுற்குதிகொள்வாரே. (௫௰௧)

வாதபாண்டு.

கொள்ளவேவாதபாண்டுரோகங்கேளாய் - குடல்பிரட்டியடிவயிறு தான்வலிக்கும், தள்ளவேதாகமொடுபுசியுமில்லை-தழலானசாசரப்பாகத் தானும், நள்ளவேநரம்பெல்லாங்கறுப்புமாகும்-நடுக்கலொடுகண்சிவப்பு மலபந்தந்தான், விள்ளவேதலைவலிக்குமேனிவீங்கும்-வெளுப்பாகும்வா தத்தின்பாண்டுவாமே. (௫௰௨)

பித்தபாண்டு

வாமென்றமேனியெல்லாமஞ்சளித்து-மகாவெளுப்புஉண்மாகிமக் தக்கண்ணும், தாமென்றதாகமொடுமூர்ச்சையாகும்- தனிவாயில்மிளகு போற்றுனைக்கும், நேமென்றநெஞ்சுமுடிதானுமுண்டாய்- நெருக்கி யேமூச்சுமுட்டதுவேயாகும், கோமென்றகிறுகிறுத்துவாய்கைப்பாகு ம்கிளர்பித்தபாண்டுவெனக்கீறலாமே. (௫௰௩)

சிலேட்பபாண்டு.

கீறியதோர்நரம்புதோல்மிகவெளுப்பு- கிளர்நாவுஉப்புரைக்குமயிர் கூச்சாகும், வாறியதோர்வாந்தியாங்குரலுங்கம்மும்- மகத்தானதும்பலு டன்கோழையாகும், ஈறியதோரிருமலொடுமயக்கமுண்டாம்இடுப்பசதி யிந்திரியநஷ்டமாகும், ஏறியதோர்சோபமொடுதாபமாகும்- சிலேட்டும த்தின்பாண்டென்னச்செப்பலாமே. (௫௰௪)

திரிதோஷபாண்டு.

செப்பவேஅருசியோடுசோபதாகம்-செயலானசுவாசமொடுஇளைப் புமாகும், வெப்பவேமேகிசிறுநீர்தான்வீழும்- மிடுக்கானபெலஈனமார்பி டித்தல், துப்பவேசூட்டோடுதியக்கமாகும்- தும்மலாயுடம்பெங்குமூதி க்காணும், திப்பவேதேகமெங்குமசதியாகும்- திரிதோஷப்பாண்டெண் ணச்செப்புநூலே. (௫௰௫)

## விஷபாண்டு.

நூலாகநலத்தோடேயுடல்வெளுக்கும்- நோய்காம்புகூடாகுந்தாக மாகும், ஆலாகஅருசியொடுசத்திவிக்கல்- அதட்டியேஇருமலுடனதிசுவாசம், வாலாகவயிற்றிரைச்சலதிசாரதோஷம்-மாசூமுமுண்டாதல்மார்கனத்தல், வேலாகமேனியெங்குமிகவேவூதல் - விஷபாண்டுஅசாத்யமென்றேவிளம்பலாமே. (௫௨௬)

விளம்பவேபாண்டுமுற்றிஇருக்கும்போது- மீறியேபித்தவஸ்துதனைப்புசித்தால், புளம்பவேமங்கையுடன்புணர்ச்சிசெய்தால்பூண்டிடுமே காமாலையென்னுமரோகம், தளம்பவேகாமாலைபதின்மூன்றுகும்-சார்வானபேரோடுகுணகுணத்தை, உளம்பவேஅசாத்தியங்களதனையெல்லாம் உரைக்கிறதுஉரைக்கின்றேனுற்றுக்கேளே. (௫௨௭)

## காமாலைரோகநிதானம்.

உரைக்கவேவூதுகாமாலையோடு- உயர்ந்தவாதக்காமாலைவாதக்காமாலை, புரைக்கவேபித்தகாமாலையோடு- பேரானசிலேட்டுமகாமாலையாகும் வரைக்கவேவாதசிலேட்டுமகாமாலை- வகையானபயித்யசிலேட்பக்காமாலை, துரைக்கவேதொந்தகாமாலையோடுசூக்ஷமமாமஞ்சட்காமாலையாமே

மஞ்சளாமழுகுகாமாலையோடு - மருவுகின்றசெங்கமலக்காமாலையாகும், குஞ்சலாங்கும்பகாமாலையோடு கொடியகுன்மக்காமாலைபதின்மூன்றுகும், தஞ்சமாங்காமாலைமுற்பிசன்மத்தில்-தயையில்லாக்கோபத்தாற்சண்டைதன்னால், பஞ்சலாம்பரமசிவன்றன்னைத்தானும்-டணியாதமூடருக்குப்பரவுந்தானே. (௫௨௯)

## காமாலைஉற்பத்தி.

பருகவேஉள்ளங்காலுஉள்ளங்கைகள் பகர்முகங்கண்ணுடம்புமிகவெளுப்புகாணும், கருகவேகால்கைகளோச்சலாகும்கனமாகநடுக்கியேஇளைப்புண்டாக்கும், சுருகவேமலங்காணும்வாண்டுகெட்டும் தாய்முகமஞ்சளிட்டசிரமதாகும். வெருகவேவீக்கமயக்கங்களைப்புண்டாகும்- மிகக்காதுமந்தமொடுதலைகனப்புண்டாமே (௫௩௰)

## ஊதுகாமாலை.

கனபபாகக்கண்ணுமுகங்கசிவுண்டாகும்- கனவீக்கமுடலெங்கும் உளைவுண்டாகும், அனப்பாகவழற்றலாய்தேககுணர்வில்லை-அதிகமாய்ச்சீதவெப்புகலைதிருப்பு, தினப்பாகதியக்கமே மெருநீர்பஞ்சள்-தேகமெங்கும்வாடியேதிமிருண்டாகும், உனப்பாக முகமாய்முக்கும். ஊதுகாமாலையெனவேசொல்லாம்தானே. (௫௩௧)

### வாட்காமாலை.

உரைக்கவேகால்கைகள்மிகவும்வற்றும்- ஊணவேகால்தவறுமசதியாகும், நிரைக்கவேநீலம்போல்மலமிலங்கும்- நீர்தானுஞ்சிவந்துமேநெருப்பாய்க்காணும், துரைக்கவேசூலைநோவென்னக்குற்றும்-சோறுருசியில்லாதுமாலைக்கண்ணும், வரைக்கவேவடிவெல்லாங்கருகிக்காணும்மயங்குவாட்காமாலைவகுத்தவாறே. (௫௰௨)

### வாதகாமாலை.

வாருனவயிறுதனைப்பொருமிவிக்கும்-மலந்தானுங்கழியாதுஉடம்புவீக்கும, பூருனபுரங்காலுமுகமதைக்கும்-புகழ்கருமமொன்றையுந்தான்செய்யவொட்டா, ஊருனவுடல்கடுக்குமிகவிளைக்கும்-உறக்காதுமிகவீங்குங்கண்பருக்கும், பாருனபசியில்லாதுறக்கமாகும்- பண்பானவாதகாமாலையாமே. (௫௰௩)

மாலையாயுடம்புலர்த்தும்உறக்கமில்லை- மகத்தானபடுக்கைவிட்டெழுதுஞ்செய்யா, சேலையாய்ச்சோறுமேசெரியாமற்றான்-செடமெங்கும்வாயுவாய்த்தியக்கமாகும், பாலையாமூச்சதுவுமிகவுண்டாகும்- பருக்கையாய்க்கழியும்வயிறுதானும், ஆலையாய்வயிற்றிரைச்சலதிகமாகும்அசதியாம்பித்தகாமாலைதாமே. (௫௰௪)

### சிலேட்பகாமலை.

தாமென்றசடத்தையேயறிவழிக்கும்-தாக்கான இருமலேமிகவுண்டாகும், வேமென்றதலைமுகமூம்வியர்வையாகும்மிடுக்கானநடைகுறையுமூச்சுமாகும், பாமென்றபாக்கருந்தில்மிகச்செருக்கும்பண்பானவிழிசிவக்குமுடல்நடுக்கும், நேமென்றநெஞ்சுதான்மிகக்கனக்கும்- நெடிதுயர்க்குஞ்சிலேட்டுமகாமாலையாமே. (௫௰௫)

### வாதசேட்பகாமாலை.

துயர்க்குமன்னந்தனைத்தானுஞ்சீர்ணமாகா- செரிக்கசுகமாகவொட்டாச்செருமலாகும், முயிர்க்குமுகமூக்குக்கண்மிகவேவெச்சும் - முடுகியேவயிறிறைந்துபொருமிக்கொள்ளும், சயர்க்குநாக்குக்கண்ணுமிகவெளுக்கும்-கனமானநடையினில்மூச்செறியவைக்கும், வியர்க்குமேனிகமெல்லாம்வீக்கமாகும்-மிடுக்கானஇருமலுண்டாம்வாதசிலேட்பம. ( )

### பித்தசிலேட்பகாமாலை.

உண்டாகிவாந்திபண்ணுஞ்செருமலாகும் - ஓயாமற்றலைவலிக்குமனமருக்கும், வண்டாகிவயிர்கழியுந்தாகமுண்டாம - மனமெல்லாம்புண்ணாகிமயக்கமாகும், துண்டாகிச்சாதமுப்பிச்சீரணியாது- துய்யமுகங்காலோடுகைவெளுக்கும், வெண்டாகிமேனியுமேஊதிக்காணும- மிகப்பித்தசிலேட்பகாமாலையாமே. (௫௰௭)

### தொந்தகாமாலை.

ஆமென்றவங்கமழன்றேயெரிக்கும்- அசதிவருமடிக்கடிக்குஇருமலுண்டாம், தாமென்றதண்ணீர்தான்மிகத்தவிக்கும்- சடமெங்குங்கடுப்பெடுக்கும்புளித்தேக்காகும், போமென்றநாவதுதான்மிகப்புளிக்கும்-புளையானபசியெடுக்குங்குளிருண்டாகும், வேமென்றஅடிவயிறுவீங்கும்வேர்க்கும்-மிக்கதொந்தகாமாலைவிபரந்தானே. (௫௰௮)

## மஞ்சள்காமாலை.

விபரமாய்மூத்திரந்தான்மஞ்சளாகும்-விங்குமேசரீரமெங்குமெலி வுண்டாகும், மூபரமாய்முகங்கால்கண்கையுண்ணாக்கு-மொழிமஞ்சணி றமாகும்முமமினுக்கும், அபரமாயன்னத்தைபிறங்கொட்டாது-அழு கையாய்மனஞ்சலிக்குமூச்சுண்டாகும், தபரமாய்த்தாதுநஷ்டம்மலமும பந்தம்சார்ந்தமஞ்சகாமாலைதன்போமே. (ருஙகூ)

## அழகுகாமாலை.

பேரானகால்கையுமசதியாகும் - பேர்புருவங்கண்கள்கழற்கொடிக் காய்போலப், பாரானபச்சென்றுகானிருக்கும்-பருகுநீர்மஞ்சணிறமாய் விடுக்கும், தீரானலிங்கத்துளெரிப்புமாகும்- செரிக்கவொட்டாதன்னத் தைச்சிதறியுப்பும், ஆரானவழல்போலவெதும்புமேனி அழகுகாமாலையி டவாண்மைதானே. (ருசய)

## செங்கமலக்காமாலை.

ஆண்மையில்லாத்தமாகத்தின்குணமுமாகும் - அங்கமெல்லாந்தழ ற்சியுமாய்ச்சோம்புமாகும், தீண்மைசிறுநீர்சிவந்துமஞ்சளித்துச்- சிறு கியேசிறுநீர்தான்அருக்கிவிழும், நாண்மையாய்நகங்களுடல்மிகவெளு த்து-நற்காயம்வற்றியேசுரமுண்டாகும், ஊண்மையாயுண்ணாக்குஉமிநீர் நாக்கும்-உறுமஞ்சள்செங்கமலக்காமாலையாமே. (ருசக)

## கும்பகாமாலை.

காமாலையடிக்கூடிக்களையேபோடும்-கனமாகவுட்ம்புசிறுநீர்மஞ்ச ள், வேமாலைநோத்தில்வியர்வையாகும்- மேனுக்கும்வாதந்தான்கண்சி வக்கும், பூமாலைபோலவேதுவண்டுபோகும்-புகழானமயிலுறக்கம்போ லேயாகும், கோமாலைமலந்தானுங்குதுக்கென்றுகும்கொடியகும்பகாமா லைக்குணமிதாமே. (ருசஉ)

## குன்மகாமாலை.

குணமானவாய்வெளுப்புகண்தான்பச்சைக்- கொடுமூத்ரமஞ்சளித் துக்குழம்புமாகும், அணமானவன்னந்தான்செரிக்கும்போது- அடிவய ற்றில்வலியுண்டாம்வாந்தியாகும், மணமானதொன்றுமேயறிந்திடாது- மயிலுறக்கமிளைப்பிருமல்மூச்சுமாகும், பிணமானததுபோலக்கிடைகி டக்கும்பிராணுமேகுன்மகாமாலைதானே. (ருசங)

## சாத்தியம்.

தானானகாமாலைப்பதின்மூன்றுகும் - சாத்தியந்தானேழாகும்பே ரேதென்னில், பானானபையித்தியகாமாலையோடு- பாவுமஞ்சட்காமாலை சிலேட்பமாகும், ஊனூனஊதுகாமாலையோடு-உணர்த்தும்வாட்காமாலை வாதசிலேட்பம், கோனானபையித்யசிலேட்டுமக்காமாலைகுணமாகமேழுந் தான்கூர்ந்துகேளே. (ருசச)

## அசாத்தியம்.

கேளென்றகும்பகாமாலையோடு - கெடிகொள்குன்மக்காமாலைதொந்தகாமாலை, வாளென்றவாதகாமாலையோடு - மருவுகின்றசெங்கமலககாமாலையாகும், ஆளென்றவழகுகாமாலையோடு - ஆறுந்தானசாத்தியமாமறிந்துகொள்ளு, கோளென்றுசொல்லிமகாகொடுமைசெய்த - குணங்கெட்டமானிடனாக்கூடுந்தானே. (ருசரு)

பாண்டுரோகநிதானம் - முற்றிற்று

---

## சோபைரோகநிதானம்.

தானானசோபையதுநாலுவிதமாகும் சாற்றிடவேவாதத்தின்சோபையோடு, தேனானபித்தத்தின்சோபையாகும் - சிலேட்டுமத்தின்சோபைதிரிதோஷசோபை, நானானநாலுவிதச்சோபைதன்னில் - நாட்டமெல்லாஞ்சொல்லிடநீயந்துகேளாய், பானானஉமைதனக்குச்சிவன்றான்சொன்ன - பாங்கதனைப்பகருவன்யான்பரிந்துகேளே. (ருசசு)

பாங்கானசன்னிபாதச்சுரங்கள் - பகர்சித்தப்பிரமை சன்னிபருகினாலும், தேங்கானபன்னகந்தான்றீண்டலாலும் - சிலவிஷங்கள்தேகத்திலூறலாலும், ஆங்கானசிறையிருத்தல்அடிபடுதலாலும் - அநேகவழிநடக்கைமலையிருக்கையாலும், தாங்கானசலக்கரைகள்தனிலிருக்கல் - சாம்பல்மண்மாதவிடுதன்னாற்சோபையாமே. (ருசஎ)

### வாதசோபை.

சோபைதான்வருமுன்னேஉடல்தான்வற்றும் - சகநரம்புதான்வெளுக்குமசீர்ணமாகும், தூபைதான்பெலக்ஷயமாய்நடுக்கலாகுஞ் சுரமோடுமிகவெளுப்புமிளைப்புமாகும், மாபைதான்மயிர்முனைகள்சிவந்துபோகும் - மகத்தானநித்திரையுமந்தமாகும் சோபைதான்அங்குலிலேசடமெங்குந்தான் - கொடுவலியாம்வாதத்தின்சோபையாமே. (ருசஅ)

### பித்தசோபை,

வலியாகமயிர்மஞ்சளித்திருக்கும் மகத்தானசத்தியமேமிகவிரும்பும், தவியாகத்தாபமொடு இளைப்புகாணும் - சரீரந்தான்மிகச்சிவப்பங்கலைவிக்கும், புலியாகவிருந்ததுபோய்பெலவீனத்தால் புகலரியமயக்கமொடுவியர்வையாகும், நலியாகக்கண்புருவமூகருத்தண்டு - நலங்குமேபித்தத்தின்சோபைதானே. (ருசகூ)

### சிலேட்பசோபை.

நலங்குமேவடிவெல்லாந்தினவுண்டாகும் - நல்லமயிர்க்கால்வெளுப்புடல்வெளுப்பு, கலங்குமேகமெங்குஞ்சொரசொரப்பு - கடுக்கிமேயமிகக்குளிர்நடுக்கத்தையில்லை, வலங்குமேமொழியனைநடுக்குரலதேரிவாகும் - விழுமியாய்ப்பதிகலைகிறுகிப்பு, சிலநசமேரக்தங்கள சாந்திவீங்கும் - சிலேட்டுமத்தின்சோபையெனச்செப்பலாமே. (ருரு)

## திரிதோஷசோபை.

செப்பவேமெல்லியர்மேல்மிகுந்தகோபம்- செடம்விக்கறபாரியு மாய்ச்சுரமுண்டாகும, அப்பவேஅதிசாரம்வயிற்கடுப்பு-ஆசனத்தில்மி கக்கடுப்பு அசனஞ்செல்லா, நப்பவேகாலகைையுந்துண்டுகாணும- நடக்க வேபெருமூச்சாய்க்கிறுகிறுக்கும, திப்பவேஉமிநீர்தான் மிகவேஊறும திரிதோஷசோபைசாதத்தியமாச்சொல்லே. (௫௧)

சொல்லவேபாண்டுகாமாலைசோபை தொகுப்பாக மூன்றினிடச் சொரூபஞ்சொன்னேன், மல்லவேவடமொழியினவகுப்பைப்பார்த்து- மகத்தானநாதாக்கள்வசனங்கேட்டு, வல்லவேமானிடர்கள்பிழைக்கவெ ன்று-மனோன்மணிக்குச்சிவன்சொன்னவசனங்களை, எல்லவேயூகியெ ன்றமுனியாம்யானே-எழுதினேனாயுர்வேதத்தைத்தானே (௫௨)

தானானஆயுர்வேதத்தையெல்லாம் -சாங்கமாய்ச்சோதித்துச்சாரந் தன்னை, தேனானதமிழினால்விரித்துச்சொன்னேன்-சிறுபிள்ளைபார்த்தா லுந்தெரியவென்று, ஏனானஏழுலக்ஷத்திரந்தப்போக்கை - எடுத்துமே சோதித்தெழுதினேன்யான், ஊனானயூகியென்றமுனியாம்யானுமஉல கத்தோர்க்காகவென்றுஉரைசெய்தேனே. (௫௩)

சோபைரோகநிதாநம்-முற்றிற்று,

---

## மகோதரரோகநிதாநம்

செய்ததோர்மகோதரந்தான்முப்பத்திரண்டு - சிறப்பானபெயரை யெல்லாஞ்சொல்லக்கேளாய்,வைத்ததோர்வாதமகோதரத்தினோடுவகை யானபித்தமகோதரஞ்சிலேட்டம்,கொய்ததோர்வாதசிலேட்டுமத்தினோ டு,கொடும்பித்தசிலேட்டமகோதரமுமாகும்,தொய்ததோர்தொந்தமகோ தரத்தினோடு-துரிதமாங்கமலமகோதரமுங்காணே. (௫௪)

காணவேவில்வமகோதரத்தினோடு - கடியதோர்வழுமைமகோதர முந்தானும், நாணவேநழுவைமகோதரநீராம்பல் நலந்தஷ்ஞமாபிலாடு வெப்புப்பாவை கோணவேகுலமுட்டிமகோதரந்தான்-கொடியகிழ்க்கவி சைமேற்கவிசையாகும்.பாணவேபக்கமாங்கவிசையோடு-பழுக்கவிசை பெருவயிறுமகோதரந்தானே (௫௫)

வயறானசூலமகோதரமும்வல்லே - மகோதரமும்விஷமகோதரத்தி னோடு,கொயறானதொந்தமோடுவழுவைவில்வம்-கொடிசானஉதரமகோ தரமுமாகும், புயறானகூர்மமுடன்வெப்புபாவை- புரமகரமகோதரமும் குலைமுட்டாகும்,வெயறானபாண்டுவோடுநரமகோதரந்தான்-விசகிரந மகோதரமுஞ்சல்முமாமே. (௫௬)

சலமகோதரமாங்சமகோதரமதாகும்- தாக்கானமகோதரங்கான்மு ப்பத்திரண்டு, உலமானஉற்பத்தியுரைக்கக்கேளாய் உமிழினால்கல்வினு ல்ரோமமுள்ளால், சுலமானசுணையினால்தோஷநீரால்- தாம்பியேநீர்தேனை நீர்அலர்ந்தசோற்றால், மலமானமங்கையர்கள்மருந்தினிட்டால்-மகோத ரமாய்நோய்வந்துமருவுங்காலே. (௫௫௭)

காலானமேகந்தான்வயற்றிற்கட்டிக் - கடிசானசிப்சிதம்வயிற்றிற் றங்கில், தாலானசதையுதிரம்வயிறுதன்னில்-தயங்கினற்பாஷாணங்கரி க்கிற்சூகம், சேலானசெம்பினிடவூறல்தங்கில்-'சீரணத்தில்மேலன்னஞ் செலுத்தலாலும்' மாலானமங்கையர்கள்மருந்தினாலும் மகோதரங்கள்வ ந்துஉற்பத்தியாமே. (௫௫௮)

உற்பத்திஒருவருடனுண்மைபேசி உபர்சபையிற்பலவிதமாயுரை க்கின்றோர்க்கும், அற்பத்திலனியாயஞ்செய்கின்றோர்க்கும் அலைத்தில னியாயம் பண்ணினோர்க்கும்,பற்பதகிகொருவரிடப் பிரயோசனத்தை ப்-பறிக்கின்றோர்கெடுக்கின்றோர்பந்திதன்னில், தற்பலத்திரோவஞ் சனையேசெய்த-துரோகிக்குமகோதரங்கள்தொடர்ச்சியாமே. (௫௫௯)

வாதமகோதரம்.

துடர்ச்சிபாங்காயமதுவெளுப்புமாகும்- சூக்ஷமாய்ச்சடலம்வற்றி த்துர்ப்பலந்தான், அடர்ச்சியாமன்னமது வேண்டாதாகும்அடிவயிற்றி லிரைச்சலுமா யுப்பசமாகும், புடர்ச்சியாய்ப் பிணமுகமாய்ச்சாயலாகும் புளிப்பானவசீரணத்திற்பசியுமுண்டாம், தடர்ச்சியாயடிவயிறு தன்னி ல்வீங்கும்-சஞ்சலிக்கும்வாதமகோதரந்தானென்னே. (௫௬௰)

பித்தமகோதரம்.

என்றகண்ணிற்காசவன்னமுமாய்ததோன்றி- ஏற்றகாமோகமாய் த்தாகமாகும்அன்றவதிசாரமுமாய்வயிறுபோகும் -அழற்றியொடுவியர் வைமேல்மன்சளிப்பு துன்றதோல்சாசரப்புத்திரட்டிபோலஞ்- சுயநா ம்பிபலவிதமாய்வர்ன்னமாகும், பன்றசனஞ்செரியாமல்மலமுமபோகும பயித்தியமகோதரத்தினிடப்பண்புதானே. (௫௬௧)

சிலேட்பமகோதரம்.

பண்பானவுடல்நடுக்கியருசியாகும்-படுக்கைதனிலுறமில்லாதுப்பு றைக்கும், குண்பானகுளிர்காச்சல்சுவாசகாசங்-கோபமொடுவயிறுஉப் பசமுமாகும், வெண்பானபஞ்சுபோல்மிகவெளுக்கு- மிடுக்கானநீர்மல முங்கடுகடுக்கும், திண்பானஇருமலொடுகோழைமிஞ்சும்- சிலேட்பமா மகோதரத்தின்செயலிதாமே. (௫௬௨)

வாதசிலேட்பமகோதரம்.

செயலானசடம்வெளுத்தாற்போற்கடுத்தல்- தினிவயிற்றுமடிப்பு த்தான்மறையவீங்கல், நயலானநரம்புவயிற்றினிற்புடைத்தல் நலமான தூர்க்கந்தவாயுமீறல். அயலானவண்டங்கள்திடுக்கிட்டாற்போல்அடிவய ற்றில்முழக்கமாமலம்விட து, பியலானபீசந்தான்மிகுதிவீங்கும்- பிரித வாதசிலேட்டுமகோதரந்தானே. (௫௬௩)

பிரிவாகநாபிமாறளவுமட்டும்-பிதுங்கலாய்வயிறுமெத்தப்புடைக்கி டைக்கும்,வரிவாகவாய்வதுதான்மிகத்தம்பிக்கும்-மலங்கட்டும்நீர்குறை யும்மார்பில்நோவாம், எரிவாகஞுயிலிற்பூளையிலேதாக்கி-ஏற்றமாம்நய னவொளிமிகக்கிடைக்கும்.அரிவாகவங்கங்கள்கால்கைவீங்கும்-அதிர்பி த்தசிலேட்டுமத்தின்மகோதரமாமே. (௫௬௪)

தொந்தமகோதரம்.

அதிராகமஞ்சணீராக்கையாகும்- அகட்டியாய்வாதத்தின்நாடியாகு ம்.பதிராகப்பஞ்சுபோரிற்கண்ணீருருக்கும்பங்கமாயங்கமெல்லாம்பருக் கவிக்கும்,வதிராகவஞ்சகமாச்கால்கைவற்றும்-வற்றியே உடம்பெல்லா ம்வயிறுவிம்மும், சுதிராகத்தலைசுற்றல்தியக்கமாகும்-தொந்தமாமகோத ரத்தின்சூக்ஷம்பாரே. (௬௬௫)

சூட்சமாயிருமலொடுஇளைப்புமாகும் - சுருபந்தான்மஞ்சணிரமாக வீங்கும், மோட்சமாய்மேல்வயிறுகருக்கல்போல- முாண்டியேமிகவிக கும்அசனஞ்செல்லா, காட்சமாய்முகங்கருகிக்கண்டிப்பாகும்-கசடற்று நரம்பெல்லாம்பசுமையாகும், தீட்சமாய்ச்சலமலங்கள்சுருக்கிக்கொள்ளு ம்-செடப்வெளுக்குங்கல்மகோதரமாமென்னே. (௫௬௬)

வில்மகோதரம்.

ஆமென்றவருணனிடவில்லுபோல- அதட்டியேவளைந்தாற்போல் பிருவுமுண்டாய், வேமென்றமேல்வயிறுதனில்வலித்து- மிடுக்காகஉப் பசமாய்விளையும்வீங்கி,வாமென்றமலசலமுஞ்சுருக்கிக்கொண்டு வாதை யாய்க்கிடைகொடாமயக்கமாகித்.தாமென்றதண்ணீர்தான்மிகவும்வேண் டும் சஞ்சலிக்கும்வில்மகோதரந்தானென்னே. (௫௬௭)

வழுவைமகோதரம்.

தரமானதண்ணீரிற்சொரியைப்போலத்-தளதளத்து வயிறுதனில் வளர்ந்தயேறும், மரமானதனும்பாலத்திமிருண்டாகி மாமிசந்தான்சோ றுபோல்வயிற்றிற்றுன்னி, பரமானதனைநினைந்துபசியில்லாமல் படுக் கைக்குஇடமின்றிப்பாதவிக்கும், அரமானவன்னத்தைக்கட்டொட்டா து-ஆகாதவழுவையமகோதரந்தானுமே. (௫௬௮)

நழுவைமகோதரம்.

ஆமேதானடிவயிற்றிற்கட்டியாகும் - அழுத்தியேபார்த்தாக்கால்ந ழுப்போகும், வேமேதான்மேல்வயிற்றிற்வன்னிபோல- மிடுக்கானபெ லங்குறைந்துமேல்மூச்சாகும், சாமேதான பிணம்போல்நடக்கொட்டா துதரிக்கொண்ணுத்தாபமுமாந்தளர்ச்சியாகும்.நாமேதானுவரண்டுநெஞ் சுபுண்ணாம்-நழுவைமகோதரமென்றேநாட்டலாமே (௬௬

## நீராம்பல்மகோதரம்-

நாட்டமாய்நாவரண்டுஇருமலுண்டாய்- நளிராகியடிவயிறுகதித்து விம்மிக்காட்டமாய்க்கடைக்கண்தான்மிகவெளுத்து-கதம்பமொடுபுறங்கால்கள்பதத்துவீங்கி, வாட்டமாய்மூச்சோடுமயக்கமாகி- மலந்தானுமிகத்தளர்ந்துவடிவபேருய். நீட்டமாய்க்காலகையுமுடக்கொணுது-நீராம்பல்மகோதரத்தினேர்மைதானே (௫௭௰)

## ஊரும்பல்மகோதரம்.

நேர்மையாய்மேல்வயிறுபொருமிக்கொண்டு-நெடிதுதகந்தேடியே மேனிசுண்ணும், வார்மையாய் மனதுதுயரமிகுந்திருக்கும்- மயக்கமொடு தியக்கமாய்மாழ்கித்துஞ்சும், கார்மையாய்முகம்வியர்த்துவெளுத்துநொந்துகனகனத்துஉடம்பெல்லாமசடிதுவற்றி, சீர்மையாய்ச்சிரசதனிற்பாரங்காணும் சினத்தஊரும்பல்மகோதரமுமாமே, (௫௭௧)

## வெப்புப்பாவைமகோதரம்.

சினத்தவுப்பங்காற்றுமேமிகவுமுண்டாய்த்-தேக்கியே உடலதிராதுமிகவும்பற்றி, கனத்தகைப்புப்பிளிப்புமிகத்தெகிட்டலாகும்-கல்லேபெங்லச்சரீரமெங்குங்கனத்துக்காணும், வினத்தவயிர்தளிற்புண்டுவெதும்பல்செய்யும் - விலாப்பக்கந்தனில்வந்துகட்டிச்சேரும், நனத்தவுப்புநாவிலேமிகுதியாகும் நவியுவெப்புப்பாவைமகோதரமாய்நாட்டே (௫௭௨)

## குலமுட்டிமகோதரம்.

நாட்டவேகுழவிபோல்குலையிற்சேர்ந்து- நலமாசுக்கீழ்மூடிப்பக்கம்வந்து, ஆட்டவேஅன்னத்தையருந்தொட்டாமல்-அபானத்தை இறுக்கியேமலம்விடாது, தேட்டவேதேகமெங்குங்கருகிவற்றி- சிரசோடுமுகங்கால்கைவீக்கமுண்டாம். கூட்டவேமலமூச்சுக்குராலுங்கம்மும் - குலமுட்டிமகோதரத்தைக்கூறிடாயே. (௫௭௩)

## கீழ்க்கவிசைமகோதரம்.

கூறிடவேஅடிவயிற்றில்வில்லைபோலக் குறிப்பாகக்கட்டிகட்டிவற்றையிப்பும், ஈறிடவேமேல்வயிற்றில்வில்லுபோல- இசிவாகிச்சந்தெங்குங்குடைச்சலாகும், பீறிடவேமனசுநொந்துபெருமூச்சாகும்- பிதற்றலாய்மனதில்வந்தபடியேபேசும்,மாறிடதேமலசலமுஞ்சுருக்கிக்கொள்ளும்மருவுகீழ்க்கவிசைமகோதரமுமாமே. (௫௭௪)

## மேற்கவிசைமகோதரம்.

விசையகனமேல்வயிற்றில்வில்லைபோல விளையுமேஊனெல்லாந்திரட்டிக்கொண்டு,தசையானநரம்புதோல்சுருங்கிக்காணும்- க்ஷணத்திலே படபடப்புமூச்சுமாகும், குசையானமரடைப்புக்குற்றலுண்டாம்-குமட்டியேவாய்நீருங்குதிகொண்டேறும், அசையானஅன்னந்தான்வேண்டாதாகும்-அளுக்குமேமேற்கவிசைமகோதரந்தானே. (௫௭௫)

பக்கக்கவிசைமகோதரம்

கவிசைபோல்பக்கத்திற்பற்றிக்கொண்டு- கனமாகவயிறுகல்லழுந் தலாகும், அவிசையாய்அடிவயற்றிற்குமூரல்காணும்- அங்கதாகத்தோடு எரிவுண்டாகும், புவிசைபோற்பொருமிவயிறுப்பிக்கொள்ளும்- புளித் தேக்காய்நெஞ்சிலேயெரிச்சலுண்டாம், பவிசையாய்மலசலமுஞ்சுருக்க மாகும்-பக்கமகோதரத்தினிடப்பரிசுதானே. (௫௭௬)

பழுக்கவிசைமகோதரம்.

பரிசாகப்பழுஎனும்பில்முளையைப்போலப்-பற்றியேவயிறெல்லாங்க னத்துவிம்மும், உரிசாகஉப்பசமுமேல்மூச்சாகும்-உழலையொடுதாபமு மாயுறக்கமாகும், அரிசாகஅன்னந்தானிறங்கொட்டாது அடிக்கடிக்குவா யுவுத்தானதட்டியாகும், செரிசாகவீங்கியேவற்றியூதும்-திணருமேபழு க்கவிசைமகோதரந்தானே. (௫௭௭)

பெருவயிற்றுமகோதரம்.

திணருமேகாயந்தான்மிகவும்வற்றிச் சோணமாய்மந்தமுமாமுதரக் தானும், உணருமேகல்லழுந்தமாகவீங்கி- உறுதியாய்நரம்புமேபுடைத் துக்காணும், மணருமேமலத்தையேமிகப்பறிக்கும்-வாடாமலூதியேமய க்கிவிக்கும், கிணருமேதூறெடுக்கஊறுமாப்போல்- கெட்டிக்கும்பெரு வயிற்றுமகோதரந்தானே. (௫௭௮)

சூலமகோதரம்

மகோதரம்போற்சூலானமங்கையர்க்கு-மாவருத்தமுண்டாகிமயக் கமாகும், அகோதர்மாயங்கமெல்லாமழற்சியாகும் - அன்னந்தான்செல் லாதுதண்ணீர்வேண்டும், சகோதரமாங்கால்கையுஞ்சந்துவீங்கும்-தழ லானகாச்சலொடுஅருசியாகும், உகோதரமாயுடம்பெல்லாமுளைச்சலா கும்-உற்றசூல்மகோதரத்தினுண்மைதானே. (௫௭௯)

வல்லிமகோதரம்.

உண்மையாங்தொப்ளுக்குள்நடுமையத்தில்உள்ளங்கையகலந்தான் கட்டியாகத், தண்மையாய்த்தமர்கொண்டுஅடைத்தாற்போலச் - சாங்க மாய்க்கருங்கல்லாய்த்தானிருக்கும், பண்மையாயசனமதுமுண்டாற்செ ல்லாப்-பருகிடுமேசுடுதண்ணீர்தன்மேலிச்சை, வெண்மையாய்க்கால்கை யுமசதியாகும்-மிடுக்கானவல்லிமகோதரமுமாமே. (௫௮௰)

விஷமகோதரம்.

மிடுக்காகமேனியொடுபொத்திபீசம்- வீங்கியேவெளுப்பாகமெலி வுமாகும், அடுக்காகச்சிறுத்துமேபருத்துக்காணும் - ஆணமையாய்பீசு மதுதளர்ந்திருக்கும், துடுக்காகமனிதருடன்வார்த்தைபேசும்- துக்கமா

மட

ய்மனக்கிலேசமெப்போதுர்நான், நடுக்காகஉடம்பெங்குந்திமிருமாகும் நலியும்விஷமகோதரந்தான்நாடிப்பாரே. (௫௮௧)

### பாண்டுமகோதரம்.

நாடிப்பார்வாடியே ஊதிக்கொள்ளும்- நன்னுடிச்செம்மையிலுகடக்கொட்டாது, வாடிப்பார்வகுத்தடியும்புறங்கால்வீங்கும்- வன்னமுகம்வேறுபட்டுமெயிலுறக்கம், தேடிப்-ாரோமமெங்குஞ்செம்மையாகும்செயலானரத்தமில்லாதெலும்புமாகும், கூடிப்பார்மூச்சோடுகுளுப்பையாகும்-குணக்கேடாம்பாண்டுமகோதரத்தின்கூறே, (௫௮௨)

### சோபைமகோதரம்.

கூறுனஅடிவயிறுகுழைந்துஉப்பிக் கூப்பிட்டுமேல்வயிற்றில்பிகுவுமாகும, தேறுனவண்டமொடுகால்கள்கைகள்- சிதைந்துமெத்தவீங்கியேசெழும்பலாகும், வீறுனமேல்மூச்சுஇருமல்தாகம் விக்கியேசரீரமெல்லாங்குளிர்ச்சியாகும, தாறுனமூத்ரமலஞ்சுருங்கிக்காணும்-சோபைமகோதரமென்றுசெப்பலாமே. (௫௮௩)

### காமாலைமகோதரம்.

செப்பவேநடுக்கலோடுகுளிர்ச்சியாகும்சிறியதோர்மூக்குமுகம்மார்புவேர்க்கும், உப்பவேஉடம்புலரும்புறங்கால்வீங்கும்- உலைந்துமேஅடிவயிறுமிகச்சுருங்கும், துப்பவேகோழையொடுசுரமுமுண்டாம் சுகமில்லாநித்திரைதான்றலைவலிக்கும் தப்பவேமிகத்தாகஞ்சலிக்குஞ்சிந்தைதளருங்காமாலைமகோதரந்தானுமே. (௫௮௪)

### குன்மமகோதரம்.

தானுக்குலைதனையேமிகவலிக்கும்- சாப்பாடுசெரியாமல்வயிறுகுற்றும், வேனுகமேனேக்கிச்சத்தியாகும்-மிடுக்கானவசிரணமாய்ப்பேதிகும், பானுசப்பக்கம்விலாஇடுப்புகுக்ஷி- பணைத்துமேவீங்கியேகல்லுபோலாம், கோனுநக்கோமயம்போனீரிறங்கும்- குன்மமகோதரத்தினிடக்குணங்கள்தானே. (௫௮௫)

### உதாமகோதரம்.

குணமாகவாண்டுகண்சிவந்துக்கொள்ளும் கொடிதானவாயுவதுதிரட்சியாகும், பணமாகப்பக-ந்துநீர்போதவாங்கும்- பசியன்றிக்கனத்திருக்கும்மலம்விடாது, வண-ாகவயிறெல்லாம்மெத்தஊதி- மார்பளவுங்கழுத்தளவுமறையவீங்கும், மணமாகவயிறுதான்மிகவேபீறும்- மகாஉதாமகோதாத்தின்வளப்பந்தானே. (௫௮௬)

### கூர்மமகோதரம்.

வளப்பந்தான்வரண்டுமேகண்சிவந்து-வயிறுவிடபிவாயுவுந்தான்திரட்சியாகும்-இளப்பந்தானிருகண்ணுஞ்சுருங்கிக்கொள்ளும்- இருமலோடிளைப்புநீர்போதவாங்கும், அளப்பந்தானுமைபோல் வயிற்றிற்கட்டி

அசனந்தான்செல்லாதுபெலனுங்குன்றும், குளப்பந்தானிரைச்சலொடுகுமுறலாகுங்கூர்ம்மாமகோதரத்தின்குறிப்பிதாமே. (௫௮௭)

## பீலிகை மகோதரம்.

குறிப்பாகப்பரிசத்திற்கூர்மையாகும்-குணமாகமலமோடு சலமுமுண்டாம், தெறிப்பாகவாயுவதுகீழோநோக்கு-செடமெல்லாம் வீங்காமற் கொஞ்சம்வீங்கும், முறிப்பாகஅசனந்தான் மிகவேவேண்டும்-மூத்திரந்தான் மிகுதியாம்மூர்ச்சையில்லை பிறிப்பாகக்கண்களிலோத்தமாகும்-பீலிகைமகோதரமாய்ப்பேசலாமே- (௫௮௮)

## சுரமகோதரம்.

பேசவேகாலோடுவயிறுபோற்றிப்-பெருங்கணைக்காற்புறங்காலுமெத்தவீங்கி, வாசவேமார்பிடரிநரம்புதோன்றி வயிறுதான்மிகப்பொருமிமெத்தவீங்கும், கூசவேசுரமோடுஅசதியாகும் கொடியதோர்தாபமுண்டாமெரிச்சலாகும், வீசவேமிகவேண்டுமெரிச்சல்தன்னால் வீங்குல்கண்சுரமகோதரம்விளம்பே. (௫௮௯)

## சலமகோதரம்.

விளம்பவேயங்கமெல்லாஞ்சலந்தான்கோர்க்கும்-மேனியுமோமஞ்சணிறம்மாகும்பாரு, உளமபவேவுப்பசமுமுழலையாகும்-உயர்கின்றலிங்கந் தான்தளர்ந்துபோகும் முளம்பவேமுதுகோடு வயிறுவீங்கும் மூலமாந்தாதுக்கள்திகைத்தேநிற்கும், புளம்பவேபொறியைந்துங்கலங்கிப்போகும-பொருமுமெத்தசலமகோதரத்தின்போக்கே. (௫௯௰)

## மாமிசமகோதரம்.

போக்கானமாமிசந்தான் வளர்ந்துமீறிப்-பொருமியேஅடிவயிற்றிகல்லைப்போலத், தாக்கானசடந்தானுமுலர்ந்துவற்றித்- தவிக்குமேயடிக்கடிதான்கண்ணீர்தேடி, வாக்கானமதுரமொழி குளறிப்பேசி-வாய்வுத்தானடிக்கடிக்குமேலேநோக்கும், நீக்கானமலசலத்தில்மாம்சங்காணும்-நேரானமாம்சமகோதரத்தினேரே, (௫௯௧)

## சாத்தியம்.

தேரானசாத்தியத்தைச்சொல்லக்கேளாய்- நேர்ப்பானவாதமகோதரமும்பித்தம், வாரானவழுவையொடுகுழுவைநீராமை-மகத்தானஊருமைவெப்புப்பாவை, மேவானமேற்கவிசை சூலமகோதரமும்-விஷமகோதரம்வல்லைப்பாண்டுவாகும, தூரானசோபைமகோதரங்காமலை- தூடிஉதரமகோதரமாங்கூர்மந்தானே. (௫௯௨)

## அசாத்தியம்.

கூர்மமொடுபதினறுஞ் சாத்தியமாகும்-குணமிலலாவசாத்தியத்தியத்தைக்கூறக்கேளாய் நிர்மமொடுசிலேட்டுமாம்வாதசிலேட்பம்- சிறியபித்தசிலேட்பம் சாத்தமாகும், கார்மமொடுகல்லுமகோதரங்குல்மூட்டி-க

டியவில்மகோதரங்கிழ்க்கவிசையாகும், பார்பக்கக்கவிசையொடு பழுக்குவிசையாகும்-பாரமாம்பெருவயிறுதுன்மந்தானே (௫௯௩)

குன்மமோடுசமகோதரப்பிலிகையும்- கொடியசலமைகோதரந்தான்மாம்சமாகும்- பன்மமொடுபதினறுமசாத்யமாகும்- பாடினதோர்மூப்பத்திரண்டுமாச்சு, வன்மமொடுவடமொழியினூல்சோதித்து-மகேசுரன்தான்சொன்னபடி உமையாள்கேட்டு, தன்மமொடுசகலருந்தானறியவென்று-சாற்றினேன்யூகியென்றமுனியான்றனே. (௫௯௪)

மகோதரரோகநிதாநம்-முற்றிற்று.

## விஷபாகரோகநிதாநம்.

தானுமேவிஷபாகமெட்டதாகும்- சமரசமாய்ப்பேரைத்தான்சாற்றக்கேளாய்,வானுமேவாகவிஷபாகமோடு- மார்க்கமாம்பித்தவிஷபாகமாகும், தேனுமேசேட்பவிஷபாகமோடு- திரிதோஷவிஷபாகஞ்சேர்ந்துநின்ற, ஏனுமேஅக்கிவிஷபாகமாகும்-அடங்காதஎரிவுவிஷபாகந்தானும்,கானுமேகத்தவிஷபாகஞ்சன்னி-கடியவிஷபாகந்தானெட்டுமாச்சே.()

ஆச்சென்றமீன்முள்ளுநெல்விவாலு- அரந்தலாலாகாயத்தேற்றநீர்தான், போச்சென்றகாடியால்புணர்ச்சிதன்னால்-புழுக்களால்பூர்வத்திற்சமைபதார்த்தம், தீச்சென்றகருகலாற்செம்பினூறல் - சேர்ந்தத்திற்சமைத்தவன்னங்கறிபொசித்தல்,வாச்சென்றஅழுகலாய்வெதும்லானமாமிசங்கள்புசித்தலால்மருவுந்தானே. (௫௯௬)

மருவவேநல்மடந்தைகர்ப்பழித்தல்வழக்கோரம்வஞ்சனைகள்வாதுதர்க்கம், தருவவேஉடன்படிக்கைதப்பினோர்கள் தந்தைதாய்குருவின்மொழிதனைமறந்தோர், அருவவேஅன்னமிடையூறுசெய்தோர்-ஆஸ்தானந்தன்னிற்போயாண்மைசொன்னோர், பருவவேபலபேருக்குபகாரத்தைப்-பறிக்கின்றோர்விஷபாகம்படுபாடாமே. (௫௯௭)

### வாதவிஷபாகம்.

படுகுமேஒருபக்கம்விங்கிவற்றும் பக்கமாமேநியெங்கும்வாண்டுகாணும், கடுகுமேகண்தூங்குஞ்சடம்வெளுக்கும் கன்த்துமேதலைதானுந்துயர்மிகுக்கும், மிடுகுமேமிகவிக்கும்பொசிக்கொட்டாது-மேநியுமோமிடுக்கெல்லாந்தளர்ச்சியாகும், விடுகுமேமூத்திரச்சலம்வற்றும்மேனிகண்ணும்வாதவிஷபாகமாமே- (௫௯௮)

### பித்தவிஷபாகம்

பாகமயுடம்பெங்குந்தினவுண்டாகும் - பாரமாந்தாபமொடுகாமுமுண்டாம, வேகமாயுடம்பெங்கும் வெடிப்புமாகும்- வெடிநெருப்புப்பட்டாற்போற்பொரியும்பாரு ஊகமாயுடம்புவலிசவக்கேடாகும்-உ ஜ தி

த்திரைவாராமல்மேல்மூச்சாகும், காகமாய்மயிலுறக்கங்கடியசித்தம்-கடு
ம்பித்தவிஷபாகங்களைக்குத்தானே. (௫௯௯)

## சிலேட்பவிஷபாகர்.

தானுமேதேகமெங்குந்தினவுண்டாகிச் - சற்றிருமலாய்க்காயமிக
வெளுக்கும்,கோனுமேகோழையொடுமூச்சுமாகும்கொடியநாபச்சாமா
ய்க்குளிருண்டாகும். வேனுமேமிகவீங்கிவெடிப்புண்டாகும்-மேனியெ
ல்லாம்வெவ்வனல்போலழன்றுகாணும், தேனுமேபோலவேசிறுநீராகு
ம்சேட்பவிஷபாகமென்றேசெப்பினாே. (௬௱)

## திரிதோஷவிஷபாகம்

செப்பவேசத்தியொடுமூர்ச்சைதாகம்- சிறுநீர்தானடிக்கடிக்குமே
ற்சுவாசம், வெப்பவேவிக்கல்நித்திரைமயக்கம்-வீக்கமொடுமேல்வெளு
ப்புமேனிகண்ணல், அப்பவேஅருசியொடுஅதிசாரங்கான்- அடிக்கடிக்
குப்பிரமைபோலவுண்டாதல், திப்பவேவாய்நீருமிகவேவூறல் - திரி
தோஷவிஷபாகஞ்செப்பினேடீ. (௬௱௧)

## அக்கினிவிஷபாகம்.

ஓமென்றவாதபித்தங்கள்மிஞ்சல் உறுதியாங்கோழையொடுசத்தி
மூர்ச்சை, வேமென்றவாய்தனிலேநீர்தான்விழ்தல் - வீக்கமாய்க்கிடை
கொடாதேபிரட்டல், வாமென்றஉடம்புவற்றிவயிறுவூதல்- மலசலமு
ஞ்சிக்கிசிக்கிசிவந்துவிழ்தல், பாமென்றபக்கத்தில்வலியுண்டாதல்-பாச
மாமக்நிவிஷபாகந்தானே. (௬௱௨)

## எரிவுவிஷபாகம்.

பாசமாய்க்குறித்தவிடமிரத்தம்விழ்தல்-பழுப்பானகோழையொடு
சுவாசங்காணல், மாசமாய்மார்புகுறுக்கிட்டடைத்தல்-மகாவிரணங்கண்
டுமேமாம்சந்தோற்றுட்-கோரமாய்ச்சடதிலேகுற்றனுண்டாம் குணக்
கேடாங்குன்மபோற்குடல்பிரட்டும், ஆரமாயதிசாரயவிக்கமாகும்-அ
ழலுமேயெரிவுவிஷபாகந்தானே (௬௱௩)

## கத்தவிஷபாகம்.

எரிவுண்டாய்ச்சுரமோடுமயக்கஞ்சோம்பல்- எழிலுடப்புதான்கன
த்தல்மூர்ச்சையாதல், தரிவுண்டாய்த்தலைவலியுஞ்செட்டுமந்தான்- தாக
மேமிகுதியுமாய்ப்பலமாம்வார்த்தை, தெரிவுண்டாய்த்தேகத்திற்குளிரு
ண்டாதல்சிதமாய்மயிறுவிட்டுக்கடுப்புகாணல், சரிவுண்டாய்ச்சவம்போ
லொற்றமாகும்-தனித்ததோர்கத்தவிஷபாகந்தானே. (௬௱௪)

## சன்னிவிஷபாகம்.

கத்தமாய்ச்சேறுபோல்வயிறுபோகும்- கனவிரணங்கனில்சக்கமிக
வேகாணும் சுத்தமாய்ச்சுவாசமெமிகவாயர்க்க குட்டிவெந்தகொள்ளெ
ளுவேமேனிநாறும், அத்தமாய்த்தழுகவிக்கல்காணும் - அதிகமாமவியர்

வைபொடுஅசதியாகும், பித்தமாய்மயக்கமொடுபிதற்றலாகும் - பெருகு சன்னிவிஷபாகம்பேசலாமே. (கூாரு)

சாத்தியம்அசாத்யம்.

பேசவேசாத்தியமாம்விஷபாகந்தான் - பேரானவாதபித்தசேட்பமாகும், ஏசவேயெரிவுவிஷபாகத்தோடு - இதுநாலுஞ்சாத்தியமாமசாத்தியந்தான், தேசவேதிரிதோஷசன்னிவாதம்-திகழுற்றவிஷபாகமக்தினும், நாசவேநாலுந்தானசாத்யமாகும் - நாதாக்கள்சொன்னபடிநாட்டினேமே (கூாசு)

விஷபாகரோககிதானம்-முற்றிற்று

---

## கிராணிரோகநிதானம்

நாட்டவேகிராணிதானிருபத்தைந்தாய்நலமாகுமுற்பத்திபெயரைக்கேளாய், வாட்டவேவாதமாம்பித்தகிராணி - வகையானசேட்பமொடுதொந்தக்கிராணி, ஊட்டவேஊஷ்ணவாயுக்கிராணியோடு-உயர்கின்றஅற்றுருவாயுவுக்கிராணி, மூட்டவே மூலவாய்வுக்கிராணிமுதிர்குன்மக்கிராணிகெர்ப்பக்கிராணியாமே (கூாஎ)

ஆமெட்டுக்கிராணியொடு சங்கிரகக்கிராணி-அசதியாம்வாதாதிசாரமாகும், போப்பித்தவதிசாரஞ் சேட்பாதிசாரம் புணர்ச்சியாம்திரிதோஷவதிசாரந்தான், தாமேசுராதிசாரம்சன்னிபாதிசாரம் - தாக்கானதோஷாதிசாரமாகும், வேமேவியத்தூமமசிரணத்தூமம் விற்பட்டமோடுபிரதசேடந்தானே. (கூாஅ)

தானென்றவாதமாம்விகூழிபாகும் - தனிப்பித்தவிகூழியொடுசேட்பமாகும், ஏனென்றபேதியதுஇருபத்தைந்து எழிலானஉற்பத்திஇயம்பக்கேளாய், மானென்றவயிற்றின்மந்தமிருக்கும்போது-மாப்பண்டமதுராங்கள்மங்கைகோஷ்டி, ஊனென்றமாமிசங்கள்வேசர்ப்பண்டம்-உண்டதாற்கிராணிவந்துற்பவிக்குங்கண்டாய். (கூாகூ)

கண்டாயோநார்செய்தபாவத்தாலும்-கடூரமாஞ்சிவனடியார்தங்கள்வேள்வி, திண்டாயோசிவனேடுசுப்பிரமண்ணியர்- தேவியொடுமால்சாத்தன்சிங்கவாகி, விண்டாயோஇவர்பூசைவிடுத்தலாலும் மித்துருவாம்பந்துஜனஉறவின்பேரை, பண்டாயோபசிக்கவைத்துப்பொசிக்கையாலும்-பருகுமேகிராணியென்றபாழாநோயே. (கூாய)

வாதக்கிராணி.

நோவாகும்நடுவயிறுஉப்பசமாகும்-நட்பமாம்பசியெடுக்குமுடம்புலர்த்தும், தீவாகுஞ்சிதமாய்வயிறுபோகும் சிதறுமேமலந்தானும்வாய்வு நன்றால், காவாகுங்கட்டியாய்வயிற்றிற்காணும்- காற்றுமேமிகக்கழியுங்க

றுப்புமாகும், பாவாகுப்பழவெல்லம்போலேவீழும்- படுவாதக்கிராணி யிடப்பண்பிதாமே. (சூ௱௰௧)

### பித்தக்கிராணி.

பண்பாகநடுவயிறுநோக்காடாகும்-பவிநாளுவிதமாகவயிறுபோகும், மண்பாகவயிற்கழியுமுறக்கமுண்டாம்-மாசற்றநரம்பெல்லாந்தளர்ந்துதொங்கும், உண்பாகவூனெல்லாங்கழிந்துபோகும் உள்கொடுக்குமருந்தழியுமுணர்ச்சிகேடாம், பெண்பாகப்பெண்தலைவிட்டேந்துபோகும் பித்தத்தின்கிராணியெனப்பேசலாமே. (சூ௱௰௨)

### சேட்பகிராணி.

பேசியேயழல்போலநாற்றமாகும்-பெருகவேவெளுப்பாகமலந்தான்போகும், காசியேகைகாலுந்தளர்ச்சிகேடாம்- கள்ளமாய்க்காய்ச்சல்வருங்கண்சிவக்கும், நாசியேநாவோடுவாட்சிகாணும்- நயந்துமேபாளையக்குடல்போல்வீழும், ஆசியேயறிவில்லாநசதியாகும்- அதட்டியேயவிக்கல்வருஞ்சேட்பந்தானே. (சூ௱௰௩)

### தொந்தகிராணி.

வருகுமேதாபமுடன்காச்சல்தானும் மகத்தானவேலைபோல்வயிறிரைச்சல், தருகுமேதலைவலியுங்குளிர்நடுக்கல்- தனிப்பால்போல்மிகக்கழியுமடிக்கடிக்கு, பருக்குமேபகழியெனப்பாயும்வாய்வு பரிதாபமுழலையொடெரிவுமாகும், கருகுமேகால்கையும்புறங்கால்வீங்கும்-கசிதொந்தக்கிராணியெனக்கண்டுகொள்ளே- (சூ௱௰௪)

### உஷ்ணவாயுக்கிராணி.

கண்டுகொள்ளுமலந்தனையேயிறுக்கிக்கொண்டு- கனமாகவயிறிரைந்துஉப்பசமதாகும், பண்டுகொண்ட அசனந்தான்செரித்திடாது- பாங்கானபுளித்தேக்கும்வாய்நீரூறும், விண்டுகொண்டகால்கையுமசதியாகும்-மேனியுமோமிகக்கருகிமெலிவுமாகும், உண்டுகொண்டநாள்மூன்றிற்பேதியாகும்-உணருஷ்ணவாயுவென்றேயுரைக்கலாமே. (சூ௱௰௫)

### அர்த்தசாவாய்வுக்கிராணி.

உரைக்கவேபத்தியந்தான்கொண்டபோது-உறுதியாய்மலந்தள்ளிப்புளித்தேக்கிட்டுத்,தரைக்கவேசத்தியொடு அருசியாகும்-தாகமுண்டாய்த்தானிருக்குந்தளர்ச்சியாகும், விரைக்கவேவிலாப்பக்கம்பிசிவமாகும் மேனியெல்லாம்வெளுப்பாகும்விக்கலுண்டாம், அரைக்கவேயசனந்தான்செரித்திடாது-அர்த்தராவாயுவிடவாண்மைதானே. (சூ௱௰௬)

### மூலவாய்வுக்கிராணி.

ஆண்மையாய்வாய்வுதனில்மிகப்பிரண்டும் - அடிவயிற்றைப்பிரமியேமலம்வாண்டு, தாண்மையாய்சடயவற்றியந்திப்புண்டாய்ச் சத்தமா

ய்ந்தனியாத இளைச்சலாகும், சேண்மையாயடித்துளையிற்குற்றனுண் டாம்-செட்டியாஞ்சரீரமதுகிழமுமாகும். மூண்மையாங்குதந்தன்னின் முளைப்போல்தோணு மூலவாயுக்கிராணியெனமொழியலாமே (௯௱௰௭)

குன்மக்கிராணி.

மொழியவேசலைதானுங்கனத்திருக்கும்- மொழிவுறக்கமுண்டாகு ம்பிளேசாருப, அழியவேவயிறெல்லாமுலாவிக்குற்றும்- சமாசமாய்த்தா ன்வியர்க்குந்தலைநடுக்கும், உழியவேஉடம்பெரிப்புமுழலையாகும்-உப் பியேவயிறநுவுமிறைஞ்சிப்போகும், வழியவேவயிற்றிலொருபுறத்தி ற்றுனும்-வளைச்சுமொகைநபோடுகுன்மக்கிராணியாமே. (௯௱௰௮)

கெர்ப்பக்கிராணி

வளைச்சுமேவயிற்கழியுங்கடுப்புமுண்டாம்- வாடியேகால்கையும்வெ ச்சென்றுகும், களைச்சுமேகண்தானுமஞ்சளாகும்-கழியுமேபலவிதமாய் க்கடினதாகம், உளைச்சுமேகெர்ப்பந்தானுயருங்காலம்- உறுவன்னம்வாந் தியாயுழலையாகும், முளைச்சுமேகெர்ப்பந்தான்கீழேவீழில்முடுகாதுகெ ர்ப்பமாங்கிராணிதானே. (௯௱௰௯)

ஓட்டுக்கிராணி.

தானனபடுக்கையேஇதமாய்க்காணும்- வலிப்புமேயிளைப்பாகத்தா னிருக்கும், வானனவயிறுவலிமெத்தவாகும்மார்போடுவிலாமுதுகுவ லியுண்டாகும், ஒனைதட்டிடையாய்வயிறுபோகும்-ஒருமித்துப்போ காமல்மனமுஞ்சிக்கும், தோனனதொப்புள்தனில்வளையம்போலச்- சுட் டிடவேசுருக்கமாமொட்டுக்கிராணி. (௯௨௰)

சங்கிரகக்கிராணி.

சுருக்கமாயுதரமதுபொருமலாகிச்-சோறுசெரியாக்ழிச்சல்பானச் சூடாய், குருக்கமாய்க்குதந்தனிலேநனைத்தலாகிக் - குருவியர்வைச்சுர மோடுஅனலாய்க்காணும்,மருக்கமாய்வாந்தியாய்மனமறுக்கும் மார்பிலே கோழைகட்டுமயக்கமாகும், சருக்கமாய்க்கண்கள்ரொண்டுங்கழற்சியாகு ம்-சங்கிரகக்கிராணியென்றேசாற்றலாமே. (௯௨௧)

வாதாதிசாரம்.

சாற்றவேவயிறுதனைப்பொருமிநொந்து தனிச்சூலைபோலவேவா ய்வுதோன்றும், ஆற்றவேநீரிறங்காஅசனந்தானும்-அரைவாகிசீரணமா ய்ப்பேதியாகும், மாற்றவேமஞ்சளித்துக்கருக்கும்பேதி-மகத்தானதுர் க்கந்தம்வெளுப்புமாகும், நீற்றவேநெஞ்சுதனிற்புளித்தேக்காகும்- நே ரானவாதாதிசாரமாமே. (௯௨௨)

பித்தாதிசாரம்.

ஆமென்றமலந்தானுமஞ்சளித்து-அதிகமாய்வரண்டுமே நுரைதா ன்பாயும், வாமென்றவாய்வதுதான் மிகவுண்டாகும் - வற்றியேஉடம்

பெங்குங்கால்கைவீங்கும், காமென்றகலங்காச்சல்போலக்காயும்- கருதி யேஉடம்பெங்கும்வெண்மையாகும் தாமென்றதலைவலித்துவாந்தியாகு ம்சமாசமாம்பித்தாதிசாரமாமே. (சூ௨௩)

## சேட்பாதிசாரம்.

சாரமாய்நாற்றந்தான்மிகவுண்டாகித் - தவளம்போலேவெளுத்து நுரையுமாகி, வாரமாய்வயிர்வலித்துப்பேதியாகும்- மாமிசந்தான்சத்து சத்தாய்விடுக்கும்,ஆரமாயருசியொடுஇருமல்சுவாசம் அழுந்திமயிர்க்கூச் செறிந்தாசனங்கடுத்தல், தீரமாய்த்தேகமெங்குந்தினவுண்டாகும் - சே ட்பாதிசாரமென்றேசெப்பலாமே. (சூ௨௪)

## திரிதோஷஅதிசாரம்.

செப்பவேஉள்ளெரிவாய்ப்புறங்குளிர்ச்சி செழுமைவிக்கல்வாந்தி யோடிருமல்சுவாசம், துப்பவேவயிறிரைந்துபொருமலாகிச்சுருட்டியே வயிறதுவும்வலித்துக்காணும், இப்பவேஇரத்தசீதக்கழிச்சல் - எழிலா ணநித்திரையுமுடல்நடுக்கும், உப்பவேஉடற்குற்று உணச்சிஇன்மை- உறுகுதிரிதோஷஅதிசாரமாமே. (சூ௨௫)

## சுராதிசாரம்.

அதிசாரமூர்ச்சைசயொடுபிரலாபங்கான் அடித்துடையுமசந்துமிகக் கடுப்புண்டாகும், கதிசாரக்காச்சலொடுசத்திதாகம்-கடுப்புண்டாஞ்சரீர மெங்குங்காந்தலாகும், ஒதிசாரஞ்சிறுநீர்தன்னொடுகழிச்சல் - ஊஷ்ண மாய்ஓயாதஇருமலாகும், துதிசாரம்பலவர்ன்னமாகும்பேதி சூட்சமாஞ் சுராதியெனும்அதிசாரமாமே. (சூ௨௬)

## சன்னிபாதாதிசாரம்.

சுரமாகிஉடம்பெல்லாமிகவேகாயும்- சுவாசமாயிருமலொடுவிக்கலா கும், அரமாகிநாவரண்டுஅழற்சியாகி- அதிசாரமாய்க்கழிந்துஆலோபிக் கும், மரமாகிஉடம்பெல்லாந்திமிருண்டாகும் - வயிறுவலிஅடிக்கடிக்கு மயக்கமாகும்; உரமாகிஉடம்பெங்குங்குளுமையாகும்-உறுதிசன்னிவா தாதிசாரமாமே. (சூ௨௭)

## தோஷாதிசாரம்.

உறுகின்றநீருந்திவழிதான்புக்கில்- உண்ணீர்தாரைப்புபுரைதனில் இழிந்து அறுகின்றவந்நரம்பைஅழுகப்பண்ணி- அபானவாய்வொடுகூ டிமலப்பைக்குள்ளே, புறுகின்றதான்விருத்துமூலாக்கினிக்கீழ்-பொரு ந்தியதோசனத்தைச்செரிக்கொட்டாது, மறுகின்றவயிற்றிரைந்து க ழிச்சலாகும்-மகாநாற்றமுண்டாங்தோஷாதிசாரம். (சூ௨௮)

## விதூமஅசீரணம்.

உண்டதோரன்னமெல்லாம்வாந்தியாகும்- உறுதியாயமுகலாய்ப்பு ளித்தேக்காகும், வண்டதோர்வயிறுப்பும்பேதியாகும்-மகத்தானஇரை ச்சலொடுபுளிப்புப்பேதி, முண்டதோர்முகஞ்சுருக்குமுடலம்வாடும்மு

திர்மயக்காம்புத்தியதுமுன்பின்றேணு, விண்டதோர்மிகவாதைகிடைப் பிரட்டும்-மிகத்தண்ணீர்தவிப்பெய்தும்விதூமஅசீரணமாமே. (சூ உகூ)

தூமஅசீரணம்.

எய்தியதோர்பதார்த்தமதுவேதுந்தக்கா-தெடுக்குமேயடிக்கடிக்கு வாந்திதானும், பெய்தியதோர்புளித்தேக்காம்வாயெரிக்கும்- போனவு தடோடுபிரட்டும்நாக்கு, கைதியதோர்கால்கையுமுடலெரிக்கும்-கண்ட த்தில்வியர்வையுமாய்க்காயம்வற்றும், சைதியதோர்வலிபோற்றளர்ச்சி யாகும்-சயித்தியமாந்தூமமென்றஅசீரணந்தானே. (சூ௩௰)

விற்பட்டஅசீரணம்.

சயித்தியமாம்மிகவுழற்றுங்கோழையாகும் - சடமெங்கும்வெண் மையாய்க்கண்ணுந்தாழும், பயித்தியமாம்வாந்தியதுவெளுப்புமாகும்- பசிக்குமேயடிக்கடிக்குநுரையாம்பேதிஉயித்தியமாயிருமலுடன்சுவாச ந்தோணும்-உறுகின்றதுயரமாய்த்தலைபிரட்டும், வயித்தியந்தான்செய் தாலும்வசப்படாமல்-மறுக்குமேவிற்பட்டவசீரணந்தானே. (சூ௩௧)

மிர்தசேடஅசீரணம்.

மறுக்குமேமனமறுத்துவாந்தியாகும் மயக்கமாய்மூர்ச்சையாய்வச க்கேடாகும், கறுக்குமேநாக்கோடுகண்கள்மூக்கு காயந்தானுலர்ந்துமே கறுத்துப்போகும், வெறுக்குமேயன்னத்தைத்தண்ணீர்தேடும்- வெளு ப்போடுகறுப்பாமப்பேதியாகும், உறுக்குமேகண்கள்தனையுருட்டிப்பா ர்க்கும் உதறுமேமிர்தசேடவசீரணந்தானே. (சூ௩௨)

சூழிவாதவிசூழி.

தானனவிசூழியதுபிராதக்காலம் - தனிலுதித்துவாதநாடியுமிக்கா கும், வானனவயிறிரைந்துஊதிக்கொள்ளும்-மாசிலாமேனியதுகறுப்பு மாகும், கானனகண்விழிதான்றிறந்தேநிற்கும் - கருத்தெல்லாங்கலக்கி யேகாச்சலாகும், கோனனகுடல்குமுறிப்பிரட்டலாகும் - கொடும்வாத விசூழியிடகுணமதாமே. (சூ௩௩)

பித்தவிசூழி.

குணமாகப்பகற்போதுகுதிகொண்டோங்கிக்கோபித்துப்பித்தநா டியுமேமீறி, நிணமானநேருந்தன்னுடலமுத்தும்- நேரானமூர்ச்சைவிக் கல்நிறங்குன்றுது, வணமானவாய்பிதற்றிவாந்தியாகி- மயங்கியேகிடை கொடாதபிரட்டும், பிணமானதுபோலப்பிலாபிக்கும்-பித்தமாம்விசூ ழியென்றேபேசலாமே. (சூ௩௪)

சேட்பவிசூழி.

பேசவேநாடியதுஅடங்கிக்காணும் - பிறிந்திடுமேகங்குல்தனிவி ண்டாஞ்சாமம், நாசவேஉயிரதுவும்நாபிக்குள்ளாம் - நடைகொடாதபிர ட்டுங்கொதுக்கைவாங்கும், மேசவேகண்விழிமேலாகித்தாழும்- மிடை

படாபேதிதண்ணீர்மோர்போற்சாய்க்கும், தேசவேதேகமெங்குமிகவெ ளுக்கும்-சேட்டுமமாம்விருழியென்றேசெப்புவீரே. (௯௩௫)

செப்பவேகிராணிதானிருபத்தைந்தின்- செய்தியெலாந்தெளிவாக த்திறந்திட்டேன்யான், ஒப்பவேசதாசிவன்றான்சொல்லக்கேட்டு-உகப் பானநாதாக்களுமைகள்கேட்டு, தப்பிலாதன்வந்திரிசொல்லக்கேட்டுத்- தாயானபராபரையாள்சொல்லக்கேட்டு, உப்பவேயூகியென்ற முனியாம் யானே-உலகத்தோர்தாம்பிழைக்கஉரைசெய்தேனே. (௯௩௬)

சாத்தியம்.

செய்திட்டசாத்தியத்தைசெப்பக்கேளாய்-சீரானவாதமொடுபித்த க்கிராணி, உய்திட்டஊஷ்ணவாய்வுக்கிராணியோடு- உயர்ந்தவற்றருவா ய்வுமூலக்கிராணி, செய்திட்டகெர்ப்பமாங்கிராணியோடு-செடிவொட்டு க்கிராணிபித்தாதிசாரம், வெய்திட்டசுராதிசாரத்திஞேடு-விதூமமொடு தாமசிரணமுஞ்சாத்யம், (௯௩௭)

அசாத்தியம்.

அசாத்தியமாங்கிராணியையறியக்கேளாய் - அயமாம்சக்கிராணி யொடுதோந்தக்கிராணி, தாத்தியமாஞ்சுங்கிரசக்கிராணியோடு- தனித்த வாதாதிசேட்பாதிசாரம், அசாத்தியமாந்திரிதோஷம்சன்னிபாதிசாரம் தோஷாதிசாரம்விற்பட்டவசிரணம், மிசாத்யமாமிர்தசேடவாதபித்தவி ருழிமெலிசேட்பவிருழியுமேஅசாத்தியந்தானே (௯௩௮)

கிராணிரோகநிதானம்-முற்றிற்று

---

## மூலரோகநிதானம்

தானனமூலமதுஇருபத்தொன்றும்- சதாசிவன்றான்பராபரியாட்க ருளிச்செய்ய பானுனபராபரியாள்நந்திதேவர்க்குப்- பாஷிக்கநந்திதன் வந்திரிக்குச்சொல்ல, கோனுனதன்வந்திரிஅசுவினிக்குச்சொல்லக் -குண மானஅசுவினியும் அகஸ்தியருக்குச்சொல்ல ஆனுனஅகஸ்தியருப்புலஸ் தியர்க்குச்சொல்ல அவர்தானேதேரையருக்கருள்செய்தாரே. (௫௩௯)

அருள்செய்தார்புலஸ்தியர்தான்தேரையர்க்கு- ஆண்மையாந்தேரை யமாமுனிவன்றானும், பொருள்செய்தார்யூகி முனியாமெனக்குப்-போக் கெல்லாம் வகைவகையாய்ப்பிரித்துச்சேர்த்து, கெருள்செய்தஉலகத் தோர்பிழைக்கவென்று- சிவமானசித்தர்களைத்தொழுதுகேட்டு நருள் செய்தகவிபாமற்பிழைக்கவென்று - நாட்டினேனுயூருவேகத்தைத்தா னே. (௯௪0)

தத்தையாமதிகமாங்குளிசினாலும் தரியாதவழற்சியாற் கிரந்தியாலும், புத்தையாம்பொருந்ாதலஷ்ணத்தாலும்-புணர்ச்சியாய்க்கோபத்தாற்சலிப்பினாலும், கத்தையாம்வெகுகாமமவேண்டலாலும்- கடினமாமுப்பாலுங்காரத்தாலும், மொத்தையாம் வெகுதனங்கள்போனதாலும் மூலம்வந்துற்பத்திமுளையுந்தானே. (௬௪௧)

மூளையாகமூக்தோஷாவைதலாலும் - மோசங்கள்பண்ணியேகற்பழித்தும்,நினையாகநினைவிலொன்றுவாக்கிலொன்றும்-நோக்தபடிசொல்கின்றவிட்டோர்க்கும், பனையாகப்பாதேசிபந்துவானோர் - பசித்திருக்கவுண்டதோர்பாதகர்க்கும், தனையாகச்சமாதானந்தவிர்க்கின்றோர்க்கும் - சண்டாளமூலம்வந்துசனிக்குந்தானே. (௬௪௨)

மூலப்பெயர்கள்.

சனிப்பானமூலத்தின்பெயரோதென்னில் சமாசமாம்நீர்மூலஞ்செண்டுமூலம், முனிப்பானமுளைமூலஞ்சிற்றுமூலம்- மூர்க்கமாம்வரண்மூலம்ரத்தமூலம், தினிப்பானசீமூலமாழிமூலம்- திணியானதமரகமாமூலத்தோடு வனிப்பானவாதமொடுபித்தமூலம்-வகையானசேட்டுமத்தின்மூலமாமே. (௬௪௩)

வகையாகுங்தொந்தமாமூலத்தோடு-வளர்கின்றவினைமூலம்மேகமூலம், பகையாகும்பவுத்திரமாமூலத்தோடு- படர்கிரந்திமூலமொடுகுதையாமூலம், புகையாகும்புறமூலஞ்சுருக்குமூலம்பொருகின்றசவ்வாகுமூலத்தோடு, வனிப்பானவாதமொடுபித்தமூலம்- வகையானசேட்டுமத்தின்மூலமாமே. (௬௪௪)

நீர்மூலம்.

கருபங்கேள்தொப்புளிலேமிகவலித்துச் - சுருண்டுமேகீழ்வயிற்றைப்பொருமிக்கொண்டு, வருபங்கேள்மலம்வரண்டுவாய்நீரூறும்-வாய்வுதான்பரிகையிலேநுரைபோற்காணும், அருபங்கேள்பிடவைதனிற்றோய்வுமாகும்-சுருக்ககமலம்வருகல்போலிருக்கும், நிருபங்கேளடிக்குநீராய்ப்போகும்-நிலையானநீர்மூலம்நினைவாய்ப்பாரே (௬௪௫)

செண்டுமூலம்

நினைவாகக்கருணையிடமுளையேபோல- நீமிந்தெழுந்துநாள்மூன்றுநிற்பமாகி, கனவாகக்கன்றியேமிகவலிக்கும்-காரந்தானபோட்டவுடன்களையாய்வீழும், இனவாகஇரத்தமொடுதண்ணீர்காணும்- இறுகியேமலந்தீயுமிரைச்சலாகும், தினவாகவாசனத்தைச்சுருக்கிக்கொள்ளும்-செய செண்டுமூலத்தின்றிறமைதானே. (௬௪௬)

முளைமூலம்

திறமாகவாசனத்திற்கடுப்புமுண்டாய்- திரட்சியாய்த்தடித்தெரிவுசெயலுங்காணும், அறமாகவடிவயிறுகல்லுபோலாம- ஆசனந்தனைப்பற்றி

சுருங்கித்தினதமுண்டாம், குறமாகக்குதிகொள்ளத்தப்பிரிறங்கும்- கூசாதஇளைச்சல்மிகவேப்பமுண்டாம், மறமாகமஞ்சள்முளைபோலெழும் புழமலந்தியுமுளைமூலவண்மைதானே. (௬௪௭)

சிற்றுமூலம்

வண்மையாயுடம்பெரியும்மயக்கமாகும் வயிறுதான்பளபளென்னும்வலுவாய்க்குற்றும், இன்மையாய்க்குறுகுமென்றேஇளைச்சலாகும்இசிவுடனேபொருமலாயினைப்புமாகும, திண்மையாய்ச்சித்துமுளை பலவுண்டாகும்-தேகமெங்கும்வெளுப்பாகுஞ்செயலுங்காணும், வெண்மையாய்வெளுத்துமேபசியிராது- மேனிகண்ணுஞ்சிற்றுமுளைமிடுக்குந்தானே

(௬௪௮)

வரண்மூலம்

மிடுக்காகமலத்தையேயிறுக்கிக்கொள்ளும்-மிகுவாகரத்தமதுதுளியாய்விழும், அடுக்காகச்சடமுலர்தியழல்கழிக்கும்- ஆண்மைதான்மிகப்பேசிச்சண்டைகொள்ளு, உடுக்காகவுள்ளிருக்குமுளைகள்தானும் ஒருவருக்குந்தெரியாதுஒடுக்கிவைக்கும், கிடுக்காககாள்தனிலேபெலன்குறைக்கும்செயலழிக்கும்வரண்மூலச்சேதிதானே. (௬௪௯)

இரத்தமூலம்.

சேதியாய்த்தொப்புள்தனில்வலித்துநொந்து- சிறுகநீர்போற்பீரிட்டுரத்தம்வீழும், மேதியாய்மேனிவற்றிவெளுத்துப்போகும்-மிகக்கைகாலசந்துமேசோபையாகும், மாதியாய்மார்பிளக்குந்தலைநோவுண்டாம் மயக்கந்தான்மிகுதியாய்த்தள்ளிப்போடும், நாதியர்க்கண்ணிரண்டுமஞ்சள்போலாம் நலியுமரத்தமூலத்தினண்புதானே. (௬௫௰)

சீமூலம்.

நண்பாகக்குதங்கடுத்தெரிப்புதோன்றும்-நாற்றியே சீயோடுதண்ணீர்காணும், மண்பாகமாமிசங்கள்கரைந்துக்கொண்டு- வடிவமெல்லாம் வெளுத்துமேமஞ்சளாகும், மென்பாகமேவும்வாய்நீரதாகும்- மிடுக்காநடைகுறையுமெலிவுமாகும், திண்பாகச்சிறுநீர்தான்மஞ்சளிக்கும் சீமூலந்தன்னுடையசேதியாமே. (௬௫௧)

ஆழிமூலம்.

சேதியாய்நீண்டவள்ளிகிழங்குபோலத்- திமிர்ந்துமேயேகமுளையாகக்காணும், நீதியாய்நீரோடுஞ்சீயுமிரத்தம்- நிரணிறையாய்த்தோன்றியேமலமுஞ்சிக்கும், காதியாய்க்காலக்கள்வற்றிடாது கழியபலவினமாந்தேகந்தானு, ஆதியாம்அசத்தமீனையொறுத்துக்கொல்லும்- ஆழிமூலத்தினிடஆளமைதானே. (௬௫௨)

### தமரகமூலம்.

மூலபவமாம்னத்திலுலக்கைகப்பூண்போல் - முதிர்ந்ததாமரைப்பூப் போலலர்ந்திருக்கும், நூலமாம்நொறுக்காகமலமுங்காணும்- நுனுக்கேறி யிரத்தமொடுதினவுமுண்டாம், வாலமாய்வயிரிரைந்துநோய்ப்போகும்- வயிறூதிப்பசியில்லாமந்தங்காணும், தாலமாமேல்மூச்சாய் அசதியுண் டாம்-தமரகமாமூலத்தின்றண்மைதானே. (கூடுக)

### வாதமூலம்.

தண்மைகோவைப்பழம்போற்குகஞ்சிவப்புக்- தனிலடப்பம்பூப் போலமுளைவளர்ந்து, கண்மைகறுப்பாய்மிருதுவாயிருக்கும்- கடுப்போ டுதினவுகுற்றல்திமிர்த்தலாகும், வண்மைமயிர்தான்முளைத்துமலஞ்சிக் கென்று, மகத்தாகக்கறுத்துமெத்ததிரண்டுகாணும்- வெண்மைவயிற்வி ட்டுமேகுடலுள்வலியாகும்-மிக்கதலைவலிவாதமூலமாமே. (கூடுச)

### பித்தமூலம்.

தலைவலிதான்மிகவுண்டாம்பருத்திக்கொட்டை- தன்போலுநெற் போலுமுளையுண்டாகும், மலைவலியாய்மலஞ்சிக்கிஉருண்டுருண்டு மாவு ண்டைத்திரித்திரியாய்ரத்தஞ்சீயாய், குலவலியாய்க்குதங்கடுத்துஎரிவு மாகிக்-கூச்சமாய்தாகமொடுவியர்வையாகும், தலைவலியாயத்துயக்கமு மாய்க்கோபமாகும்சொற்பலவீனமும்பித்தமூலமாமே (கூடுரு)

### சிலேட்பமூலம்

ஈனமாங்குதத்தில்முளைவெள்ளையாகும் - எந்நோந்தினவதிகமெரி வுமாகும், கானமாங்கடுப்புடனேசீயுந்தண்ணீர் - கனமானவலியாகிமலந் தானேனுங்கும், தூனமாமூத்திரந்தான்சூடுண்டாகும்- சொர்குணபேதக மாகுந்தாதுநஷ்டம், பானமாம்பாண்டுவொடுஅருசியாகும்-பாவுசேட்டு மமூலப்பாங்குந்தானே. (கூடுசு)

### தொந்தமூலம்.

பாங்கானகுகமிறுகிக்கோழிச்சூடு- பதித்ததுபோற்றுனிநக்குங்ந டக்கவொட்டா, வாங்கானவயிறுமெத்தப்பொருமலாகும்- வருத்தமொ டுவியர்த்துமேமிகநடுக்கும், தாங்கானதவித்துமேதாகமாகும்- தரியாமல் வயிறதுவும்பேதியாகும், தீங்கானசெடமட்டைபோற்சுருக்கும்திடுக்கு மேதொந்தமென்றமூலந்தானே. (கூடுஎ)

### வினைமூலம்.

திடுக்கிட்டுச்சோறுசெரியாமையாகும்- தீபனந்தானில்லாமற்பிளி த்தேக்காகும், அடுக்கிட்டஅடிவயிற்றிற்குற்றலுண்டாம் ஆங்காரக்கோ பமொடுமலமுங்கட்டும், கடுக்கிட்டகைகாலுமோச்சலாகும் -கனமாகவ

யிறிரைந்துகாந்தலுண்டாம், வெடுக்கிட்டுநரம்பெல்லாமிசிவுமாகும்-மிக
க்கடுக்கும்வினைமூலவிபாந்தானே (௬௫௮)

## மேகமூலம்.

வினையாகலிங்கத்தில்வெள்ளையூற்றும்-மெத்தவாய்க்குதந்தன்னினு
திரஞ்சாய்க்கும், சனையாகச்சத்தமதாய்க்கழிச்சலாகும் தாக்கானசிறுநீரு
மெரிச்சலாகும், பனையாகப்பருக்குங்கால்தனைவலிக்கும் - மாரமாயுடம
பெங்குந்திமிருண்டாகும், முனையாகமூத்திரந்தான்மதூரமாகும்-மூர்க்க
யாமேகமென்றேமூலந்தானே. (௬௫௯)

## பவுத்திரமூலம்.

மூர்க்கமாய்ப்பவுத்திரத்திற்கட்டியாகி-மூத்திரந்தானடிக்கடிக்குஅ
ருவலாகும், கார்த்தமாங்கால்கையுங்கனப்புமாகும்- கனகனக்குங்குதங்
குய்யஞ்சாவற்கூடு, பூர்க்கமாம்பூப்போலமுளைகள்காணும்-பொருங்கோ
வைப்பழம்போலச்சிவப்புமாகும், பார்க்கமாங்காரந்தான்போடத்தீரும்
பவுத்திரமாமூலத்தின்பண்புதானே. ௬௬௰)

## கிரந்திமூலம்.

பண்புதான்லிங்கத்திற்புண்ணுமாகும் பாரமாய்க்கால்கையுங்கடுப்
புமுண்டாம், குண்பாதக்குதத்துக்குள்விரணமாகிக்-கொடிக்கொடியாய்
முளையுண்டாய்ச்சீயும்ரத்தம், தண்புதான்தண்ணீரும்பெருகவுண்டாம்-
தணல்போலஎரிவோடுகடுப்புமாகும், கெண்புதான்கெட்டியாய்மலம்வர
ண்டு-கீற்றாகவெடித்திரங்குங்கிரந்திமூலம். (௬௬௧)

## குதமூலம்.

இறங்குமேமூங்கிலிடக்குருத்துபோல- இழுத்துமேதள்ளிடிலோ
வுள்ளேபோகும், பிறங்குமேசீயோடுரத்தம்பாயும்பெருகியேவயிறுமெ
த்தக்கனத்துக்கொள்ளும், அறங்குமேகால்கையுமதப்புமாகும்-அடிக்க
டிக்குநாவரண்டுதண்ணீர்தேடும், குறங்குமேமிகவலிக்குங்கோபமுண்
டாம்கொடியகுதமூலத்தின்குணமதாமே. (௬௬௨)

## புறமூலம்.

குணமதாயெண்ணெய்போற்றண்ணீர்போலும்கூற்றானகடுப்போ
டுசீயுமுண்டாம், திணமதாய்த்தினவெடுக்குந்திமிர்ப்புண்டாகும்-சிறுசி
ரங்காய்மேலெல்லாஞ்சொறியுமாகும், பணமதாயாசனத்திற்பகுப்புபோ
லப்- பாங்காகவிதனமாய்ப்படுக்கைகூடா, பிணமதாய்முகமெல்லாம்வா
ட்டமுண்டாம்-போனபுறமூலப்புதுமைதானே. (௬௬௩)

## சுருக்குமூலம்.

புதுமையாயாசனத்தைச்சுருக்கிக்கொண்டு- பொருங்குடலில்வலி
யோடுபொருமலாகும், கதுமையாய்க்குதந்தன்னிற்றடிப்புண்டாகும்-க

றனுமேதண்ணீரும்ரத்தந்தானும், வெதுமையாய்வெவ்வனல்போலழன் றுகானும்-வேற்றுடம்பாய்த்தான்வெளுத்துவெறிப்புண்டாகும், பது மைபோல்தேகமெங்குமசவுகூடாப்பண்பானசுருக்கென்றமூலந்தானே

சவ்வுமூலம்.

சுருக்கியேமுதுகுதண்டிலுற்பவித்துந் - தொப்புளிலேதாமரைப் பூப்போல்மலர்ந்து, அருக்கியேகுற்றிலாகாரமாக்கி- அடிவயிற்றிலோங் குமேமூலரோகம், சொருக்கியேசவ்வுபோலாசனத்தில்-சுற்றியேநின்று தான்சியுந்தண்ணீர், பருக்கியேகசிவாகுமெங்நேரந்தான்பண்பானசவ்வா துமூலந்தானே. (௬௰௫)

சாத்தியம்.

தானென்றமூலத்திலசாத்தியந்தான் சாதகமாய்நீர்மூலமுளைமூலந் தான், வானென்வோண்மூலம்ரத்தமூலம்- வாதமாமூலந்தான்பித்தமூல ம், வேனென்றமேகமாமூலத்தோடு-விளைபவுத்ரமூலமாங்கிரந்திமூலம், பேனென்றபுறமூலஞ்சுருக்குமூலம்பெருகுசவ்வுமூலமதுமசாத்யமாமே

அசாத்தியம்.

ஆமென்றவசாத்தியத்தைச்சொல்லக்கேளாய்- அழிவுசெண்டுமூல மாஞ்சிற்றுமூலம், தேமென்றசிமூலமாழிமூலம்- திணிவானதமரகமாமூ லத்தோடு, வேமென்றவினைமூலஞ்சேட்பமூலம்- மிளிர்கின்றகுதைமூ லந்தொந்தமூலம், ஓமென்றவொன்பதுமசாத்தியந்தான்- உறுதியாய்மூலத் தினுண்மைதானே. (௬௰௭)

உண்மையாமூலத்தினுறுதிதன்னை-உகந்துமேசிவனுமையாட்குப தேசிக்கத், தண்மையாய்உமைநந்திதனக்குச்சொல்லத்- தயாநிதியாம்நந் திதன்வந்திரிக்குச்சொல்ல, விண்மையாய்த்தன்வந்திரிஅசுவநிக்குச்சொ ல்ல விசுவநியுமசுவநிக்குவிபாங்கூற, அண்மையாயசுவிநிஅகஸ்தியர்க்கு அருள்செய்யவகஸ்தியருமடக்கினுரோ. (௬௰௮)

அடக்கியேபுலஸ்தியருக்கருக்ககிக்க-அன்புடனேபுலஸ்தியருந்தே ரையமாமுநிக்கு, மடக்கியேபோதிக்கத்தேரையமாமுனியும் மகத்தான யூகியாம்எனக்குரைக்க,உடக்கியேஉள்ளபடிமுழுதுமாய்ந்து உபகாரமா கவேஉலகத்தோர்க்கு, வடக்கியேவடமொழியினுரையைத்தேர்ந்து-மகத்தானகவிதைசெய்தேன்தமிழிற்றுனே. (௬௰௯)

மூலரோகநிதாநம்-முற்றிற்று

உ

# க்ஷயரோகநிதானம்.

தானனைக்ஷயமதுதான்பனிரொண்டாகும்-தாக்கானபிர்மமென்று க்ஷயந்தானென்று, வானனராஜக்ஷயம்வைசியக்ஷயந்தான்-மருவுசூத்திரக்ஷயந்தான்வாதக்ஷயமாகும், பூனனபித்தக்ஷயம்சேட்பத்தோடு-பிரண்டதோர்வாதபித்தக்ஷயமுமாகும், கானனவாதசேட்டுமக்ஷயந்தான்-கரும்பித்தசேட்டுமத்தின்க்ஷயமுமாமே. (சூ ௭௰)

ஆகின்றவிகாரக்ஷயந்தொந்தக்ஷயந்தான்- அடங்கலுமேபனிரண்டுவிதமுமாகும், வேகின்றகஞ்சாவல்மிகுந்தவுப்பால் மீறியதோர்காரத்தால்மிகமயக்கால், தோகின்றமருத்திட்டாற்சுணையிநீரால்-சுசியில்லாப்பதார்த்தங்கள்சுக்கான்றண்ணீர், வாகின்றவக்கினியால்மிகுந்தவெய்யில்-வருத்தத்தில்க்ஷயரோகமருவுங்காணே. (சூ ௭௧)

காணவேகர்பழித்தல்பொய்யேசொல்லல் - களவாடல்பிறர்பொருளைக்கண்டாசித்தல், ஆனவேயடுத்தோரைக் கெடநினைத்தல்-அசதிபாதேசியனாயகந்தைசொல்லல், ஊனவேபந்துவைவஞ்சிததேயுண்ணல்-உதாசினமாஇகழ்ந்தோரைஇகழ்ச்சிபேசல், வெணவேகாதினிற்கேளாதசொல்லை-மிகச்சொன்னோர்க்ஷயத்தில்வந்துமெலிவாரே. (சூ ௭௨)

## பிர்மக்ஷயம்.

மெலிவாகிஇருமலொடுபுண்கலங்கல் - மிகத்தண்ணீர்போலவேசேட்பங்கானல், நலிவாகிக்கோழையொடுஇரத்தமுண்டாய்-நலமானஅக்கினிதான்மிகவேதாழும், கலிவாகிக்கண்ணினொடுஉதிரமாழ்கிக்- காச்சலதுஎங்நேரங்கலக்கமாகும், மலியாகியருசியொடுசத்தியாகல்-மறையவனும்க்ஷயமென்றுமதித்திடாயே. (சூ ௭௩)

## இராஜக்ஷயம்.

மதித்திட்டவெதுப்பினொடுதலைநோவுண்டாய்- மார்நெஞ்சில்நோவுண்டாய்சிலேட்பந்தோன்றும், குதித்திட்டமஞ்சள்போற்கோழைநாளும்கொடிதானமிண்றழன்றெரிந்துநோவாம், அதித்திட்டவரிகுரலாய்த்திரிகைசெய்தல்-அங்கமெல்லாமிகநொந்துஅனலாய்க்காணல், சதித்திட்டஇருமலொடுசத்தியுண்டாம்-க்ஷத்திரியக்ஷயமென்றுசாற்றலாமே.)

## வைசியக்ஷயம்

சாற்றவேவகையோடுகாலுமோய்ந்து- தாக்கானவெயில்காளிகவிஷம்போல், வேர்த்துமேவெதும்பலாய்க்காச்சல்காணும்- மிக்கானஇரும

யரு

லொடுகோழையுண்டாம்,பாத்தவேபருத்திபோலுடல்வெளுத்துப்-பரு
கியதோசசனமிகத்தானுஞ்செல்லா, ஆற்றவேயாருண்டிலதிகமாகும்-அ
றிந்துணாத்தவைசியனும்க்ஷயந்தானுமே. (கூஎரு)

